# அரசியல் கட்சிகளின் பார்வைக்குப் பட்டியல் இனத்தவரின் கோரிக்கைகள்

# 2020 - 2021

Compiled By


R.Christodas Gandhi
PAALAM
9444045215
rcg1952@gmail.com

Fr.John Kumar
SW-TN
9444469685
kumar@swtn.org

| CHAPTER | TITLE | Page No |
|---|---|---|
| 1 | கட்சிகளின் பார்வைக்கு | 1 - 10 |
| 2 | திரு. ஸ்டாலின் அவர்களுக்குக் கடிதம் | 11 - 17 |
| 3 | விடுதலைச் சிறுத்தைக் கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது எப்படி ? | 18 - 36 |
| 4 | விடுதலைச் சிறுத்தைக் கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகள். | 37 - 73 |
| 5 | பள்ளர் / பட்டியல் இன அரசியல் | 74 - 82 |
| 6 | 2010 க்குப் பிறகு, தமிழ்நாட்டில் பட்டியல் இனம் அடைந்த மாற்றங்கள். | 83 - 87 |
| 7 | ஏன் அணி திரள வேண்டும் ? | 88 - 91 |
| 8 | நீதிக்கான தலித் கூட்டமைப்பு<br>(Dalit Collective for Justice - DCJ) | 92 - 97 |

## Chapter I

கட்சிகளின் பார்வைக்கு

வரும் 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை ஒட்டி, கட்சிகளுக்காகப் பட்டியல் இனத்தவர் வைக்கும் கோரிக்கைகள். இவற்றைத் தேர்தல் அறிக்கையில் சேர்க்கவும், தேர்தலுக்குப் பின்னர் ஆளுங் கட்சியாகவோ, எதிர்க்கட்சியாகவோ இருந்து இவற்றை நிறைவேற்றித் தரவும் வேண்டுகிறோம்.

1. "கல்வி" என்ற பொருண்மையை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும் இதற்காகத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்ற வேண்டும். குறைந்தது 10 மாநிலங்களின் துணையோடு மைய அரசுக்கு இந்த அழுத்தம் தரப்பட வேண்டும்.
2. துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, ரேசன் கடை ஆகியவற்றைப் பஞ்சாயத்துகள் பொருப்பெடுத்து நடத்தும் வகையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.
3. உயர்/மேல்நிலைப்பள்ளிகளைப் பஞ்சாயத்து ஒன்றியங்கள் நடத்த வேண்டும்.
4. GST- வரி வசூல் மாநில அதிகாரிகளால் செய்யப்பட்டு, மைய அரசுக்குத் தரப்பட வேண்டும் பங்கீட்டை, மாநில அரசு பிரித்து வழங்கும் வகையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். சுவிட்சர்லாந்து நாட்டில் வரி வசூல் முறை இப்படித்தான் நடக்கிறது.
5. பள்ளர் - மறவர், பறையர் - வன்னியர், அருந்ததியர் - கவுண்டர் சமூகங்களிடையே கூடி வாழும் பண்பாட்டை வளர்ப்பதற்காக 100 இடங்களில் 50 : 50 விகிதத்தில் நூறு நூறு வீடுகளைக் கொண்ட குடியிருப்புகளை உருவாக்க வேண்டும். அடுத்தடுத்த வீடுகள் அடுத்தடுத்த சமுதாயமாக அமைய வேண்டும்.
6. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தை அதன் இப்போதைய நோக்கங்கள் சிதையாமல் நடைமுறைப்படுத்த வேண்டும். மைய அரசுப் பங்களிப்பு வந்தாலும் வராவிடிலும் இத்திட்டத்திற்கான மொத்தச் செலவையும் மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும் ஆண்டுக்கு ரூ.2,000/- கோடி.
7. தத்தமது கட்சிகளின் ஒன்றியச் செயலர்/தலைவர், மாவட்டச் செயலர் /தலைவர் ஆகிய பதவிகளில், அந்தந்த மாவட்டப் பட்டியல் இன விகிதத்திற்கு ஏற்பப் பட்டியல் இனத்தவர்க்கு வாய்ப்புகள் அளிக்க வேண்டும்.
8. ஒரு கோடி ரூபாய் தொழில்/வணிக முதலீட்டில் 1000 பட்டியல் இனத்தவருக்கு ஆண்டாண்டு கடன் வசதி அளிக்கும் திட்டம் கொண்டுவரப்பட வேண்டும். வங்கிகள் பயனாளிகளை முடிவுசெய்யும். பயனாளிகள் தேர்வை அரசு முடிவு செய்யலாகாது. அந்தந்த வங்கிகளே அவரவரது நடைமுறைப்படி கடன் ஒப்புதல் வழங்கும் கடன்

தொகையில் 30% -த்தை அரசு நேரடியாக வங்கிகளுக்குத் திட்டம் செயல்படுத்தப்பட. செயல்படுத்தப்பட மூன்று தவணைகளில் விடுவிக்கலாம். ஆண்டுக்கு ரூ.300/- கோடி.

9. பட்டியல் இனத்திற்கான வரையறை அவர்கள் "சாதியை ஏற்காத இனங்கள்" (Class of People who have not accepted caste) என்பதற்காக திருத்தப் பட வேண்டும். Scheduled Caste என்ற பெயரும் **'Equitable Class'** (சமன்பாட்டு வகுப்பு) என்று மாற்றப்பட வேண்டும். இதற்கான தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் இயற்றி மைய அரசுக்கு அனுப்ப வேண்டும்.
10. பட்டியல் இனத்தவர்க்கு உள் ஒதுக்கீடு வழங்க மாநில அரசுகளுக்கு உரிமை உண்டு. தமிழ்நாட்டுப் பட்டியல் மக்கள் தொகையில் 95% பறையர், பள்ளர். அருந்ததியர் ஆகிய மூன்று பேரினங்கள் மட்டுமே வருகின்றன. ஆகவே இம்மூன்று இனத்தொகுப்புகளுக்கும் அவரவரது மக்கள் தொகைக்கு ஏற்ப மொத்தப் பங்கீட்டைப் பிரித்து வழங்கலாம். 76 பட்டியல் இனத்தவரில் மீந்துள்ள இனத்தவரை ஒரு தொகுப்பாக்கி மொத்தம் நான்கு கூறுகளாகப் பிரித்து வழங்கலாம்.
11. பட்டியல் இனப் பங்கீடு 2011 மக்கள் கணக்கெடுப்பின்படி 20.1% ஆக உயர்த்தப்பட வேண்டும்.
12. பழங்குடித் துறையில் உள்ள பணியிடங்கள் பழங்குடிகளுக்கு மட்டும் வழங்கப்பட வேண்டும். தவிர வனக்காப்பாளர், வனவர், வனச்சரகர் வரை அனைத்து வனத்துறைப் பதவிகளும் பழங்குடியினர்க்கே வழங்கப்பட வேண்டும்.
13. பழங்குடித் துறை இயக்குநர் பதவியில் இனி IFS அதிகாரிகளை அமர்த்தக் கூடாது. பழங்குடித்துறைப் பணிகளைத் தனி அலகாக்கி இயக்குநர் பதவி, TRC இயக்குநர் பதவி ஆகியவற்றில் பழங்குடியினரையே அமர்த்த வேண்டும்.
14. மாற்றுத் திறனாளிகள் துறையில் மாற்றுத் திறனாளிகளையே இயக்குநர், அரசுச் செயலர் பதவிகளில் அமர்த்த வேண்டும்.
15. பட்டியல் இனத்தவர் நடத்தும் எந்த வகையான கல்வி நிறுவனமாக இருந்தாலும் (துவக்கப்பள்ளி முதல் தொழிற் கல்வி நிறுவனங்கள் வரை) அந்நிறுவனங்களுக்கு அரசு உதவிபெறும் நிறுவனங்களுக்கு வழங்குவது போன்று நிதி உதவி வழங்க வேண்டும். சுயநிதி நிறுவனங்களாக நடத்துவோர்க்கு 50% நிதி உதவி வழங்கலாம். அவர்களது மாணவர் சேர்க்கையில் 30% எந்தக் கட்டணமும் இன்றி மாணவர்கள் சேர்க்கப்படலாம்.

16. பஞ்சாயத்துகளில் உள்ள துப்புறவுப் பணியாளர்களுக்கு மாதம் ரூ.20,000/- ஊதியம் வழங்க வேண்டும். 13,000 பஞ்சாயத்து x 4 பணியாளர் x ரூ 20,000 x 12 மாதம் = ரூ.1248 கோடி.

17. ஆதிதிராவிடர் நலத்துறை என்ற பெயரை சமன்துறை (Equitable Department) என்று மாற்றம் செய்ய வேண்டும்.

1. பொறி மு.ஊர்காவலன்,ME. (Rtd),S.E, PWD,தலைவர் தேவேந்திரர் சமூக பாதுகாப்பு கூட்டமைப்பு. விருதுநகர்.
2. வை.முருகன் தேவதாஸ், பொதுச் செயலாளர், தியாகி இமானுவேல் பேரவை, தென்காசி.
3. மணிவண்ணன், மாநில துணைத்தலைவர், பகுஜன் சமாஜ் கட்சி.
4. Dr.ராம்நாத், திருநெல்வேலி.
5. மா.பரதன், மனித உரிமை களம், திருநெல்வேலி. மா. பரதன் 9443117665
6. ஆ.ரமேஷ் பாபு, வழக்குரைஞர், திருநெல்வேலி.
7. முருகன், திருநெல்வேலி.
8. ராஜீ, சிவகங்கை.
9. ராமர், தூத்துக்குடி.
10. வள்ளிநாயகம், சென்னை.
11. இளஞ்செழியன், வழக்குரைஞர், தலைவர் உலகத் தழிழ்க்கழகம்.
12. சுப்புக்காளை, அம்மாபட்டி பள்ளர் தேவேந்திரர் உறவின் முறை, சிவகாசி.
13. ரமேஷ்,SM,(Rtd) அலகாபாத் வங்கி, மதுரை.
14. நவநீத சிவகுமார், தலைவர், CAI, கோயம்புத்தூர்.
15. ராஜா, தலைவர், கோயம்புத்தூர் பள்ளர் கல்வி பொருளாதார முன்னேற்ற இயக்கம்.
16. மனோகரன்,ராஜபாளையம்.
17. சந்திரமோகன், ஈரோடு பள்ளர் பேரவை.
18. சுரேஷ்குமார், தலைவர், சவுண்டப்பூர் ஊராட்சி, ஈரோடு.
19. சித்தீஸ்வரன், திருப்பூர்.
20. நடேசன், நாமக்கல் பள்ளர் இயக்கம்.
21. ராமர், அலகாபாத் வங்கி, (ஓய்வு).
22. அய்யனார், தேனி.
23. முனிவாசகம், IRS (R)
24. சங்கர்ராஜ்,அபுதாபி.
25. இரா.கிருத்துதாசு காந்தி,IAS (ஓய்வு) 18/12/2020 9444045215
26. ஜெ. சுசில் ராஜ்குமார் வழக்கறிஞர் 9444723979

18/12/20

CHAPTER - I - A

கட்சிகளின் பார்வைக்கு - பத்தி 1,2

கல்வி

ஆரம்பத்தில் கல்வி, மாநிலப் பட்டியலில் இருந்தது. 1976 - இல் கல்வி, பொதுப் பட்டியலுக்குக் கொண்டு வரப் பட்டது. (Emergency Period). பொதுப் பட்டியலில் இருந்தாலும், 1980களில் இருந்து மையஅரசு கல்வியைத் தன்னுடைய கட்டுப் பாட்டின் கீழ் பல்வேறு வகைகளில் கொண்டு வந்துவிட்டது.

பொதுப் பட்டியலில் கல்வி இருந்தாலும், நிர்வாகக் கட்டுப்பாடுகள் மையஅரசிடம் சிறுகச் சிறுகச் சென்றுவிட்டன. CBSE, NCERT, UGC, AICTE, NCTE, MCI, NEET, JEE, KENDRIYA VIDHYALAYA, NAVODAYA, CENTRAL UNIVERSITIES, புதிய கல்விக் கொள்கை போன்றவை யாவும் மாநில அரசுகளின் உரிமையை உருவிவிட்டன. மைய நிர்வாகத்தின் கீழ் மாநிலங்களை அடிபணிய வைக்கின்றன.

பொதுப் பட்டியலில் இருக்கும் ஒரு பொருண்மையின் மீது மையஅரசு தன்னிச்சையானச் சட்டங்கள் இயற்றலாகாது. மாநிலங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுப்பாட்டு நிறுவனங்களை உருவாக்கலாகாது, AICTU போன்றவை. மிஞ்சி, மிஞ்சிப் போனால் மைய அரசு, தனது முதலீட்டில் கல்வி நிறுவனங்களைத் தொடங்கலாம். ஆனால் மாநிலங்களில் தொடங்கப்படும் கல்வி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் உரிமை அரசிடம் இருப்பது, சர்வாதிகாரப் போக்கிற்கு வழிவகுக்கிறது.

உலகில் வேறெங்கும் மையஅரசுகள் நேரடியாகக் கல்வி நிறுவனங்களை நடத்துவதில்லை. எந்தவகையான பள்ளிக் கூடங்களையும் மையஅரசு நேரடியாக நடத்தக் கூடாது. மைய அரசின் நிதி மேலாண்மையும், நிர்வாகப் பங்கேற்பும், நீக்கப் படவேண்டும். மையஅரசிடம் அதிகாரம் போவது என்பது இந்திய நாட்டின் பன்முகத் தன்மைக்குப் பெரும் கேடு விளைவிக்கிறது.

எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும், மையஅரசின் கல்விக் கோட்பாடுகள் சமத்துவம், ஒப்புரவு (Equity) ஆகியவற்றை மையமாகக்கொண்டவைஅல்ல. அவை, மேதைமை (Meritocracy) (Excellence) என்ற பெயரில் சமுதாயப் பாகுபாட்டை, வளர்ப்பனவாக உள்ளன.

**“ஓர்மை”என்றபெயரில் இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் மற்றும் சனாதனப் போங்குகளைத் திணிப்பதாகவேஉள்ளன.**

இந்திய நாட்டில் இதுவரை கல்வியைப் பரவலாக்குவதற்கும், கல்வியைப் பெருக்குவதற்கும், கல்வி நிறுவன வளர்ச்சியைக் கொண்டு வருவதற்கும், மாநில அரசுகள் அளித்த பங்களிப்புதான் 90 % க்கும் மேல் இருக்கும்.

கட்சிகளின் பார்வைக்கு - பத்தி 3

பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் தரப்பட வேண்டுவது ஏன் ?

அரசியல் சாசனப்படி, மூன்றடுக்கு ஆட்சிமுறை நடைபெற வேண்டும்.

1. மையஅரசு.
2. மாநிலஅரசு.
3. உள்ளாட்சிஅரசு.

மூன்று ஆட்சிகளும் தனி அதிகாரமும், நிதியும் பெற்ற ஆட்சிமுறைகளாக இயங்க வேண்டும். ஒரு அடுக்கு இன்னொரு அடுக்குக்கு, ஒடுங்கிய ஆட்சிமுறை அல்ல. இது தான் கூட்டாட்சித் தத்துவம். மைய, மாநில அரசுகள் பல வகைகளில் சுதந்திரமான சுயாட்சி கொண்டவையாக இயங்கி வருகின்றன. ஆனால், மொட்டையாக விடப்பட்டுள்ளது, பஞ்சாயத்து ஆட்சிமுறை மட்டுமே.

ஆட்சி அதிகாரம் பெற்றவர்களிடம், நேரடியாக மக்கள் தொடர்பு கொள்ளக் கூடிய ஆட்சிமுறை, பஞ்சாயத்து ஆட்சிமுறை மட்டும் தான். மையஅரசின் பிரதமரையோ, அமைச்சர்களையோ அல்லது மைய அரசின் அதிகாரிகளையோ மக்கள் சந்திக்கும் வாய்ப்பு அறவே இல்லை, எனலாம். மாநில முதலமைச்சரையோ, அமைச்சர்களையோ, மாநில அதிகாரிகளையோ மக்கள் காண்பது அரிது எனலாம். ஆனால் பஞ்சாயத்துத் தலைவர்களை, மக்கள் நேருக்கு நேர் பார்க்க மட்டுமல்ல. எதிர் கொள்ளவும் முடியும்.

பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்களையோ சாதாரண ஒரு கிராம நிர்வாக அலுவலரையோ, மக்கள் எதிர் கேள்வி கேட்டுச் சரிசெய்வது என்பது நடவாத காரியம். அப்படி நடக்கும் சூழலில் ஆளும் அதிகாரம் உக்கிரமாக, மக்களைச் சாடும். ஆனால் பிசகும் பஞ்சாயத்துத் தலைவர்களை, மக்கள் எதிர்கொள்ளும் போது ஆளும் அரசுகள் மக்களுக்குத் துணைவரும்.

மக்களாட்சியில் உருவாக்கப் பட்ட மத்திய, மாநில அடுக்குகள் லஞ்ச லாவண்யங்களில் ஊறிப் போய் விட்டன. இந்த மட்டங்கில் லஞ்சக் குற்றம் புரிவோரைத் தடுப்பதற்கான அதிகாரம் வேறு யாரிடமும் இல்லை. லஞ்சப் பரிமாணங்களும் பூதாகரமாக வளர்ந்துள்ளன. இதை எதிர்க்க முடியாமலும் தவிர்க்க முடியாமலும் மக்கள் பெரும் துன்பக் கடலில் மூழ்கி வருகின்றனர். அதிகாரம் மையமாகும் போது, லஞ்சங்களின் பரிமாணங்கள் பருத்துப் போகின்றன. சாதாரண சத்துணவுப் பணியாளர் பணியிடத்திற்குக் கூட, லட்சம் ரூபாய் விலையாக விதிக்கப் படுகின்றது.

CHAPTER - I - B

கட்சிகளின் பார்வைக்கு - பத்தி 4

## GST

நாட்டினுடைய "வரிவசூல்" அரசுகளுக்குச் சென்று, மைய, மாநில அரசுகள் மூலமாக, மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பயன்பட வேண்டும். ஆனால் இந்திய மைய அரசு, வரிவசூல் இயந்திரத்தை அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுத்துகிறது.

கட்சிகளின் வருவாய்க்கு, வரிவசூல் இயந்திரங்கள் மூலமாகக் "கட்டப் பஞ்சாயத்துகள்" செய்கிறது. மூன்றாவதாக, மாநில அரசுகளுக்குச் செல்ல வேண்டிய பங்கை, மைய அரசு தன் பிடிக்குள் வைத்துக் கொள்கிறது. பல தருணங்களில் மாநிலங்களுக்கு வரவேண்டிய தொகை வராமலேயே போகிறது.

எப்படி **IAS**, **IPS** அதிகாரிகள் மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றனரோ, அதேபோன்று வரிவசூல் செய்யும் IRS அதிகாரிகளும், அந்தந்த மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும்.

அந்தந்த மாநிலங்களால் வசூலிக்கப்படும் தொகைகள், அந்தந்த மாநிலக் கணக்குகளிலேயே வரவு வைக்க வேண்டும். மைய அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையை, மாநில அரசுகள் பகிர்ந்து தரும்.

"வசூல் செய்யும் பொறுப்பு", மைய அரசிடம் இருக்கும் போது, மாநில அரசுகளுக்குத் தரவேண்டிய பங்கை, மைய அரசு தர மறுத்தால், மாநில அரசுகளால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் பொறுப்பு மாநிலங்களிடம் இருக்கும் போது, மைய அரசுப் பங்கை மாநில அரசுகள் தர மறுத்தால், மாநில அரசைக் கலைக்கும் அதிகாரம் கூட மைய அரசிடம் உண்டு. உச்சக்கட்டமாக, "இராணுவத்தை" அனுப்பிக் கூடப் பணிய வைக்க முடியும்.

## POST MATRIC SCHOLARSHIP

- Last fortnight, the GOIannounced thenew sharing pattern of 60:40 (GOI: State) in releasing funds under PMS. This changes nearly aneight-decade old practice of committed liability pattern.
- We believe thatGOI will give 60 % of theexpenditure for 2020 -2021. Even if it is made operational from 2021 -2022 Thamizhnadu stands to save its budget enormously.
- As per the old pattern Thamizhnadu has to bear 100% of the expenditures since 2018-2019, grossing upto Rs.1700 Cr p.a.
- Since there has been a sharp decline in the enrolment in BE since 2018-2019 the total PMS expenditure has been falling from the 2017 -2018 water mark.
- This would have meant no incremental expenditure since 2017-2018 and therefore no contribution from GOI under the old pattern.
- This would have been the feature till 2022-2023 had the old pattern of sharing continued.
- With the dawn of the new 60:40 sharingpattern, Thamizhnadu will gain nearly Rs.1000 Cr annually from the GOI from 2020-2021 or 2021- 2022.
- Thamizhnadu has been dragging its feet in releasing full complement of PMS to self-finance coursessince 2017-2018.
- Now that the GOI reimbursement is coming in a big way, Thamizhnadu should now release all the arrears and continue to provide Category 2 admission fee as fixed bythe fee fixation committee (i.e. Rs.85,000 p.a. for BE; Rs.10 lakhs for MBBSetc.).
- We request thegovernment to release the PMS for 2020-2021 and the leftoverof PMSfor thepast 3 years without further delay.

## PMSforArts&Science

- The burden on Thamizhnadu exchequer will fall from Rs.1700 Cr to hardly Rs.700 Cr annuallyon account of PMS.
- Thamizhnadu has not beenreleasing full fee level for Arts & Science courses in Self - financing stream.
- It is time now to shed other state scholarship schemes for Arts & Science courses and adopt PMS singularly and fully.
- The scholarship structure designed in 2012 in GO – 92 has not yet been modified.
- Unfortunately, the fee fixation committee for Arts& Sciencecourses has not yet made its recommendations.
- Till the fixation committee determines the fees for arts & science courses in self – financing streams PMS can be admitted on the following scale taking into account the prevailing fee levels. (see enclosures)
- The government should also release Book Grants that have not been provided since 2003.

R. Christodas Gandhi IAS (Rtd)

rcg1952@gmail.com

9444045215

**CHAPTER - I**

கட்சிகளின் பார்வைக்கு - பத்தி 7

கட்சிக் கட்டமைப்பில் பங்கு

இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து, கடந்த 70 ஆண்டுகளாக இந்தியாவிலுள்ள தேசியக் கட்சிகளோ அல்லது மாநிலக் கட்சிகளோ தமது கட்சி உள் கட்டமைப்பிலுள்ள பதவிகளில், பட்டியல் இனத்தவருக்கு உரிய பங்களிப்பை, இதுவரை வழங்கவில்லை.

பாராளுமன்ற / சட்டமன்ற / பஞ்சாயத்துப் பதவிகளில் அரசியல் சாசனத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளதால், ஒரு கட்டாயத்தின் அடிப்படையில் மட்டும் தனித் தொகுதிகளில், பட்டியல் இனத்தவரை நிறுத்துவது, வழக்கமாக இருக்கிறது. கம்யூனிஸ்டு, காங்கிரஸ் போன்ற தேசியக் கட்சிளும், தி.மு.க, அ.தி.மு.க போன்ற மாநிலக் கட்சிகளும், ஊன்றி வளர்வதற்கும், பட்டியல் இனத்தவர்கள் பெரும் பங்களிப்பை அளித்துள்ளார்கள் என்பது வரலாற்று உண்மை.

**ஆனால், கட்சிப் பொறுப்புகளைப் பட்டியல் இனத்தவருக்கு, வழங்குவதில் எந்தக் கட்சியும் இதுவரை, தமது கவனத்தைச் செலுத்தவில்லை. மாவட்டத் தலைவர், செயலர் பதவிகள் மற்றும் ஒன்றியத் தலைவர், செயலர் போன்ற கட்சிப் பதவிகள் தாம் ஆளுமை கொண்ட பதவிகள்.**

ஆனால், இந்தப் பதவிகளைத் தவிர துணைச் செயலாளர் பதவிகள், அணித் தலைவர்கள் போன்ற உப்பு, சப்பில்லாதப் பதவிகளை மட்டும் பட்டியல் இனத்தவருக்குக் கட்சிகள் வழங்குகின்றன. மாவட்ட ஒன்றியப் பதவிகளில், உரிய பங்களிப்பை வழங்கும் வரை, எந்தக் கட்சியும் பட்டியல் இனத்தவருக்கு, ஆதரவான கட்சிகள் என்று கோரிக் கொள்ள முடியாது.

CHAPTER - I - D

கட்சிகளின் பார்வைக்கு - பத்தி 8

## தொழில், வணிகத்தில் பங்கு

இதுவரை மைய அரசிலும் சரி, தமிழ்நாடு மாநில அரசிலும் சரி, தொழில் தொடங்குவதற்காக, எந்தத் தொடர் திட்டங்களையும் அரசுகள் நடத்தவில்லை. அவ்வப்போது சிறு, சிறு முயற்சியாகச் சில திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவற்றோடு நின்று விட்டன. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், 1960 மற்றும் 1970 களில் பல தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பட்டியல் இனத்தவருக்காக உருவாக்கப்பட்டன (நிலக் குடியேற்ற சங்கங்கள் கைத்தறிச் சங்கங்கள் தோல் உற்பத்தியாளர் சங்கங்கள் செங்கல் உற்பத்தியாளர் சங்கங்கள் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் போன்றவற்றைச் சொல்லலாம்).

**1991 இல் பின்னலாடைத் தொழில், இறால் பண்ணைஅமைத்தல், பட்டுப் புழு வளர்ச்சி ஆகிய மூன்று பெருந் திட்டங்கள் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப் பட்டன. இறால் பண்ணைகளும், பட்டுப் புழு வளர்ப்பும் ஆரம்பிக்கப்படவே இல்லை. ஆனால் பல 100 ஏக்கர் நிலங்கள், ஆதி திராவிடர் நலத் துறையாலும் தாட்கோவாலும் வாங்கப் பட்டன. அந்நிலங்கள் என்ன ஆயின? என்ற விவரம் தெரியக் கூட இல்லை. பின்னலாடைத் தொழிலுக்காகத் திருப்பூர் முதலிப்பாளையத்தில் 100 தொழிற்கூடங்களை நிறுவவும், ஈரோடு ஈங்கூரில் 200 தொழிற்கூடங்கள் அமைக்கவும், சற்றொப்ப ரூ.50 கோடிகள் செலவிடப் பட்டன.**

ஈங்கூரில் 200 தொழிற்கூடக் கட்டடங்கள் கட்டப்பட்டு, தொழிற்பேட்டை 1998 இலேயே முடிக்கப் பட்டது. கடந்த 22 ஆண்டுகளாக, அது அப்படியே முடங்கிப் போய்விட்டது. முதலிப்பாளையத்தில் மட்டும் 40 தொழில் முனைவோர் தொழில் தொடங்கினர். ஆனால் TICC இன் அநியாய வட்டிக் கடனால், அவர்கள் தழைக்க முடியவில்லை. NSFDC மற்றும் தாட்கோ தவிர்த்த வேறு தொழிற் திட்டங்கள் எதுவும் வழங்கப் படவில்லை. NSFDC தாட்கோ திட்டங்களும், காலத்திற்கேற்ப மாற்றமடையவில்லை. 50 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த படியே இருக்கின்றன. கடந்த 5 ஆண்டுகளில் ஆந்திரா, கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களில் பட்டியல் இனத்தவருக்கான, பல தொழிற் திட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாடு இந்த வகையில் 20 ஆண்டுகளர்கப் பாராமுகமாகவே, இருந்து வந்துள்ளது. என்ன திட்டங்கள் உருவாக்கலாம்? என்று கடந்த 10 ஆண்டுகளாக ஆலோசனைகள், பல குடியமைப்புகளால் வழங்கப் பட்டுள்ளன. ஆனால் ஆளுங் கட்சிகளோ, பிறகட்சிகளோ SC களுக்கான கட்சிகளோ, அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. தமிழ்நாடு பட்டியல் இனத்தவருக்காக ஒதுக்கும், சற்றொப்ப ரூ.15 ஆயிரம் கோடியில், ஒரு சல்லிக் காசும், தொழில் முதலீட்டிற்காகச் செலவிடப் படவில்லை

# Chapter II

அன்புமிகு திரு. ஸ்டாலின் அவர்களுக்கு,

வணக்கம். வாழ்த்துகள்.

வரும் தேர்தலில் வெற்றி அணியாகத் தங்கள் தலைமையிலான அணி அறியப்படுகிறது. வெற்றிக்குப் பிறகு தங்களைக் கொண்டாடக் கூட்டம் ததும்பும். அது சமயம் தங்களிடம் மனம் விட்டுப் பகிர, எங்களுக்கு அவ்வளவு நேரம் கிட்டாது. ஆகவே வெற்றி அணித் தலைவரான தங்களிடம் இப்போதே பட்டியலினம் சார்பான எதிர்பார்ப்புகளைச் சமர்ப்பிக்கிறோம்.

I. முதற்கண் நல்லதொரு அமைச்சரவையை அமைத்து ஆட்சி அமைக்க வாழ்த்துகள். **அமைச்சரவையில் 20 % பட்டியலின அமைச்சர்களை அமர்த்த வேண்டுகிறோம்.** பட்டியல் இனம் சார்ந்த அமைச்சர்களுக்கு அமைச்சரவை வரிசையில் (Warrant of Precedence) முதல் 10 இடங்களுக்குள் வழங்க வேண்டுகிறோம். 30-க்கு மேற்பட்ட அமைச்சர்களைக் கொண்ட தமிழ்நாட்டில் இதுவரைப் பட்டியலின அமைச்சர்களுக்குக் கடைசி 5 இடங்களுக்குள் தான் வரிசை தரப்பட்டுள்ளது. இதை மாற்றி முதல் 10 க்குள் வழங்கத் தங்களை வேண்டுகிறோம்.

பட்டியல் இனத்தவர்க்கு இதுவரை வழங்கப்படாத நிதித்துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித்துறை, கூட்டுறவுத் துறை ஆகியவற்றில் பட்டியலின அமைச்சர்களை அமர்த்த வேண்டுகிறோம்.

II. தங்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ளபடி, பட்டியலின மாணவர்க்கான பேணல்படியை (maintenance allowance) குறைந்தது இரு மடங்காக உயர்த்தி வழங்க வேண்டுகிறோம். அதே வேளை போஸ்ட் மெட்ரிக்

கல்விக் கொடைத் திட்டத்தை முழுமையாக அமலாக்கி நடத்தித் தரவும் வேண்டுகிறோம். அவற்றுள் அடங்குவன:

அனைத்து வகைச் சுயநிதிக் கல்லூரியிலுள்ள அனைத்து வகைப் பாடப் பிரிவுகளுக்கும், போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை வழிகாட்டியில், உள்ள படி கட்டணக் குழு தீர்மானிக்கும், கட்டணங்களை முழுமையாக வழங்குதல், அரசு ஒதுக்கீட்டுக்கு வழங்கப்படும் கட்டணத்தை மட்டுமே, பிற ஒதுக்கீட்டுக்கு வழங்கும் நடைமுறையை அகற்ற வேண்டும்.

அ. அரசாணை 51 உம் 52 உம் திரும்பப் பெறப் பட வேண்டும்.

**ஆ. போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை வழிகாட்டியின்படித் தரப்படும் ரூ.14,400/- பேணல்படியைக் குறைந்தது ரூ.30,000/- ஆக உயர்த்த வேண்டும்.** தற்போது 60% மைய அரசு பங்கு அளிப்பதால் உயர்த்தப்படும் பேணல் படியைத் தமிழ்நாடு நிதியிலிருந்தே வழங்கலாம். சற்றொப்ப 40,000/ தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்க்கு 40,000*30,000 = ரூ.120,00,00,000/ (ரூ.120 கோடி) மட்டும் தான் கூடுதல் செலவினமாகும்.

இ. கல்லூரி ஆசிரியர்கள் இருவர், மாணவர்கள் ஐவர், கல்லூரி நிறுவனச் செயலர்கள் இருவர், இத்திட்டம் பற்றி அயராது தொண்டாற்றி வரும் அகம், சமூகக் கண்காணிப்பகம் போன்ற சமூக அமைப்புகள், அலுவல்சார் அதிகாரிகள் ஆகியோரைக் கொண்டு, ஆதிதிராவிடர் நல இயக்குநர் தலைமையில், பட்டியலின / பழங்குடியின கல்வி மேம்பாட்டுக்கான ஒரு குடி அமர்வுக் குழு காலாண்டுக்கு ஒருமுறை, கூடும் வகை செய்ய வேண்டும்.

III. பட்டியல் இனத் துணைத் திட்டத்தையும் பழங்குடித் துணைத் திட்டத்தையும் வடிவமைக்கவும், செயல்படுத்தவும், ஆதி நலத்துறைக்கு முழுச் சுதந்திரம் வழங்கப் படவேண்டும். தற்போது இவை நிதித்துறையின் கடுமையான பிடியில் உள்ளன. இத்திட்டங்களின் வடிவமைப்பைக் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்க வேண்டும்.

அ. மொத்த மாநில வரவிலிருந்து (GSDP) இல் பட்டியலினத் துணைத் திட்டத்திற்கு 2 % மும் பழங்குடித் துணைத் திட்டத்திற்கு 0.1% உம் வழங்க வேண்டும்.

ஆ. பட்டியலினத் துணைத் திட்டம் / பழங்குடித் துணைத் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் மைய அரசுத் திட்டங்கள் 50% யைத் தாண்டக் கூடாது. அதே போன்று பிரித்தறியாப் பொதுத் திட்டங்களும் 50% யைத் தாண்டலாகாது.

இ. மொத்த ஒதுக்கீட்டில் 20% புதிய திட்டங்களாக அமைய வேண்டும்.

ஈ. ஒதுக்கீடு பெறும் ஒவ்வொரு துறையும் அதனதன் ஒதுக்கீட்டில் 20% யைப் புதிய திட்டங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

உ. ஆண்டாண்டு செலவிடப் பட்ட தொகையை பட்டயக் கணக்காயர் (Account General) தரும் புள்ளி விவரங்களை வைத்து வெளியிட வேண்டும்.

IV .புதிய திட்டங்களை மக்களிடம் இருந்து கோரிப் பெற்று அதை ஆய்விட்டுப் பரிந்துரைக்கப் பட்டியலின / பழங்குடிக்கென்ற தனித் தனி அமைப்புகளை உருவாக்க வேண்டும். திட்ட உருவாக்கம் மற்றும் பரிந்துரை அமலாக்கம் ஆகியவற்றை இக்குழுக்கள் கண்காணிக்கும்.

V. பட்டியலினத்தவர்க்கு தகவல் பரவலாக்கம் மற்றும் மேம்பாட்டுச் சிந்தனைக்கென பட்டியலினத்தவரே நடத்தும் பத்து (10) மாத / கால முறை இதழ்களுக்கு ஆண்டுக்கு ஒவ்வொரு இதழுக்கும் ரூ. 10 இலட்சத்திற்குக் குறையாத தமிழக அரசின் விளம்பரங்கள் வழங்க வேண்டும்.

VI. பட்டியலினத்தவர் கல்வியாளராக, முதலீட்டாளராக / நிறுவனராக இருந்து நடத்தும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் ஆசிரியர் ஊதிய நல்கை (உதவித்தொகை = AID) வழங்கப் படவேண்டும். அதற்கு ஆண்டுக்கு உச்சமாக ஆயிரம் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கலாம். ஆண்டுக்கு ரூ. 100 கோடிக்கு மேல் செலவாகாது. இத்தகைய நிறுவனங்களில் தொடர்ந்து 30 % பட்டியலின / பழங்குடி மாணாக்கர் படிக்கிறார்கள் என்பது உறுதிபடுத்தப்படுமானால் இந்நிறுவன ஆசிரியர் / ஆசிரியரல்லாத ஊழியர் அனைவர்க்கும் அரசு முழு ஊதியத் தொகை ( AID ) வழங்கலாம்.

VII . ஒவ்வொரு மாவட்ட ஆதி திராவிடர் நல அதிகாரியும், ஆண்டிற்கு இரு முறை, தனியார் தொழில் / வணிக / உற்பத்திச் சந்தை மற்றும் ஆலோசனை (consultancy) நிறுவனங்களை அழைத்துப் பட்டியலின/ பழங்குடி மக்களுக்கென சிறப்பான வேலைவாய்ப்பு முகாம்களை நடத்த வேண்டும்.

VIII. சனவரி மூன்றாவது–நான்காவது வாரங்களில் மகாத்மா காந்தி நினைவு தினத்தையொட்டி, மாவட்டந்தோறும் மனித நேயவார விழா, ஆதிதிராவிடர் நலத் துறையால் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இதேபோன்ற மற்றொரு சிறப்பு நிகழ்வை அண்ணல் அம்பேத்கர் வடிவமைத்த அரசியல் சாசனத்தை நினைவு கூறும் வகையில், அரசியல் சாசனம் அறிமுகப் படுத்தப்பட்ட குடியரசு நாளான சனவரி 26 – ஐ ஒட்டி நடத்தலாம். இதில், பொதுவாக தமிழகத்திலுள்ள எல்லா மேல் நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும் பங்குபெறுவதை உறுதி செய்யவேண்டும். அம்பேத்கரது நூல்கள் பரிசுநூல்களாக, வழங்கப் படல் வேண்டும்.

IX. தற்போதுள்ள வழக்கப்படி, இனச்சான்று சரிபார்க்கும் மாவட்ட மற்றும் மாநிலக் கண்காணிப்புக் குழுக்களுக்கு, எல்லா மனுக்களையும் அனுப்புகிறார்கள். இதற்குப் பதிலாக யாராவது, எதிர்மனு செய்திருக்கும் இனங்கள் மட்டுமே அனுப்பப் படவேண்டும். இயல்பான சான்றிதழ் சரிபார்ப்பு என்பதற்கு, அந்தந்தச் சான்றிதழ் அளித்த அதிகாரி உறுதி செய்தல் போதுமானது.

X. 1996 - 2001 மற்றும் 2006 -2011 தி.மு.க ஆட்சிக் காலத்தில் பின்னடைவுப் பணியிடங்களை நிரப்பப் பல்வேறு உறுதிமொழிகளும், நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டன. ஆனால், உறுதியான நியமனங்கள் வெகு சிலவே மேற்கொள்ளப்பட்டன. **வரும் ஆட்சிக் காலத்தில் பின்னடைவுப் பணியிடங்களை நிரப்ப, உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுகிறோம்.**

அவையாவன:

அ. மீண்டும் பின்னடைவுப் பணியிடங்களைக் கண்டறியும் கண்துடைப்புக் குழுக்கள் தேவையில்லை. 2006 –2011 இடைப்பட்டகாலத்தில் ஆதிதிராவிடர் நல அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தந்த புள்ளிவிவர அடிப்படையில் நியமனங்களை, உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

ஆ. ஒவ்வொரு துறைச் செயலரும், அவரவரது ஆளுகைக்கு உட்பட்ட துறைகளிலும் (பொதுத் துறைகள் உட்பட) இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பின்னடைவைக் கண்டறிந்து, சிறப்பு நியமனங்களை மேற்கொள்ளும் தொடர் நடவடிக்கை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். பட்ஜெட் தயாரிப்பின் போது அனைத்துத் துறைப் பணியாளர்கள் பற்றிய புள்ளி விவரப் பட்டியல் ( number / data statement ) அளிக்கப் படுவது போல, அதே பட்டியலில் SC / ST / BC / MBC விவரங்களும் அளிக்கப் பட வேண்டும்.

XI. அனைத்துப் பட்டியல்/பழங்குடி இனப் பஞ்சாயத்துகளும், நேரடியாக எடுத்துச் செய்யும் சாலைப் பணிகளுக்காக, ஆண்டுதோறும் ரூ. 10 இலட்சம் வழங்கப் படவேண்டும். இதற்காக ஓராண்டுக்குத் தேவைப்படும் ரூ. 300 கோடியைப் பட்டியல் இனத் துணைத் திட்டத்தின் கீழ் வழங்கலாம்.

XII. ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளையும் மேலும், வலுவாக்கும் வண்ணம் அப்பள்ளிகளை நிர்வகிக்கத் தனி சுய அமைப்பு (autonomous body) ஒன்றை உருவாக்கவேண்டும். 5 உயர்நிலைப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்களைக் கொண்டே ஒரு மேலாண்மைக்குழு அமைக்கப் படவேண்டும். சுழற்சி முறையில் அந்த 5 உயர்நிலைப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்களில் ஒருவர், குழுத் தலைமை வகிப்பார். மொத்தம் 116 மேல்நிலைப் பள்ளி / 5 = 25 குழுக்கள் அமையும். மாநில அளவில் இந்த 25 குழுத் தலைவர்களைக் கொண்ட மாநில மேலாண்மைக் குழு செயல்படும். இக்குழுத் தலைவர், குழு உறுப்பினர்களால் 5 ஆண்டுக்கு ஒருமுறை, தேர்ந்தெடுக்கப் படுவார். அதேபோன்று மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களைக் கொண்ட மற்றுமொரு அமைப்பு

உருவாக்கப்படவேண்டும். ( 87 மேல்நிலைப் பள்ளிகள் / 5 = 17 அல்லது 20)

XIII. மாவட்ட ஆதி திராவிடர் நல அதிகாரிகளைப் பள்ளி / விடுதி நிறுவனப் பணிகளிலிருந்து முற்றிலுமாக விடுவிக்க வேண்டும். அவர்களுக்குச் சமூகப் பொருளாதாரம், மேம்பாடு தொடர்பான பணிகள் மட்டும் அளிக்கப் படவேண்டும்.

**மாவட்ட ஆதி திராவிடர் நல அதிகாரிகளுக்கு வழங்கப் படவேண்டிய பணிகளாகக் கீழ்க்காணும் ஆறு (6) பரிந்துரைகளை முன் வைக்கிறோம்.**

அ. பள்ளிக் கல்விக்கு மேம்பட்ட போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பற்றிய அகத் தணிக்கையைக் (Internal Audit) கல்லூரிகளில் மேற்கொளல்.

ஆ. பட்டியல் இன மக்கள், 30 % க்கு மேல் வாழும் வருவாய்க் கிராமங்களின் பட்டியலைப் பேணுதல். இவ்வூர்களின் கட்டமைப்புத் தேவைகளை ( வீட்டுக் குடிநீர் இணைப்பு, மின் இணைப்பு, சாலைகள், கழிவுநீர் அகற்றல் போன்றன.) அவ்வப்போது அரசின் பார்வைக்குக் கொண்டுவரல்.

இ. மாவட்ட அளவில் பட்டியல் இனத் துணைத்திட்டம் / பழங்குடித் துணைத் திட்டச் செலவினங்களை ஆண்டுதோறும் ஆய்விட்டு அறிக்கை வெளியிடல்.

ஈ. வெளிநாட்டுக் கல்வி பயில ஆண்டுக்கு, மூவரைத் (3) தேர்ந்தெடுத்து, கல்வி உதவித்தொகை / நல்கை வழங்குதல்.

உ. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் எதிர்மனு ( counter FIR ) பதிவு செய்யப்பட்ட வழக்குகளையும், தவறான தகவல் (mistake of fact) என்று தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளையும், ஆய்விட்டு அரசுக்கு அறிக்கை அனுப்பல்.

ஊ. மேல் நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், ஆண்டுதோறும் அக்டோபர் திங்களில் அம்பேத்கர் சிந்தனைகள் தொடர்பான கட்டுரைப் போட்டியும், கருத்தரங்கங்களும் நடத்துதல்.

XIV. கீழ்க்கண்ட செயல்பாடுகளுக்கு அறிவர் குழுக்களை அமைக்க வேண்டுகிறோம்.

| செயல்பாடுகள் | அறிவர் |
|---|---|
| பட்டியல் இனத் துணைத் திட்டம் / பழங்குடித் துணைத் திட்டம். | இரா.கிருத்துதாசுகாந்தி,இ.ஆ.ப(ஓய்வு), முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர். |
| வன்கொடுமைத் தடுப்புச் சட்டம். | திருவாளர். ஹென்றி டி்.பேன் |
| ஆதிதிராவிடர் நல, மேல்நிலைப் பள்ளிகளை வளப்படுத்துதல். | பேராசிரியை. அரங்கமல்லிகா. |
| 2006, பழங்குடி வன உரிமைச் சட்ட நடைமுறை. | செல்வி. ஷோபா (ஊட்டி). |

XV. தமிழ்நாட்டில் பட்டியல் இன அரசுப் பணியாளர் சங்கங்களுக்கு, ஏற்பளிப்பு செய்து, அரசுகளுடன் முறையான பேச்சு வார்த்தைகளில், கலந்து கொள்ளச் செய்தல்.

XVI. தமிழ்நாடு அரசு ரூ. 6 இலட்சம் கோடிக் கடனில் தத்தளிக்கிறது. **இதை மாற்றும் வண்ணமாக இந்தக் கடன்கள் முழுமையாக அடைபடும் மட்டும் புதிய கடன்களை வாங்காமல், அரசு செயல்பட வேண்டும்.** “பற்றாக்குறைபட்ஜெட்” யைப் போடாமல் இருந்தாலே 5 – 6 ஆண்டுகளில் இக்கடன்களைத் தீர்த்து விடலாம்.

இரா.கிருத்துதாசுகாந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
rcg1952@gmail.com
9444045215

அருட்பணி. ஜான்குமார்,
சமூகக்கண்காணிப்பகம், இயக்குநர்,
தமிழ்நாடு,சென்னை,
நுங்கம்பாக்கம்.

## Chapter III

## 2021 விடுதலைச் சிறுத்தைகளின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது எப்படி ?

### I. சமூக நீதி

இதை நிலைநாட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தந்த ஆறு வாக்குறுதிகளையும் வரவேற்கிறோம். இவற்றை நிறைவேற்றும் வகையில் கொண்டு வர வேண்டிய நடைமுறைகளில் சிலவற்றை விவரிக்கிறோம்.

அ) 69 % இட ஒதுக்கீட்டில் பட்டியல் இனம் + பழங்குடி = 20 + 1 = 21% வர வேண்டும். இப்போதுள்ள 18 + 1 = 19 சதவீதத்திற்கு மேலான 2 % யைக் கூட்டி மொத்தப் பங்கீட்டுச் சதவீதத்தை 71 % ஆக உயர்த்தலாம்.

ஆ) 10 % EWS ஒதுக்கீடு மறுதலிக்கப் பட வேண்டும். இதற்கு மாநில சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

இ) அடுத்துத் தனியார் துறையில் ஒதுக்கீடு கொண்டு வரச் சட்டம் இயற்றினாலும், அது நெடு நாள் நீதிமன்றச் சிக்கலுக்குள் சென்று விடும். மாறாகக் கீழ் வரும் உத்தியைக் கையாளலாம்.

தனியார் நிறுவனங்களில் கீழ் மட்டப் பணியிடங்களில் ஏற்கனவே தேவையான பட்டியலின / பழங்குடி இன உறுப்பினர் இருக்கின்றனர். ஆகவே உச்ச பதவியான மேலாண் இயக்குநர் அல்லது அதற்கு இணையான பொது மேலாளர் அல்லது தலைமைச் செயல் நிர்வாகிப் பதவிக்கு ( CEO ) அடுத்துள்ள ஐந்து பதவிகளில் தமிழ்நாட்டில் நிலவும் பங்கீட்டு ஆணைப்படி ( 69 % ) SC / BC / MBC க்கான நியமனம் செய்ய ஒப்புதல் வழங்கும் நிறுவனங்களுக்கு மட்டும் தொழில் தொடங்கும் இசைவை வழங்கலாம். இது இரு சாராரும் ஒத்திசைந்து செய்வதால் இந்த MOU க்களில் நீதிமன்றங்கள் குறுக்கிட முடியாது.

ஈ) ஆண்டுதோறும் பட்ஜெட் நூலில் அனைத்துத் துறையிலுமுள்ள அனைத்துப் பணியாளர் புள்ளி விவரங்களும் பட்டியலாக ( Number List ) அளிக்கப்பட்டு வருகின்றன. இதை விரித்து மொத்தப் புள்ளி விவரத்தோடு SC / ST / BC / MBC விவரங்களையும் ஆண்டாண்டு வெளியிடலாம்.

## II. மதவெறி / சாதிவெறி சக்திகளை எதிர்ப்போம்

எதிர்ப்பது என்பது பல எதிர்வினைகளைக் கொண்டு வரும். ஆகையால் மதம் மற்றும் சாதியை மறுதலிப்போரை வலிமைப்படுத்தும் செயல்திட்டங்களை அறிமுகப்படுத்தலாம். முதற்கண் பட்டியல் இனத்தவரும் ( SC ) பழங்குடியினரும் சாதியைச் சாராதவர் என்ற அரச அறிவிக்கை வெளி வர வேண்டும். மதச் சார்பின்றி 'அனைத்துப் பழங்குடியினரும் பழங்குடிகளே' என்று அரசியல் சாசனத்தில் குறிப்பிட்டுச் சொன்னது பட்டியல் இனத்தவருக்கும் ( SC ) பொருந்தும் என்ற அரசியல் சாசன மாற்றம் கொண்டு வரப் பட வேண்டும். இவர்கள் குடிகள் ( ST ) இனங்கள் ( SC ) என்றே அழைக்கப் பட வேண்டும். SC / ST **"சாதியினர்"** என்ற அடைமொழி அழிக்கப்பட வேண்டும்.

இனக்கலப்பின்றி பிறப்பால் முத்திரை குத்தப்படும் சாதிப் பிம்பம் அழியாது. இதற்கு ஒரே வழி கலப்பு மணத்தைப் போற்றுவதும், சாதிச் சாயமில்லாத பட்டியலின / பழங்குடிகளுக்கு அரசியல் சாசனத்தில் இப்போதுள்ள வல்லமைகளை வலுப்படுத்தித் தருதலுமே ஆகும். " கலப்பு மணத்தில் பிறப்போர் மீண்டுமொரு சாதிச் சாயத்தைப் பூசிக்கொள்கிறார்கள்", "கலப்பு மணத்தால் சாதி இற்றுப் போகாது" என்பதில் ஓரளவு உண்மை உண்டு. ஆகவே கலப்பு மணத்தில் பிறப்போருக்கு சாதியற்ற பட்டியலின / பழங்குடிகள் சான்றோ ( கலப்பு மணம் புரிந்தோரில் ஒருவர் பட்டியலின / பழங்குடி என்றிருக்கும் வேளை அவரது பிள்ளைகள் அந்த பட்டியலின / பழங்குடி பெற்றோரின் இனச்சான்றைப் பெறலாம்.), அல்லது **"சான்றோர்"** என்ற அடையாளச் சான்றோ வழங்கப் படலாம். அப்போது மீண்டும் அடுத்த தலைமுறை சாதிக்குள் சரியாமல் இருக்கும்.

அடுத்து வெறும் பணப் பரிசுகளால் மட்டும் கலப்பு மணம் உந்தப் படாது. கலப்பு மணம் புரிந்தவர்க்குச் சிறப்புப் பங்கீடு என்பதும் மாற்றம் கொண்டு வராது. துணிந்து அனைத்து அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணி நியமனம் யாவும் கலப்பு மணம் புரிந்தவர்க்கும், அவர்தம் பிள்ளைகளுக்கும் மட்டும் வழங்கப்படும் என்ற அறிவிப்பு சாதி மறைவுக்கான ஒரு பெரும் சல சலப்பைக் கொண்டு வரும்.

இந்த அறிவிப்பினால் எந்தவொரு குடியும் விலக்கப்படுவதில்லை என்பதால், நீதி இதன்பக்கம் சாயும் என எதிர்பார்க்கலாம். "எந்த இனமும் விலக்கப்படுவதில்லை, எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கப் படுகிறது" என்பதால் யாருக்கும் இது பாகுபாடு (Discrimination) காட்டுவதில்லை. ஆகவே துணிந்து இதை அறிமுகப்படுத்துவது சமத்துவப் புரட்சிக்கு வழிவகுக்கும்.

**III. தமிழக மீனவர் பாதுகாப்பும், கச்சத்தீவு மீட்பும்**

முழு மனதோடு ஆதரிக்கிறோம்.

இந்தியப் படை இந்திய எல்லைக்குள் இந்தியரைக் கைது செய்வது என்பது, தேசத் துரோகம் (Anti Nationalism) என்று சொல்லப் பட முடியாது என்றாலும் கண்டிப்பாக இத்தகைய நடவடிக்கை நாட்டுப் பற்று அல்லாதது ( Non- Patriotic) எனச் சொல்ல முடியும். இந்தியக் கடல் எல்லைக்குள் மீன் பிடிக்கும் மீனவரை யார் தான் தடுக்க முடியும் ? அதே வேளை எல்லை தாண்டிய கடலில் இந்தியர் மீன் பிடித்தால் அதை இந்தியப் படை எவ்வாறு அந்நிய எல்லைக்குள் புகுந்து தடுக்க முடியும் ? அந்நிய எல்லைக்குள் மீன் பிடிப்பவரை அந்நியப் படை தாக்கினால் அவர்கள் மீது எதிர் தாக்குதல் செய்வது தான் தாய்ப்படையின் கடமை. இதை உரத்துச் சொல்லி இந்தியக் கடற்படையினர் தமிழக மீனவர் மீது எக்காரணம் கொண்டும் கை வைக்கலாகாது என்பதை நடைமுறைப் படுத்த வேண்டும். நாட்டைக் காட்டிக் கொடுத்தல், கள்ளக் கடத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டால் தமிழகக் காவல் துறை முதலில் நடவடிக்கை எடுக்கலாம். கச்சத் தீவில் இந்தியப் படை ஒரு நிரந்தரப் பாசறையை அமைக்க வேண்டும்.

**IV. மாநிலச் சுயாட்சி**

இவற்றை வரவேற்கும் அதே வேளையில் ஏற்கனவே உள்ள சுயாட்சிகளை அறுதியோடு நடைமுறைப்படுத்த மாநில அரசு உறுதியோடு செயல்பட வேண்டும். கடந்த 10 ஆண்டுகளாக அதிகாரம் இருந்தும் வெறும் ஊதுகுழலாக மாநில அரசு மாறிப் போனதை இனி மாற்ற வேண்டும்.

இருக்கும் சுயாட்சியைக் கையில் எடுத்தே தமிழ்நாடு கீழ்வரும் செயல்களில் இறங்க முடியும்.

அ) NEET மறுதலிக்கப் படலாம்.

ஆ) கல்வி தொடர்பான அனைத்து மையக் கட்டுப்பாட்டு நிறுவனங்களும் (AICTE போன்றன ) மறுதலிக்கப் படலாம். மைய அமைப்புகள் வெறும் ஆலோசனை மையங்களாகவோ, நிதிப் பகிர்வு நிறுவனங்களாகவும் மட்டுமே செயல்படலாம்.

இ) எதிர்காலத்தில் தமிழகத்தில் துவக்கப்படும் எல்லா வகையான கல்வி நிறுவனங்களிலும் 50 % ஆளுமைப் பங்கு மாநிலத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

ஈ) பல்கலைக் கழகங்களின் வேந்தராக ஆளுநர் இருப்பதைச் சட்டம் இயற்றி நீக்க வேண்டும்.

உ) எப்படி IAS, IPS போன்ற நிர்வாகங்கள் மாநில ஆளுமையின் கீழ் வருகிறதோ அதே போன்று IRS உம் மாநில ஆளுமையின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். வரியை வசூலிக்கும் பொறுப்பும் அதைப் பகிர்வு செய்யும் கடமையும் மாநிலங்களுக்கு ஒப்படைக்கப் பட வேண்டும்.

## V. வேளாண் நலனும், நிலப் பாதுகாப்பும்

இவற்றுள் பல பரிந்துரைகள் ஆழ்ந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இடையில் வேளாண் நிலங்கள் அடங்கிய மண்டலங்களைக் கூடிய விரைவில் உருவாக்க வேண்டும். அனைத்து நீராதாரங்களால் ( அணை, ஏரி, கண்மாய், குளம் போன்றன ). பயன்பெறும் பயிர் நிலங்களை, அல்லது ஆயக்கட்டு நிலங்களாகப் பதிவு செய்யப் பட்டுள்ள நிலங்களை "வேளாண் மண்டலங்களாக" உடனே அறிவிக்க முடியும். இம்மண்டலங்களை "ஆயக்கட்டு" அல்லது "தாங்கல்" என்ற பழம் பெயரிட்டு அழைக்கலாம்.

இயற்கை வேளாண்மையை ஊக்கப் படுத்தும் வண்ணம் அனைத்து மலைப்பகுதிகளையும் "இயற்கை வேளாண்" பகுதிகளாக அறிவிக்க வேண்டும்.

ஓவ்வொரு மாவட்டத்திலும் அம்மாவட்ட மரபுப் பயிர்களுக்கான விதைப் பண்ணைகளை 'வேளாண் குடிகளே' உருவாக்க நல்கைகள் வழங்க வேண்டும்.

ரேசன் கடைகளில் அரிசியின் அளவைப் பாதியாகக் குறைத்து கேழ்வரகு, சாமை, தினை ஆகியவற்றை வழங்க வேண்டும்.

## VI. சுற்றுச் சூழல்

அ) இதன் முதற்படியாக அனைத்துப் பஞ்சாயத்துக்களுக்கும் **"திரவ, திடக் கழிவு மேலாண்மைத்"** திட்டங்களைக் கொண்டு வந்து அந்தந்தப் பஞ்சாயத்துக்களே அவற்றைச் செயல்படுத்தச் செய்யவும் வேண்டும்.

ஆ) அனைத்து ஆறுகளின் இரு கரைகளிலும் 500 அடி இடைவெளியில் எதிர்காலக் கட்டுமானங்கள் தடைசெய்யப் பட வேண்டும். நகர்ப்புறங்களில் ( சென்னை, கூவம், அடையாறு, மதுரை வைகை, திருச்சி காவிரி, நெல்லை பொருநை (தாமிரபரணி), இராணிப் பேட்டை பாலாறு, கிருட்டிணகிரி பெண்ணை ஆறு போன்றன.) இந்த இடைவெளி 100 மீட்டராக இருக்கலாம். இந்த இடைவெளியில் தற்போதுள்ள கட்டிடங்கள் இனி விரிவுபடுத்தப்படவோ, செப்பனிடப்படவோ கூடாது எனவும், எதிர்காலத்தில் எந்தவொரு கட்டிட அனுமதியும் கிடையாது எனவும் செய்யலாம். அடுத்த 20 – 30 ஆண்டுகளில் இவ்விடங்கள் காலி ஆகி விடும். இவற்றை அப்படியே பூங்காக்களாக மாற்றி விடலாம்.

இ) மலைத்தலங்கள் யாவற்றையும் "இயற்கை வேளாண்" பகுதிகளாக அறிவித்து செயற்கை உரங்கள், விதைகள், பூச்சி மருந்துகளைத் தடை செய்யலாம். மலைத்தலங்களில் உள்ள காபி, தேயிலைத் தோட்டங்கள் வனநிலங்களில் தான் அமைந்துள்ளன. இவை வனச் சூழலைக் கெடுப்பதுடன் அளவுக்கு மீறிய இராசாயனங்களைக் கையாளுகின்றன. இவற்றைப் படிப்படியாகக் குறைத்து பழ மரங்களை மீட்டெடுக்கலாம். 100 ஏக்கருக்கு மேலுள்ள அனைத்துத் தோட்டங்களும் ஆண்டுக்கு 2 % நிலங்களில் பழ மரங்கள் அல்லது மூங்கில்களைப் பயிரிட வேண்டும். இதன் வரவுகள் தேயிலை வரவோடு அதிகம் எனலாம். ஆகவே தேயிலை குறைவதால் பொருளாதாரம் குறையாது.

### VII. பெண்கள் நலன்

பெண்களுக்கான சிந்தனை போற்றுதற்குரியது.

அ) பெண்களுக்கான 50% பங்கேற்பைச் சட்டமன்றங்களிலும், பஞ்சாயத்துக்களிலும் அரசுப் பணிகளிலும் கொண்டு வரும் அழுத்தம் வரவேற்கத்தக்கது.

ஆ) அதே வேளை அரசியல் கட்சிப் பொறுப்புகளிலும் 50 % பங்களிப்பைக் கட்சிகள் வழங்க வேண்டுகோள் விடுக்கப் பட வேண்டும்.

இ) திருமணத்திற்கு நல்கை வழங்குவது என்ற நடைமுறையை மாற்றி பட்டம் பெற்ற மகளிர் திருமணம் செய்கையில் அவர்களுக்குப் பரிசமாக மணப்பெண் பெயரில் நிதி வழங்கலாம்.

ஈ) கடன் தள்ளுபடி என்பதைக் கொள்கை அறிவிப்பாகச் செய்வதற்குப் பதிலாகச் சூழலுக்குத் தக்க செய்வது நேர்மறை விளைவுகளைக் கொண்டு வரும். அதற்குப் பதிலாக வட்டியில்லாக் கடன் திட்டங்களை உருவாக்கலாம்.

உ) மனைவி வேலைக்குச் செல்லாமல் கணவர் மட்டுமே வேலை செய்யும் குடும்பங்களில் கணவரின் ஊதியத்தில் 50 % அவரது மனைவி பெயரில் வழங்கப்படும் திட்டம் பெண்களை வலுப்படுத்தும்.

## VIII. பழங்குடியினர் நலன்

பழங்குடியினர் மீதான கண்ணோட்டம் பரிவானது.

1) பழங்குடி வன உரிமைச் சட்டம் 2006

இந்தச் சட்டம் வனப் பாதுகாப்புச் சட்டம் அல்ல. இது பழங்குடியினருக்கு வனத்தின் மீதான உரிமைச் சட்டம். ( STs Forest Rights Act). வனப் பாதுகாப்பு என்பது வனத்துறையினருக்கு அதிகாரம் அளித்து அவர்களைப் பழங்குடியினருக்கு எதிரிடை நடவடிக்கைகள் எடுக்க வைக்கும்.

இச்சட்டம் 2006 -2016 வரை தடைப்பட்டிருந்தது. 2016 க்குப் பிறகு வெறும் கண்துடைப்பு நடவடிக்கைகளே நடைபெறுகின்றன.

ஏற்கனவே 100 ஆண்டுகளுக்கு முன்பே வனப்பதிகள் (Forest Settlement) பழங்குடிக்கு வழங்கப் பட்டன. ஒவ்வொரு பதியிலும் சற்றொப்ப 100- 200 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டிருந்தன. அனைத்துப் பதிகளின் விவரங்களும் பெறப்பட்டு அந்நிலங்கள் முழுதும் பழங்குடிக்கு உரிமை ஆக்கப் பட வேண்டும். மாவட்ட மற்றும் கோட்ட வன உரிமைக்குழு உறுப்பினர்களுக்குத் தொடர் பயிற்சி அளிக்கப் பட வேண்டும்.

2) வளர்ச்சித் திட்டங்களும் அப்புறப்படுத்தலும்.

பழங்குடிப் பகுதிகளில் எந்த வளர்ச்சித் திட்டம் வரினும் அதில் அங்கு உறையும் பழங்குடியினர்க்கு 10 % பங்கு அளிக்கப் பட வேண்டும். அப்புறப்படுத்தப் படவேண்டிய கட்டாயம் வந்தாலும் பழங்குடியினருக்கு 600 சதுர அடிக்குக் குறையாத குடியிருப்புகள் வழங்கப்படவேண்டும். அவர்கள் ஏற்கனவே இருந்த பகுதிகள் அவர்களுக்கே உரிமையானதாகவும் தொடர வேண்டும்.

3) கலைக் கல்லூரிகள்

கலைக் கல்லூரிகள் நடத்தக் கூடிய அளவிற்கு மாணவர் எண்ணிக்கை வராது. ஆகவே Business School ஆரம்பிக்கலாம். அனைத்து இந்திய பழங்குடி மாணவரையும் சேர்க்கலாம். உள்ளூர்ப் பழங்குடியினருக்கு 40 % இடம் அளிக்கலாம்.

4) உண்டுறைப் பள்ளிகள்

இப்பள்ளிகளைச் சீராக்கம் செய்ய நிதி ஒரு பொருட்டல்ல. பள்ளி நடைமுறைகள் மாற்றப் பட வேண்டும். அவையாவன

அ) அனைத்து உண்டுறைப் பள்ளிப் பணியாளர்களும் உள்ளூர்ப் பழங்குடிகளாகவே இருத்தல் வேண்டும்.

ஆ) துவக்கப் பள்ளிகளை உள்ளூர்ப் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

இ) 1 முதல் 12 வரை தமிழ் ஆங்கிலம் கலந்த பாடங்களாக அமைய வேண்டும்.

ஈ) மேல்நிலைப் பள்ளிகளை "ஏகலைவா" பள்ளி நிர்வாக நடைமுறைக்கு மாற்ற வேண்டும்.

5) பழங்குடி நல வாரியம்.

நல வாரியங்களால் எல்லா வகைப் பழங்குடியினருக்கும் பலன் கிட்டாது. மலையாளிப் பழங்குடியினர் இருக்கும் பகுதிகளில் பஞ்சாயத்தும், பஞ்சாயத்து ஒன்றியங்களும் ( சமுனா மரத்தூர், புதூர் நாடு, கல்ராயன், பச்சை மலை, கொல்லி மலை ஒன்றியங்கள் ஆகியன பழங்குடி ஒன்றியங்கள்) மலையாளிகளால் மட்டுமே அமைக்கப் படுவதால் வாரியத்திற்குப் பதிலாக இந்தப் பஞ்சாயத்துக்களுக்கும் ஒன்றியங்களுக்கும் சுய அதிகாரமும் தனி நிதியும் தருவதே சாலப் பலன் தரும்.

வாரியத்திற்குப் பதிலாகக் கீழ்வரும் பழங்குடி உறுப்பினர் கொண்ட 4 குடிக் குழுக்களை அமைத்து அரசு அதிகாரிகளுடன் காலாண்டுக் கூட்டம் தனித் தனியாக நடத்தலாம்.

| வ.எண் | பழங்குடியினர் எண்ணிக்கை | மொத்தப்பழங்குடி வகைகள் |
|---|---|---|
| 1 | 1 இலட்சத்திற்கும் மேல் | 2 |
| 2 | 10,000 – 50,000 | 5 |
| 3 | 1,000 – 10,000 | 16 |
| 4 | 1,000 க்குக் கீழ் | 13 |

6) மாவட்டந்தோறும் குறைதீர்க்கூட்டம்

குறைதீர்க் கூட்டம் என்பதாகப் பாவிக்காமல் வளர்பணிக் கூட்டம் என்றாக்கலாம்.

7) அடிப்படை வசதிகள்

8) சிறுவனப் பொருட்கள்

9) தொழில் தொடங்குதல்

இவை மூன்றும் வரவேற்கத் தக்கன.

10) பழங்குடிச் சான்று

இதைச் சாதிச் சான்று என்றழைக்கலாகாது. "பழங்குடிச் சான்று" என்றே அழைக்க வேண்டும்.

## IX. இளைஞர் நலன்

இளைஞர்க்குத் தேவை வேலைவாய்ப்புகள் தான். வேலைவாய்ப்புப் பயிற்சி என்பது, ஒரு சில பயிற்சி நிறுவனங்கள் கார்ப்பரேட் அளவிற்குப் பணம் பறிக்க போலிநடப்பாக மாறிப் போயிற்று. மேலும் தொழில் நிறுவனங்களே பயிற்சி அளிக்கிறோம் என்ற போர்வையில் அரசுப் பணத்தில் இளைஞர்களிடமிருந்து ஊதியமில்லா உழைப்பை உறிஞ்சி வருகின்றன. ஆகவே வேலைவாய்ப்புப் பயிற்சியில் கண்ணோட்டம் செலுத்துவதை விட வேலை வாய்ப்பு முகாம்களையும், சுய தொழில் கடன் வழங்கும் முகாம்களையும் நடத்துவதில் நாட்டம் செலுத்துவது நன்மை பயக்கும்.

## X. விளையாட்டுத்துறை

தமிழகம் முழுவதும் ஒவ்வொரு 5 கி.மீ சுற்றளவிற்குள் ஒரு பொது விளையாட்டுத் திடல் அமைக்கப் படலாம். 5 கி.மீக்குள் இருக்கும் எல்லாப் பள்ளிகளும் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். விளையாட்டைக் கட்டாயப் பாடம் ஆக்குவதற்குப் பதிலாக விளையாட்டுத் திறன் காட்டுவோர்க்குத் தனி மதிப்பெண்கள் தரலாம். தேர்ச்சிக்கு இம்மதிப்பெண்கள் கூட்டிக் கொள்ளப் படும்.

அதிக செலவில்லாததும் கூடி விளையாடுவதுமான கபடி, கோகோ, டென்னிகாய்ட், வாலிபால், சிலம்பம், மல்லர்கம்பம் ஆகியவற்றில் கூடுதல் வாய்ப்புகள் தர வேண்டும்.

## XI. உள்ளாட்சி நிர்வாகம்

பெரு மகிழ்வுடன் இப்பரிந்துரைகளை ஆதரிக்கிறோம். தேர்தல் முடிந்தவுடன் அதிகாரப் பகிர்வு பற்றிய கலந்தாய்வுக் குழு அமைக்கப்பட்டு பல்வேறு பஞ்சாயத்துத் தலைவர்களின் கருத்துகளும் கேட்டறியப்பட்டு ஆறு திங்களுக்குள் தமிழ்நாடு அரசு உரிய ஆணைகள் பிறப்பிக்க வேண்டும்.

## XII. சுங்க வரி

இது நல்ல வருவாய் கொண்டு வரும் திட்டம் ஆகும். ஆனால் இது தனியார் வசம் செல்வதால் இதை மாற்றி அந்தந்த பஞ்சாயத்துகளே இச்சாவடிகளை நடத்தலாம். நெடுஞ்சாலை செல்லும் பஞ்சாயத்து எல்லைகளின் தொலைவிற்கு இணையான விகிதப்படி பல பஞ்சாயத்துகள் வரவைப் பகிர்ந்து கொள்ளலாம். சுங்க வரி வசூல் தனியாரிடம் விடப்படல் ஆகாது.

## XIII. கல்வி

மாநிலங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் துறை இது. மிகமிகக் குறைந்த நிதியை மட்டும் அளித்து விட்டு நாடு முழுவதும் துவக்கப்பள்ளி முதல் முனைவர் பட்டம் வரையான கல்வி ஆளுமைகளை மைய அரசு கைப்பற்றி வருகிறது. ஆகவே கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவது இன்றியமையாதது.

1. <u>நீட் தேர்வு</u>

புதிய அரசு பதவியேற்றவுடன் தமிழ்நாட்டை “ நீட் “ இலிருந்து விடுவித்துச் சட்டம் இயற்ற வேண்டும்.

2. போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை பெறும் SC / ST / OBC மாணவர்க்கு வழங்கலாம்.
3. கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வரும் தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் உடனே கொண்டு வரப்பட வேண்டும். குறைந்தது 10 பிற மாநிலங்களுடன் இதைச் செய்யுமாறு கலந்துரையாட வேண்டும்.
4. கல்விக்கான ஒதுக்கீடு எவ்வளவு என்பதை விட என்ன திட்டங்களுக்காக என்பதே கூர்ந்து செய்ய வேண்டுவது.
5. இது இன்னும் விரிவான ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். கல்விக் கூடங்களை மத்திய அல்லது மாநில அரசுகள் நேரடியாக நிர்வகிப்பது கேடுகளைச் சூழும். கல்வி நிறுவனங்களைப் பஞ்சாயத்து அரசுகள் நடத்தும் போது தனியாரின் தகதகப்பும் குறையும். கல்வியின் பலனும் பரவலாகும்.
6. தமிழ்மொழிக்கல்வி ஆங்கில வழிக்கல்வி என்று தனித்தனி நீரோட்டங்களாக இருப்பதற்குப் பதிலாக எல்லா வகுப்புகளிலும் ஓரிரு பாடங்கள் ஆங்கிலத்தில் என்று ஆக்கலாம். கல்லூரிகளிலும் அவ்வாறே செய்யலாம். 50 % பாடங்கள் தமிழிலும் 50 % பாடங்கள் ஆங்கிலத்திலும் அமையலாம். தேர்ச்சிக்கான மதிப்பெண்களைக் கணக்கிடுகையில் தமிழ்மொழிப் பாடங்களில் எடுத்த மதிப்பெண்களுக்கு 60 % மதிப்பும் ஆங்கிலப் பாட மதிப்பெண்களுக்கு 40 % மதிப்பும் எடுத்துக் கொள்ளலாம்.
7. இதற்குப் பதிலாக அந்தந்த பஞ்சாயத்துகளே இப்பொறுப்பை நிறைவேற்றக் கடமைப் பட்டவர்கள். தனிக்குழு அமைத்தால், அக்குழுக்களும் பஞ்சாயத்தும் தமக்குள் விடைத்துக் கொள்வார்கள்.

8. சமச்சீர்க் கல்வி அருகமைப் பள்ளி

ஊர்ப்புறங்களில் உள்ள பள்ளிகள் பெரும்பான்மை அந்தந்த சுற்றுப்புறத்திலிருந்து வரும் மாணவர்களைக் கொண்டதாகவே உள்ளன. நகர்ப்புறப் பள்ளிகளில் அருகமை மாணவர் சேர்க்கை என்பதை நடைமுறைப்படுத்துவது இயலாது. சென்னை மாநகராட்சி எல்லை முழுவதும் அருகமை எல்லையாகத்தான் இருக்க முடியும். சுற்றுப்புற பஞ்சாயத்துகளிலிருந்து

நகர்ப்புறப் பள்ளிகளில் சேர்க்கக் கூடாது என்று விதி செய்ய முடியாது அல்லது அந்தந்த பஞ்சாயத்துகளில் உள்ள பள்ளிகளில் தான் அந்தந்த ஊர்ப் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்த முடியாது. உள்ளூர் மாணவர் ஒருவர் உள்ளூர்ப் பள்ளியில் படிக்க விருப்பப்பட்டு அவருக்கு அப்பள்ளியில் இடம் கிடைக்கவில்லை எனில் மட்டுமே அம்மாணவர் சார்பாக நடவடிக்கை எடுத்து அப்பள்ளியில் சேர்க்க விதி செய்ய முடியும். மற்றபடி எந்தப் பள்ளியில் யாரெவர் படிக்க முடியும் என்பதைச் சுதந்திர நாட்டில் கட்டுப்படுத்தல் ஆகாது. தேவையுமில்லை. சமச்சீர் என்பதன் கோட்பாடு நடைமுறையில் பரவலாக்கப் பட வேண்டும். ஓர்மைப்படுத்துவது சமச் சீர்மை அன்று. Central Board பாடத் திட்டத்தை இந்தியா முழுமைக்கும் திணிப்பதைச் சமச்சீர்மை அல்லது செம்மாப்பு என்று மையம் செய்ய எத்தனிப்பதைப் போன்றே, மாநிலம் முழுவதும் ஒரே பாடத்திட்டத்தைத் திணிப்பதும் ஆகும்.

இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாகப் பன்முகத் தன்மை கொண்ட பாடத் திட்டங்களை தமிழகம் அறிமுகப்படுத்த வேண்டும்.

மாநிலம் முழுமைக்கும் ஒரு வகுப்பிற்கு ஒரே பாடநூல் என்பது மாற்றப் பட வேண்டும். 38 மாவட்டங்களையும் குறைந்தது 10 கல்வி மண்டலங்களாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு மண்டலத்திலும் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு பாடப் பிரிவிற்கும் பாடநூல் தயாரிக்கத் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பாடக் குழுக்களும் அந்தந்த ஊர் மக்களிடம் இருந்து கருத்துக்களைப் பெற்று பாடநூலை வடிவமைக்க வேண்டும். 5 ஆண்டுகளுக்கு நூல் மாற்றம் தேவையில்லை.

ஒவ்வொரு பாடப் பிரிவிலும் உலகளாவிய செய்திகள் 10 % உம், நாடாளாவிய செய்திகள் 20 % உம், மாநிலம் அளாவிய செய்திகள் 30 % உம், மண்டலம் அளாவிய செய்திகள் 20 % உம் சேர்க்கப் பட வேண்டும். இதைத் தாண்டி ஒவ்வொரு பஞ்சாயத்தும் அவரவரது எல்லை தழுவிய செய்திகளை 20 % தனிப்பாட நூலாக உருவாக்கலாம்.

எடுத்துக் காட்டாகச் சரித்திரத்தில் 10 % உலகச் சரித்திரமும் 20 % இந்தியச் சரித்திரமும் 30 % மாநிலச் சரித்திரமும் 20 % மண்டலச் சரித்திரங்களையும் மண்டலப் பாட நூல் குழுக்கள் உருவாக்கும். 20 % அந்தந்தப் பஞ்சாயத்துகள் அந்தந்த பஞ்சாயத்துச் சரித்திரத்தைச் சிறு நூலாக வடிவமைக்கும். நிலவியல்,

மொழி, இலக்கியம் போன்றவற்றில் இது எளிதாகச் செய்யப் படக்கூடும். அறிவியல் பாடங்களிலும் இதை அறிவுக் கூர்மையோடு செய்ய முடியும்.

இந்த வகையான பாடத் திட்டங்கள் நாட்டின் பன்முகத் தன்மையையும் தேவையையும் உள்ளுரையும் விட்டுவிடாமல் தர வல்லன. தேர்வுகள் அந்தந்த மண்டலங்களிலேயே நடத்தப் படலாம். பள்ளி இறுதி வகுப்பிற்கும் இவ்வாறே செய்வதில் பாதகமில்லை. மருத்துவப் படிப்பிற்கு மட்டுமே தமிழ்நாட்டிற்கு இடப் பற்றாக்குறை உண்டு. கல்லூரியில் கலைக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள் மற்றும் பிறப்பிற படிப்புகளுக்கான தேவைக்கு மிகையாகவே இடங்கள் இருப்பதால், இவற்றில் சேர்வதற்குப் பொதுத் தேர்வு அல்லது பொதுப் போட்டித் தேர்வு அல்லது தகுதித் தேர்வு என்பது தேவையே இல்லை.

**XIV)** 10, 14, 17, 18, 19, 20, 21 **:** நிதி ஆதாரத்தைப் பொருத்தவை இவை.

**XV)** 11, 22 **:** வரவேற்கத்தக்கன.

**XVI)** 12,13 **:** அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றின் தன்மைகளை இன்னும் விரிவாக அலசிப் புரிந்து கொள்ள வேண்டும்.

உலகத்தின் பெரும்பகுதிகளில், குறிப்பாக வளர்ந்த நாடுகளிலும் குடியாட்சி நடைபெறும் நாடுகளிலும், மைய அல்லது மாநில அரசுகள் கல்விக் கூடங்களை நடத்துவது இல்லை. பள்ளிகளாயினும் சரி, கல்லூரிகளாயினும் சரி இந்நிறுவனங்களை உள்ளாட்சிகள் அல்லது தனியார்களே நடத்துகின்றன. அரசுப் பள்ளிகள் அல்லது பொதுப் பள்ளிகள் உள்ளாட்சி அரசுகளால் மட்டுமே நடத்தப்பட வேண்டும். தனியார் கல்வி நிறுவனங்களைத் தவிர்க்க முடியாது. அரசுப் பள்ளிகளுக்கும் தனியார் பள்ளிகளுக்கும் அல்லது கல்லூரிகளுக்குமிடையே தரம் பிரித்தல் ஆகாது. ஒன்றுக்கு ஒன்று விஞ்சியதும் இல்லை; குறைந்ததும் இல்லை. அரசுப் பள்ளிகளில் செலவு குறைவு. தனியார் பள்ளிகளில் அதிகம். ஆகவே பொருள் இல்லார்க்குத் தனியார் நிறுவனங்களில் கல்வி இல்லை என்ற நிலையை மட்டும் மாற்றுவது சாலப் பொருத்தமாகும். இதை அரசுச் செலவின்றியே செய்ய முடியும். தனியார் நிறுவனங்களில் 25 % மாணவர்களை ( மொத்த மாணவரில் 25 % வெறும் முதலாண்டு சேர்க்கையின் போது என்று மட்டுமல்ல.) எந்தக் கட்டணமும் இன்றி அப்பள்ளிகள் பயில வைக்க

வேண்டும் என்ற விதி சமூக நீதியைக் காக்கும். இதற்காக இயற்றப்படும் சட்டம் நீதிமன்றம் செல்லலாம். ஆகவே புதிய பள்ளிகளுக்கு இசைவு வழங்கும் முன்னரும், இசைவு புதுப்பிக்கப்படும் போதும், பள்ளிகளிடம் உடன்படிக்கை செய்து கொள்வது நீதிமன்றத் தலையீட்டைத் தடுக்கும்.

எல்லாப் பள்ளிகளையும் அரசு மயமாக்கல் என்பது இந்தியா போன்ற நாடுகளில் இயலாத செயல். அந்த அளவிற்கு அரசுகளிடம் நிதி இல்லை என்ற உண்மையை ஓர வேண்டியுள்ளது. வளைகுடா நாடுகள் ஸ்காண்டிநேவியன் நாடுகள், ( நார்வே, சுவீடன், பின்லாந்து ) போன்ற நாடுகளின் அரசு வருமானம் என்பது மிகமிக உபரியாக இருப்பதால் அந்நாடுகள் யாவர்க்கும் கட்டணமின்றிக் கல்வியை வழங்க முடிகிறது. அதே வேளை இந்நாடுகளில் வசூலிக்கும் வரி விகிதங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும். இது தவிர்த்துக் கட்டணம் கட்டக்கூடிய செல்வந்தர்களும் தனியார் கல்விக்கூடங்களை நிறுவக்கூடிய செல்வந்தர்களும் இந்திய நாட்டில் உண்டு தான். ஒன்று அரசு இத்தகையோரின் உபரிச் செல்வத்தை உயரிய வரியாக வாங்க வேண்டும் அல்லது அச்செல்வங்களைக் கல்வி நிறுவனங்களில் முதலீடாக செலவிட வைக்க வேண்டும். பணம் கட்டிப் படிக்க முடியாதவர்க்கு அரசுக் கல்வி நிறுவனங்கள் தாம் அடைக்கலம் என்ற அளவில் நிறுத்த முடியாது. நாட்டின் மொத்தக் கல்வி நிறுவனங்களில் 60 % க்கு மேல் (குறிப்பாக உயர்கல்வி) தனியாரின் வளர்ப்பில் தான் உள்ளன. பணம் கட்ட முடியாத 25 % பேருக்குத் தனியார் நிறுவனங்கள் தாம் பொறுப்பேற்றுக் கொள்ளவும் வேண்டும். தனியார் பள்ளிகளுக்கு இந்த 25 % பேர் பொருட்டு அரசு நிதி வழங்க வேண்டுவதில்லை. இது சமுதாயத்தின் கடன். அரசுக்கு வரி தந்து, அது அரசு மூலமாகக் கொடையாக வருவதற்குப் பதிலாகத் தனியார் பணம் தனியார் பள்ளிகளுக்குச் சென்று, தனியார் பள்ளிகள் வழியாகக் கொடை வழங்கப்படும்.

**XVII) பட்டியல் இனத்தவர் நலன்**

1,2,3) எந்த ஒரு தனி இனத்தவர்க்காகவும், ஒரு வணிகத்தையோ வணிக நிறுவனத்தையோ, நிதி நிறுவனத்தையோ நடத்த முடியாது. சில தனி இனத்தவர் வேண்டுமானால், இவற்றை நிர்வகித்து நடத்தலாம். ஆனால், ஒரு இனத்தவர் மட்டும் பலன் பெறும் வணிகத்தையோ, நிதி நிறுவனத்தையோ நடத்த முடியாது. நிதி நிறுவனங்கள், சேமிப்புகளைத் திரட்டித்தான் பயனாளிகளுக்குக் கடன் வழங்க முடியும். ஆகவே "பட்டியல் இனத்தவர்க்கு" என்ற வங்கியை நடத்துவது சாத்தியப்படாது.

தாட்கோ ஆரம்பித்து இதுவரை 50 ஆண்டுகளில், தமது செயல் வடிவங்களை எவ்விதத்திலும் காலத்திற்குத் தக்க மாற்றிக் கொள்ளவில்லை. தாட்கோ பொருளை ஈட்டக் கூடிய நிறுவனமாகச் செயல்பட முடியும். துவக்கத்தில் வீடு கட்டும் திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு இது. 100 பொறியாளர்களைக் கொண்டு செயல்பட்டது இன்றும் பல பொறியாளர்கள் உள்ளனர். ஆகவே தாட்கோவில் ஒரு அலகு நிலங்களை வாங்கி வீட்டுமனைகளாகப் பட்டியல் இனத்தவர்க்கு விற்பனை செய்யும் பணியை மேற்கொண்டால் அது நல்ல வருவாயைக் கொண்டுவரும். அதே போன்று நகர்ப்புறங்களில் 20 - 40 வீடுகள் கொண்ட அடுக்ககங்களையும் கட்டி விற்பனை செய்யலாம். பட்டியல் இனத்தவரில் பலர் பில்டர்களாக உள்ளனர். அவர்களுடன் Joint - Venture அடிப்படையிலும் இந்த முயற்சிகளை மேற்கொண்டு பட்டியல் இனத் தொழில் முனைவோர்களை வளர்த்தெடுக்கலாம்.

பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். பயனாளிகள் தேர்வுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான குழு தேவையில்லை. தாட்கோ முதற்கண் பயனாளிகளையே தேர்வு செய்யத் தேவையில்லை. 100 வங்கிக் கடனைப் பெறுவதற்கு, 200- 300 விண்ணப்பங்களைப் பரிந்துரைக்கிறது தாட்கோ. இதில் 100 பேருக்குத் தான் கடன் கிட்டும். ஆகவே மீதியுள்ள 100-200 விண்ணப்பதாரர்களை வங்கி புறக்கணிக்கிறது என்ற குற்றச்சாட்டு எழுகிறது. இதை மாற்றி அமைக்கலாம். எந்த வங்கியாக இருந்தாலும் அவர்களே பயனாளிகளை வங்கி வரையறைகளுக்கு உட்பட்டுத் தேர்ந்தெடுத்துத் தாட்கோவிற்கு அனுப்பலாம். ஒரு திங்களுக்குள் பயனாளி பட்டியல் இனத்தவரா என்பதை மட்டும் தாட்கோ உறுதிப்படுத்திக் கொள்ளலாம். வங்கிகள் விண்ணப்பங்களை அனுப்பிய ஒரு திங்களுக்குள் இனச் சான்றைச் சரிபார்த்து

விளிம்புத் தொகையை ( Marginal Money ) வங்கிக்கு விடுவிப்பது மட்டும் தாட்கோவின் பணியாக இருக்கலாம். இம்முறையில் 90 % தாட்கோவின் அலுவல் பணிகள் குறையும். தாட்கோவின் பெயரும் கெடாது. மாவட்ட தாட்கோ மேலாளர்கள் சமூகத்துடனும் வங்கிகளுடன் நெருக்கமான தொடர்புகளை வளர்த்துக் கொள்வது போதுமானது.

தாட்கோ மூலமாக NSFDC கடன்கள் நேரடியாக வழங்கப் படுகின்றன. 1996 இலேயே தொடங்கப்பட்ட இந்த NSFDC திட்டம் சரி வர நடத்தப்படாமல் போனதற்குக் கடனைத் திருப்பிச் செலுத்தாதது ஒரு காரணம். பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தமிழ்நாட்டிற்கு NSFDC இத்திட்டத்தை வழங்கியுள்ளது. இதைத் தொடர்ந்து நடத்தலாம். இது போக வங்கிகள் ஒப்பளிக்கும் திட்டத்திற்கு ( Start up / Stand up Schemes ) பயனாளிக்கு ரூ. 1 கோடி வரை வட்டியில்லாக் கடனாகத் தாட்கோ வழங்கலாம். இத்தொகையை வங்கிக் கடனுக்காக நேரடியாக வழங்கி விடலாம். தவணைகளை வங்கியே வசூலித்துத் தாட்கோவிற்குத் திருப்பிச் செலுத்தலாம் அல்லது இத்தகைய வங்கிக் கடனுக்கான தவணைகளை தாட்கோ

செலுத்தலாம். அதாவது வங்கிக்குத் திருப்பித் தர வேண்டிய EMI இல் முதலீட்டில் (capital) ஒரு பங்கைத் தாட்கோ தவணைகளாகக் கட்டும். மீதி தவணை + வட்டியைப் பயனாளி செலுத்துவார். இந்த நடைமுறை வட்டிச் சுமையை பெருமளவு குறைக்கும். தமிழக அர்சு இதற்காக ஆண்டுக்கு ரூ.100 கோடியை வழங்கலாம்.

அல்லது SCA மூலமாக மைய அரசிடமிருந்து வரும் நிதியை முழுவதுமாக இத்திட்டத்திற்கு வழங்கலாம். பயனாளிகளுக்கு ரூ. 25 இலட்சம் முதல் ரூ. 1 கோடி வரை சற்றொப்ப 100 பயனாளிகளுக்கு இந்த நல்கை கிட்டும்.

தாட்கோ நிர்வாகத்திற்காக SCA நிதி செலவிடப்படக் கூடாது. இதன் நிர்வாகச் செலவை ஈட்டக் கூடிய கட்டுமானப் பணிகளைத் தாட்கோ எடுத்துச் செய்தால் போதுமான வரவு கிட்டும்.

5) நிலம் வழங்கும் திட்டம்

அனைத்துப் பட்டியல் இனத்தவருக்கும் 5 ஏக்கர் வழங்குவது என்று நடைமுறைப் படுத்த முடியாத செயலாகும். 1.5 கோடி பட்டியலின மக்கள் சற்றொப்ப 30 இலட்சம் குடும்பங்களுக்குள் அடங்குவர். குடும்பத்திற்கு 5 ஏக்கர் எனில் 150

இலட்சம் ஏக்கர் வரும். தமிழ்நாட்டின் பரப்பளவே அவ்வளவு கிடையாது. பட்டியல் இனத்தவருக்கு இலவச நிலம் வழங்கும் பழைய நடைமுறைகளும் மாற்றப்படலாம். **Real Estate , Flat Promotion** மற்றும் பயிர் கால்நடை வளர்ப்பிற்காகப் பட்டியல் இனத்தவர் வாங்கும் நிலங்களுக்கு 2 ஏக்கருக்கு மிகைப்படா பரப்பிற்கான நில மதிப்பை வழிகாட்டி மதிப்பீட்டின்படி வழங்கலாம். ஆண்டுக்கு ரூ. 1000 கோடி இதற்கென ஒதுக்கப் படலாம். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே நிதியை வழங்கும் அதிகாரத்தையும் பரவலாக்கலாம்.

6) பஞ்சமி நில மீட்பு

இதைக் கடந்த காலத் துயரமாக விட்டொழித்து விட்டு புதிய நிலம் படைக்கும் திட்டங்களில் நாட்டம் செலுத்தலாம்.

7) இச்சட்ட நடைமுறையைப் பட்டியல் இனத்தவர்க்கென்று மட்டும் செய்ய இயலாது. கோயில் நிலங்களை அரசுடைமை ஆக்குவது ஒருபுறமிருக்க, கோயில் வருவாயில் 20 % பட்டியல் இனத்தவர்க்கு நிலம் அளிக்கும் திட்டத்திற்கு அளிக்கப்படும் சட்டம் இயற்றலாம். கிருத்துவ இசுலாம் வழிபாட்டுத் தலங்களுக்கும் இது பொருந்துமாறு செய்யலாம்.

8) மலம் அள்ளல்

இதைத் தடுப்பதற்காக ஏற்கனவே உள்ள குற்றவியல் சட்டங்களை வலுவாகக் கையாளுவதே போதுமானது. அதே போன்று மாற்றுத் தொழிலுக்காக உள்ள திட்டங்களையும் செவ்வையாக நிறைவேற்றுவது நலம் பயக்கும். இறந்தவர்க்கு ரூ.10 இலட்சம் நிவாரணம் என்றில்லாமல் சற்றொப்ப 30000 தூய்மைப் பணியாளர்கள் பயனடையும் வகையில் ரூ.300 கோடிக்கான ஒரு நிதியம் **(Corpus)** உருவாக்கலாம். இதிலிருந்த வரும் வட்டியைக் கொண்டு தொழில் செய்கையில் இறப்போர் குடும்பத்திற்கு ரூ.1 கோடி வீதம் சற்றொப்ப 30 பேருக்கு வழங்க முடியும்.

9,10) கண்டிப்பாகச் செயல்படுத்தப்பட வேண்டும். உள்ளாட்சிகள் இதற்கெனத் தனிவரியையும் விதித்துக் கொள்ளலாம். வரி வசூலுக்கு இணையான தொகையை மாநில அரசு வழங்கலாம்.

11) கூட்டுறவு சங்கங்கள் வஞ்சிக்கப்பட்ட அமைப்புகளாக மாறிப் போயின. பட்டியல் இனத்தவரைப் பொருத்த அளவில் தனிநபர் அல்லது பங்குதாரர்கள் அணுகுமுறையே ஆக்கம் தருவதாகும்.

12) இந்த உரிமங்கள் வழங்கப்படும் இடங்களில் அருந்ததியர்க்கு மாநில அரசு நிலம் வாங்கித் தந்து முதலீட்டுக் கடனுக்கும் ஏற்பாடு செய்தாலே அருந்ததியர்க்கு உரிமம் தன்னைப் போல் கிட்டும்.

13) செயல்திட்டங்களும் நிதியும் இல்லாத வாரியங்களால் பலன் இல்லை.

14) வணிக வளாக ஒதுக்கீடு

இதைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். அப்போது தான் தமிழ்நாடு முழுவதும் பரவலாகப் பட்டியல் இனத்தவர் வணிகம் செய்யும் சூழல் எழும்.

இது தவிர பஞ்சமி நில மீட்புக்குப் பதிலாக தாட்கோ இதுவரை கட்டி அளித்த வணிக வளாகங்களைப் பட்டியல் இனத்தவர்க்கு மீட்டுத் தருதல் நல்ல பயன் தரும். நெடுஞ்சாலைகள் அமைக்கப் படும் போது அச்சாலையை ஒட்டி பட்டியல் இனத்தவர் வணிகம் செய்வதற்கான நிலமும் சேர்த்துக் கையகப்படுத்தப் பட வேண்டும். இந்நிலங்களுக்கான விலையை மைய / மாநில அரசுகள் இந்நெடுஞ்சாலைத் திட்டங்களுக்காக ஒதுக்கும் நிதியில் இருந்து பட்டியல் இனத் துணைத் திட்ட பங்கீடாக நிதி வழங்க முடியும்.

15) பொதுக் கிணறு போன்றன

வளர்ச்சித் திட்டங்களுக்குள், சமுதாயமாகச் சுமத்தும் சில பாகுபாடுகளிலிருந்து பட்டியல் இனத்தவரை இட்டுச் செல்வது செம்மாப்பாக இருக்கும். பொதுக் கிணற்றில் பாகுபாடு காட்டப்பட்டால் அதைச் சமுதாயமாகவும் சட்ட வழியாகவும் தடுப்பது ஒரு முனைப்பு. அதைவிடச் செம்மாப்பானது வீட்டுக் குடிநீர் இணைப்பு தருவது. இது போன்று சிந்தித்துப் பட்டியல் இனத்தவரின் உரிமைகளை நாட்டலாம். பட்டியல் இனத்தவரே கோயில் கட்டி அதை அவர்களைக் கொண்டே நிர்வகிப்பதும் பூசனை மேற்கொள்வதும் ஒரு வெல்லும் வகைத் திட்டமாகும்.

16) இந்தக் கட்டமைப்பு ஏற்கனவே உள்ளது. ஒரு மாவட்டத்திற்கு ஒரு வழக்குரைஞர் இப்போதும் உண்டு. அவரும் பட்டியல் இனத்தவராகவே இருத்தல் வேண்டும் என்ற விதியும் கடைபிடிக்கப் படுகிறது.

17) இது பட்டியல் இனத்தவரை மட்டும் சார்ந்தது அல்ல.

18) பட்டியல் இனப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்குப் பாகுபாட்டு வன்கொடுமை காட்டுபவரின் பெயரில் அப்பஞ்சாயத்துத் தலைவரே புகார் அளித்தால் 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவு 10 இன்படி அக்குற்றவாளியை அப்பஞ்சாயத்து எல்லையிலிருந்து வெளியேற்றும் ஆணை பிறப்பிக்கப் பட வேண்டும்.

19) "தீண்டாமை" என்ற பதம் இனி கையாளப் படல் ஆகாது. பட்டியல் இனத்தவர் மீது இழைக்கப்படும் பாகுபாடுகள் வன்கொடுமை ( Atrocity ) என்றே அழைக்கப் படுகிறது. 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டமும், **"தீண்டாமை"** (Untouchability) என்ற பதத்தைக் கையாளவில்லை என்பதும் குறிக்கத்தக்கது. தீண்டாமை என்பது இச்சட்டத்தின் கீழ் ஒரு Mensrea ஆக இருக்க வேண்டும் என்பது இல்லை. அரசியல் சாசனத்தில் தீண்டாமை ஒழிக்கப்பட்டது என்றதன் பின்னர், பட்டியல் இனத்தவரே அப்பதத்தைக் கையாண்டு அக்கேவல உணர்வுகளுக்கு நீருற்றிக் கொண்டிருக்கக் கூடாது. **"வன்கொடுமை"** என்றே இனி அழைப்போம்.

20) தனியார் இட ஒதுக்கீடு

ஏற்கனவே முன்பத்திகளில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று தனியார் நிறுவனங்களுடன் MOU போட்டுக் கொள்வது சரியான அணுகுமுறையாக இருக்கும்.

21) கட்டாயம் செய்யப்பட வேண்டும். முன்பத்திகளில் இது வலியுறுத்தப் பட்டுள்ளது.

22) இது போன்ற நடவடிக்கைகள் பல அலப்பரலையும் கொண்டு வரும்.

23) கடுமையாக நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். கோட்டாட்சியர் அளவிலேயே நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டம் வழிவகுத்துள்ளது. கோட்டாட்சியர் மீது மக்கள் நெருக்கடி கொண்டு வரும் மக்கள் இயக்கம் தேவை.

**XVIII)** 24,25,26,27,28) வரவேற்கத்தக்கன.

**XIX)** 29) பௌத்தம் தழுவும் பட்டியல் இனத்தவர்க்கு ஏற்கனவே பட்டியல் இனச் சான்று தரப்படும் நிலை உள்ளது.

**XX)** 30) இதற்காக அரசை இறைஞ்ச வேண்டாம்.

**XXI)** 31,32) கோரிக்கை இன்னும் தெளிவு படுத்தப்பட வேண்டும்.

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
rcg1952@gmail.com
9444045215

அருட்பணி. ஜான்குமார்,
சமூகக்கண்காணிப்பகம் இயக்குநர்,
தமிழ்நாடு, சென்னை,
நுங்கம்பாக்கம்.

Chapter IV





# தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் - 2021

# தேர்தல் அறிக்கை

சனாதனத்தை வேரறுப்போம்!
சனநாயகத்தைப் பாதுகாப்போம்!



## விடுதலைச் சிறுத்தைகள் கட்சி



# ★ விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ★

## தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல் - 2021

## தேர்தல் அறிக்கை

**த**மிழகத்தின 16ஆவது சட்டமன்றத் தேர்தல் எல்லாவிதத்திலும் மாறுதலை உண்டாக்கவல்ல ஒரு தேர்தல். இந்தத் தேர்தல் மாநில சட்டமன்றத்திற்கான தேர்தல் என்றாலும்கூட மத்தியில் உள்ள சனாதன ஆர்.எஸ்.எஸ். சங் பரிவார் பாஜக ஆட்சியைத் தகர்க்கக்கூடியதாக அமைந்துள்ளது. சமூகநீதி பறிப்பு, தலித் விரோதப்போக்கு சிறுபான்மையினர் ஒடுக்குமுறை, விவசாயிகளுக்கு எதிரான கார்ப்பரேட் ஆதரவு நிலை என கொடுங்கோன்மை ஆட்சியாக பாஜக தலைமையில் மத்தியிலும் அதன் மறுபதிப்பு ஆட்சியாக அதிமுக தலைமையில் தமிழகத்திலும் உள்ளது. இந்த நிலையில்தான் இத்தகைய மக்கள் விரோத சக்திகளை வீழ்த்தவும், அரசியலிலும் சமூகத்திலும் ஓரம்கட்டப்பட்டவர்கள் அதிகாரத்தை நோக்கி நகரவும், அதைத் தமக்கானதாக மாற்றவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கிறது.

புரட்சியாளர் அம்பேத்கர், கார்ல் மார்க்ஸ், அயோத்திதாசப் பண்டிதர், தந்தை பெரியார், ஆகியோர் கொள்கைகளைப் பின்பற்றியும் சிங்காரவேலர், காயிதே மில்லத், கர்ம வீரர் காமராசர் ஆகியோர் வழி நின்றும் செயல்படும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலித்துகள், பழங்குடிகள், பிற்படுத்தப்பட்டோர், மதச் சிறுபான்மையினர், பெண்கள், திருநங்கைகள், என அனைத்துத் தரப்பு மக்களின் நலனை முன்னிறுத்திக் களமாடிவருகிறது.

தமிழக மக்கள் 2006 சட்டமன்றத் தேர்தலிலும், 2009, 2019 நாடாளுமன்ற தேர்தலிலும் அளித்த மிகக் குறைந்த அங்கீகாரத்தைக் கொண்டு இமாலய சாதனைகளைப் படைத்தது.

தமிழக மக்கள் நம்பிக்கையோடு அளித்த வாய்ப்பை, நம்பிக்கை குலையாவண்ணம் காப்பாற்றி பல திட்டங்களை நிலைவேற்றத் துணை நின்றிருக்கிறது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் முன் முயற்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் சிலவற்றைத் தமிழக மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது எமது கடமை.

## மக்களவையில் நிகழ்த்திய சாதனைகள்

- இதர பிற்படுத்தப்பட்டோர் (Other Backward Class) இடஒதுக்கீட்டில் வருமான வரம்பை ரூபாய் 4.5 இலட்சத்திலிருந்து உயர்த்த, 2013இல் அன்றைய பிரதமர் மன்மோகன்சிங் அவர்களிடம் வலியுறுத்தியது. அதன் விளைவாக அன்றைக்கு ரூபாய் 6 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

- தமிழகத்தில் அன்றைய காலக்கட்டத்தில் (2009) நிலவிவந்த மின் தட்டுப்பாடு சூழலை உணர்ந்து தமிழகத்திற்கு போதுமான மின் திட்டங்கள் வேண்டுமென்றும், அதற்கென அதிக நிதி ஒதுக்கவும் வலியுறுத்தியது.

- மனிதக் கழிவை மனிதனே அள்ளும் இழிவை முற்றிலுமாக நீக்கிட அன்றைய பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தி அதற்கென அரசு ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வைத்தது.

- மத்திய அரசின் தொகுப்பிற்கு (Central Pool) மாநிலங்கள் தரும் மருத்துவ இடங்களில் (AIQ-ALL INDIA QUOTA MEDICAL SEATS) தலித் மற்றும் பழங்குடியினருக்கு (SC, ST) இடஒதுக்கீடு இருந்தது. ஆனால் ஓபிசி (OBC)க்கு இடஒதுக்கீடு இல்லாமல் இருந்தது. ஓபிசி (OBC)க்கு இடஒதுக்கீடு உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என மத்திய சுகாதாரத்துறை அமைச்சரிடம் நேரில் வலியுறுத்தி, நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தனர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மக்களவை உறுப்பினர்கள்.

• மத்திய பிஜேபி அரசு பல இலட்சம் ஓபிசிக்கள் இடஒதுக்கீட்டை பறிக்கும் உள்நோக்கோடு, ஓபிசி கிரீமி லேயர் வருமான வரம்பை (OBC CREAMY LAYER IN-COME LIMIT) நேரிடையாக குறைக்க முடியாது என்பதால் பி.பி. சர்மா (B.P.Sharma) கமிஷனை அமைத்து அதன்மூலம் தற்போது ஓபிசி கிரீமி லேயர் வருமான வரம்பில் (OBC CREAMY LAYER INCOME LIMIT) கணக்கெடுத்து கொள்ளப்படாத சம்பளத் தொகை (Salary Income), விவசாய வருமானத்தையும் (Agricultural Income) சேர்க்க வேண்டும் என்கிற பரிந்துரை முன்வைத்தது. இதனை எதிர்த்து இந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தாமல் தடுத்து நிறுத்தியது விடுதலைச் சிறுத்தைகள் கட்சி.

• மத்திய அரசின் வங்கி தேர்வில் EWS என்கிற உயர் சாதியில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு 10% இடமளிக்க, SC இடஒதுக்கீட்டை 15% லிருந்து 13% என்றாக்கி அதில் 2% குறைத்தும், ST இட ஒதுக்கீட்டை 7.5% லிருந்து 6% என்றாக்கி அதில் 1.5% குறைத்தும், OBC இடஒதுக்கீட்டை 27% லிருந்து 21% என்றாக்கி அதில் 6% குறைத்தும் EWS ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த முற்பட்டபோது மத்திய அரசின் நடவடிக்கையை எதிர்த்துப் போராடி எஸ்சியின் 2%, எஸ்டியின் 1.5%, ஓபிசியின் 6% இடஒதுக்கீட்டை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மீட்டெடுத்தது.

• புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களால் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை நடைமுறையில் இருக்கும் எஸ்சி, எஸ்டி, ஓபிசி மற்றும் சிறுபான்மை யின மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப் திட்டத்தை மத்திய பாஜக அரசு நிறுத்த முற்பட்டது. இதனை எதிர்த்துப் போராடி தற்போது எஸ்சி, எஸ்டி, மாணவர்களுக்கு ரூ.59049 கோடி ஒதுக்கியுள்ளது மோடி அரசு, ஓபிசி மற்றும் சிறுபான்மையின மாணவர்களுக்கும் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த விடுதலை சிறுத்தைகள் கட்சி போராடி வருகிறது.

## 2006 சட்டமன்றத் தேர்தலில் கிடைத்த வாய்ப்பில் நிகழ்த்திய சாதனைகள்

தமிழக மக்கள் 2006 சட்டமன்றத் தேர்தலில் அளித்த மிகக் குறைந்த அங்கீகாரத்தைக் கொண்டு இமாலய சாதனைகளைப் படைத்தது விசிக, தமிழக மக்கள் நம்பிக்கையோடு அளித்த வாய்ப்பை பல திட்டங்களை நிலைவேற்றத் துணைநின்றிருக்கிறது. விசிகவின் முன் முயற்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் சில தமிழக மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது எமது கடமை, அவை:

2006ஆம் ஆண்டு நெல்லையில் நடைபெற்ற விசிகவின் மண்ணுரிமை மாநாட்டில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூரை வீடுகளை காரை வீடுகளாக மாற்ற வேண்டும் என்றும், ஏழை விவசாயிகளுக்கு 5 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும் என்றும் கோரியிருந்தோம், பின்பு எமது கட்சியின் சார்பில்; சட்ட மன்றத்தில் குரல் கொடுத்தின் விளைவாய் தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு

• இலவச கான்கிரீட் வீடுகள்,

• 2 ஏக்கர் விளை நிலங்கள் மற்றும்

• 3 சென்ட் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டங்களை அறிவித்தார். இது விசிகவின் அரசியல் முயற்சியினால் விளைந்த பயன்.

• புதிரை வண்ணார் நல வாரியம் அமைத்தது.

• திருநங்கைகளுக்கென்று தனிநல வாரியம் அமைத்தது.

• திருநங்கைகளுக்கு வாக்குப்பதிவு உரிமையைப் பெற்றுத் தந்தது.

• தலித் மக்கள் பெற்று அல்லல்பட்ட தாட்கோ கடன்களைத் தள்ளுபடி செய்ய வைத்தது.

• நரிக்குறவர்களுக்கென்று தனிநல வாரியம் அமைத்தது.

• அரசு பதிவுபெற்ற பாரம்பரிய மருத்துவர்களுக்குத் தனிநல வரியம் அமைத்து தந்தது.

• நாட்டுப்புறக் கலைஞர்களுக்கென்று தனிநல வாரியம் அமைத்தது.

• ஈழத்தமிழ் அகதிகளுக்கான பணக்கொடையை 2 மடங்காக உயர்த்தியது.

• நாட்டுப்படகு மீனவர்களுக்கு மாதம் 300 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வழிவகை செய்தது.

• உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பணியாளர்களுக்கு ஊதியம் 500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக மாற்றியது.

• 10 ஆண்டுகளானத் தொகுப்பு வீடுகளைச் சரிசெய்ய ரூ.15,000 வழங்க வழிவகை செய்தது.

• பஞ்சமி நிலங்கள் மீட்புக்குத் தனி ஆணையம் அமைக்க வழிவகை செய்தது.

• இந்தியாவிலேயே முதல்முறையாக ஒவ்வொரு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் போதும் எஸ்சி மக்களின் சதவீத அடிப்படையில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கு வழிவகை செய்தது.

• உள்ளாட்சித் தேர்தலில் 2001ஆம் ஆண்டு மக்கள்தொகை அடிப்படையில், தலித் மக்களுக்கான தொகுதிகளை உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்து ஒரு நகராட்சிக்கு உட்பட்ட 300க்கும் மேற்பட்ட கூடுதல் இடங்கள் கிடைப்பதற்கு வழி செய்தது.

• எஸ்சி / எஸ்டி மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவருக்குத் தொழிற்கல்வி பயிலும்போது அவர்களுக்கான கல்வி கட்டணத்தை அரசே செலுத்த வேண்டும். முதல் தலைமுறையாக படிக்கும் பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணத்தை அரசே செலுத்தும் என்கிற திட்டம் வருவதற்கு வழி வகுத்தது.

• தொழிற்கொள்கை உருவாக வழி செய்தது.

• மின்னணு கழிவுக் கொள்கையை (கம்ப்யூட்டர், செல்போன்) உருவாக்க வேண்டுமென்று வலியுறுத்தி, அதற்கான கொள்கையை உருவாக்க வழி செய்தது.

• புவி வெப்பமயமாதல் ஆபத்தைக் குறைக்கவும், மின்சார பற்றாக்குறையைப் போக்கவும் அரசு அலுவலகங்களில் குண்டு பல்புகளைப் பயன்படுத்தக் கூடாது என்று வலியுறுத்தி, தற்போது அரசு அலுவலகங்களில் எல்இடி பல்புகளைப் பயன்படுத்த வழி செய்தது.

• பயிர் பாதுகாப்பு கர்நாடக, ஆந்திர மாநிலங்களை சமன்படுத்தி பார்க்கும்போது தமிழகம் பின்தங்கிய உள்ளது. பயிர் பாதுகாப்புத் திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கச் செய்தோம். அதுமட்டுமின்றி அந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டத்தில் வட்டம் பிளாக் என்பது அடிப்படை அலகாக வைக்கப்பட்டிருந்தது. அதை மாற்றி கிராமம் என்பதை ஒரே அளவாகக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி அதையும் இன்று நடைமுறைப்படுத்த வழி செய்தது.

• திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று சொல்லி வலியுறுத்தியதன் காரணமாக இன்றைய இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் ஆண்டு தோறும் 40 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

• நூலகங்களுக்கு வாங்கும் நூல்களின் எண்ணிக்கையை உயர்த்தச் செய்தது.

இம்முறை வாய்ப்பளித்தால் இவற்றைப்போலவே தமிழக வளர்ச்சிக்கான இன்னும் பல முன்மாதிரித் திட்டங்களைச் செயல்படுத்திட விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பாடுபடும் என்று உறுதியளிக்கிறோம்.

**21.03.2021**
சென்னை

**தொல். திருமாவளவன்**
தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

# 2021 தேர்தல் வாக்குறுதிகள்

## சமூக நீதி

• தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள 69% விழுக்காடு இடஒதுக்கீட்டு முறை பாதுகாக்கவும்;

• மருத்துவப் படிப்பில் தமிழக அரசு, அகில இந்திய ஒதுக்கீடு (AIQ- All India Quota) மத்திய அரசின் தொகுப்பிற்கு, (Central Pool) 15% இடங்களை வழங்குவதை நிறுத்த வேண்டும். இதன்மூலம் அந்த இடங்களுக்கான பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான 50% இட ஒதுக்கீடு நிலைநிறுத்தவும்;

• இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும், சமூகநீதிக்கும் எதிரான EWS (Economically Weaker Section) முற்பட்ட சமூகத்தைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கான 10% இடஒதுக்கீட்டை தமிழகத்தில் உள்ள சில பல்கலைக்கழகங்களில் மத்திய அரசின் உதவிபெறும் பாடப்பிரிவுகள் எனச் சொல்லி நடைமுறைப்படுத்துகின்றனர். இதனை இரத்து செய்யவும், இனி இந்த EWS ஒதுக்கீடு தமிழகத்தில் ஒருபோதும் நடைமுறைப்படுத்தாமல் இருக்கவும்;

• தனியார் துறையில் இடஒதுக்கீட்டினை விரிவுபடுத்துவதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவர மத்திய அரசை வலியுறுத்துவதோடு, மேலும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும் இடஒதுக்கீடு வழங்க ஆவண செய்யவும்;

• சமூகநீதியை ஒழிப்பதற்கு எதிராக அண்மைக் காலமாக இந்துத்துவா சக்திகள் சதி செய்து வருகின்றன. இதனைத் தடுக்க ஜனநாயக முற்போக்கு சக்திகளும், பிற்படுத்தப்பட்ட, எஸ்சி / எஸ்டி மக்களும் சிறுபான்மை மக்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வலுவான முயற்சிகள் மேற்கொள்ளவும்;

• அரசுத்துறைகளில் மாநில அரசால் செயல்படுத்தப்படும் இடஒதுக்கீடு முறை பற்றிய வெள்ளையறிக்கை அவ்வப்போது வெளியிடச் செய்யவும்;

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

## மதவெறி / சாதி வெறி சக்திகளை எதிர்ப்போம்

• மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள பாஜக அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி மதவெறி நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வருகிறது. ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்துத்துவா அமைப்புகள் இந்திய நாட்டின் பாரம்பரிய பன்முகத் தன்மைக்கு விரோதமாக மதவெறி கருத்துகளைப் பரப்பி மதக் கலவரங்களைத் திட்டமிட்டு உருவாக்கி வருகின்றன. சிறுபான்மை மக்கள் அச்சத்துடன் வாழும் நிலை உருவாகியுள்ளது. கருத்துச் சுதந்திரத்தின் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. மதவெறி சக்திகளை எதிர்த்து வலுவான மக்கள் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வோம்.

• மக்கள் ஒற்றுமையைப் பேணிக்காத்து அனைத்து மதங்களைச் சார்ந்த மக்களும் சகோதரத்துவத்துடன் இணைந்து வாழும் மாநிலமாக தமிழகத்தைத் திகழச் செய்து 'மதச்சார்பின்மையைப் பாதுகாப்போம்.

- அறிவியல் பூர்வமான, முற்போக்கு பகுத்தறிவு கருத்துக்களை மக்கள் மத்தியில் முழு வீச்சுடன் எடுத்துச் செல்வதுடன் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்போம். சிறுபான்மை மக்கள் அச்சமின்றி வாழ்வதை உறுதிப்படுத்துவோம்.

- சாதிவெறி சக்திகளை எதிர்த்து, சகோதர உணர்வை வலுப்படுத்திட உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

- அதிகரித்து வரும் ஆணவக் கொலைகளைத் தடுத்திட தனிச் சட்டம் இயற்ற வலியுறுத்துவோம்.

- சாதி மறுப்பு திருமணம் புரிந்தோருக்கு அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை வழங்க வலியுறுத்துவோம்.

- சாதி மறுப்பு மணம்புரிந்த, தம்பதியினரைப் பாதுகாக்கவும் இதற்கெனத் தனி காவல்பிரிவு உருவாக்கப்படவும் வலியுறுத்துவோம்.

- எஸ்சி மக்கள் மீதான வன்கொடுமை தடுப்புத் திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வலியுறுத்துவோம்.

## ஏழு தமிழர் விடுதலை

இராஜிவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக்குரிய சராசரி கால அளவையும் தாண்டி, ஏறத்தாழ 30 ஆண்டுகளாகச் சிறையிலிருந்து வரும் நளினி, பேரறிவாளன், உள்ளிட்ட அனைத்து தண்டனைக் கைதிகளையும் தமிழக அரசு விடுதலைச் செய்ய வேண்டுமென வலியுறுத்தி வருகிறோம். அத்துடன், எந்த விசாரணையுமில்லாமல் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இலங்கைச் சிறையில் சிக்கி வாடும் தமிழக, கேரளா உள்ளிட்ட தென்னிந்தியர்களை இந்திய நீதிமன்ற விசாரணைக்கு மாற்றி, அனைவரையும் உடனே இந்தியாவுக்குக் கொண்டுவர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் விசிக தொடர்ந்து பாடுபடும்.

## தமிழக மீனவர்கள் பாதுகாப்பு மற்றும் கச்சத் தீவு மீட்பு

தமிழக மீனவர்கள் மீது இலங்கை இராணுவத்தாலும், இந்தியக் கடலோர பாதுகாப்புப் படையினராலும் கடல் எல்லை பாதுகாப்பு எனும் பெயரில் தாக்குதல்களும் ஒடுக்குமுறைகளும் தொடர்கதையாகி வருகின்றன. கடல் வளத்தில் மீனவர்களுக்கென்று இருக்கின்ற இயற்கையான உரிமைகளைப் பறிக்கும்வகையில் இந்தியக் கூட்டரசின் கடல்சார் சட்டங்கள் உள்ளன. இச்சட்டங்கள் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். மேலும் சர்வதேச கடல் பரப்பில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கும் உரிமையை நிலைநாட்டும் வகையில் சிறப்புச் சட்டம் இயற்றப்பட வேண்டும். தென்தமிழக மீனவர்களுக்குத் தொடர்ந்து அச்சுறுத்தலாக இருக்கும் இலங்கை அரசு மீது இந்தியக் கூட்டரசு பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டும். தமிழக மீனவர்களின் பாதுகாப்பையும் இந்திய கூட்டரசின் எல்லைப் பாதுகாப்பையும் கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்த ஒப்பந்தத்தையும் ரத்து செய்து, கச்சத்தீவை மீட்டுத்தர விசிக தொடர்ந்து பாடுபடும்.

## மாநில உரிமைகள்

- மத்திய, மாநில உறவுகள் சீரமைப்புக்கும், வலிமையான கூட்டாட்சி முறைக்கும் உடன் விளைவாக மாநில சுயாட்சி நிலைபெறத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும்;

• மத்திய, மாநில பொதுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தவிர ஏனையவை குறித்து சட்டமியற்றும் அதிகாரத்தை மத்திய அரசுக்கே அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. இந்த அதிகாரத்தை மாநில அரசின் வரம்புக்குள் கொண்டு வரவேண்டும் குறிப்பாக, இத்தகைய இனங்களின்மீது வரிவிதிப்பு அதிகாரத்தை மாநில அரசிடம் வழங்கவும்;

• தற்போது திரட்டப்படும் மத்திய வரிகளிலும் கூடுதல் வரிகளிலும் மாநிலங்களுக்கு எழுபத்தைந்து விழுக்காடு வழங்கவும்;

• மாநில அரசின் கடன் சுமைகளை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவும்;

• தமிழ் உட்பட அங்கீகரிக்கப்பட்ட 22 மொழிகளையும் மத்திய அரசின் நிர்வாக மொழியாக அறிவிக்கவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தொடர்ந்து போராடும்.

• ஒவ்வொரு மாநில எல்லைகளுக்கும் உள்ள கனிம வளங்கள் மீதுள்ள உரிமை அந்தந்த மாநிலங்களுக்கே உரிய உயிர் ஆதார உரிமையாகும். இத்தகைய கனிம வளங்களால் மாநிலங்கள் பயன்பெற வேண்டுமெனில், அவற்றின் மூலமான வருவாயை மாநில அரசுகளே பயன்படுத்திக்கொள்ளவும் வகை செய்யப்பட வேண்டும். இதற்கு ஏதுவாக இந்தியக் கூட்டரசு கனிம வளங்களின் மீது செலுத்தும் மேலாண்மையை விலக்கிக்கொள்ளும் பொருட்டு, கனிம வளங்கள் மேலாண்மையை மாநில அரசுகளின் அதிகாரப்பட்டியலுக்கு மாற்றி அறிவிக்க வலியுறுத்துவோம்;

• மருத்துவம், உயர்கல்வி மற்றும் உயராய்வுக்கல்வி மத்தியில் ஆளும் காங்கிரசு தலைமையிலான கூட்டணி அரசு மாநிலங்களின் உணர்வை மதிக்காமல் உயர்கல்வி மற்றும் மருத்துவக்கல்வி தொடர்பான அதிகாரங்களை மத்தியில் குவித்துக்கொள்ளும் நோக்கோடு உருவாக்கியிருக்கும் மருத்துவம், உயர்கல்வி மற்றும் உயராய்வுக்கல்வி தொடர்பான அமைப்புகளைக் கலைத்திட வலியுறுத்துவோம்;

• மத்திய அரசு வெளியுறவுக்கொள்கை தொடர்பான முடிவுகளை எடுக்கும்போதும் அண்டை நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும்போதும் சம்பந்தப்பட்ட மாநிலங்களில் உள்ள தேசிய இனங்களின் உரிமைகள் தொடர்புடையவையாக இருந்தால் அந்த தேசிய இனத்தைச் சார்ந்த மக்களின் கருத்தைக் கேட்ட பிறகே முடிவை எடுக்க வேண்டும். இதற்கு மாநில அரசு மட்டுமின்றி அங்கீகாரம் பெற்ற அனைத்து அரசியல் கட்சிகளும் இடம்பெறக்கூடிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்துவோம்;

• 1956ஆம் ஆண்டு நடந்த மாநிலங்கள் எல்லை வரையறையின் போது தமிழகத்தின் பல பகுதிகள், கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களோடு இணைக்கப்பட்டுவிட்டன. இதைத் தமிழ் மக்களின் இறையாண்மைக்கு எதிரான செயலாக விசிக கருதுகிறது. எனவே, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும், தேவிகுளம், பீர்மேடு, மூணாறு முதலிய பகுதிகளிலும், கர்நாடக மாநிலத்தில் சேர்க்கப்பட்டுள்ள கோலார் தங்கவயல் பகுதியிலும் பொதுவாக்கெடுப்பு நடத்தி, அவ்வாக்கெடுப்பின் முடிவின் அடிப்படையில் இப்பகுதிகள் வாழும் தமிழர்கள் விருப்பப்படி இப்பகுதிகள் தமிழ்நாட்டின் எல்லைக்குள் கொண்டுவரப்பட விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தொடர்ந்து போராடும்

## தமிழ்மொழி

• கல்வி என்பது உலகிலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் இயற்கையான அடிப்படை உரிமையாகும். ஒவ்வொருவரும் அவரவர் தாய்மொழியில் கல்வி கற்கவும் அதன்மூலம்

உலகைப்புரிந்துகொள்ளவும் சமூகத்துடன் சுமூகமாக கலந்துறவாடவும் சமூக வளர்ச்சியோடு தம்மை மேம்படுத்திக்கொள்ளவும் கல்வி அடிப்படையான ஓர் உரிமையாகும். தாய்மொழி வழியில் கற்பதும், கற்பிப்பதும் அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கும் என்பது உலகம் முழுவதும் பல்வேறு ஆய்வுகள் மூலம் நிறுவப்பட்டுள்ளது. இந்த அறிவியல் ஆய்வு முடிவுகளை இந்தியக் கூட்டரசு ஏற்றுக்கொண்டு எல்லா குடிமகனும் அவரவர் தாய்மொழி வழியில் முழுமையான கல்வி பெற இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தகுந்த காப்புகளை உருவாக்க வகைசெய்ய முதற்படியாக,

1. கல்வி மீது தனக்குள்ள அதிகாரத்தை இந்திய கூட்டரசு விட்டுக்கொடுக்கும் வகையில் கல்வித்துறையை முழுமையாக அரசமைப்புச் சட்டத்தின் பின் இணைப்பில் உள்ள பொதுப்பட்டியலில் இருந்து விடுவித்து மாநில அதிகாரங்களுக்கான பட்டியலில் இணைக்க வேண்டும்.

2. இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள 1620க்கும் மேற்பட்ட மொழிகளும் தமது இறையாண்மையைக் காத்துக்கொள்ளும் வகையில், அந்தந்த மொழிகளின் மீது பிற மொழிகளின் ஆதிக்கத்தை ஒழிக்கவும் மொழி இன நலன்களுக்கான தேசிய பேராயம் ஒன்று அமைக்கப்பட்டு, அதன் மூலம் 'தாய்மொழி வழிக்கல்வி' கண்காணிப்பிற்கும் பாதுகாப்பிற்கும் உட்படுத்த இந்திய அரசமைப்புச் சட்டத்தில் புதிய திருத்தம் கொண்டுவர விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தொடர்ந்து பாடுபடும்.

- தமிழகத்தில் தமிழ்மொழியைக் காக்கும் வண்ணம் தமிழ்ப்பெயர் ஏற்போருக்கு 'பெயர்மாற்ற அரசிதழ் பதிவிற்கு முழு கட்டண விலக்கு அளிக்கவும். தமிழ்ப் பெயரில்லாத திரைப்படங்களுக்கு இரட்டிப்பு வரி விதிக்கவும். வணிக நிறுவனங்கள் தமிழ்ப்பெயர் பலகைகள் வைப்பதை தமிழ்நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தவும்,

- ஆங்கில வழி மழலையர் வகுப்புகள், முற்றிலும் நீக்கவும்,

- தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாட்டு மீட்சிக்கும் தொண்டாற்றி வருகிற தாய்த் தமிழ் பள்ளிகளை அரசு உதவிபெறும் பள்ளிகளாக அறிவிக்கவும் முழுக்கட்டமைப்பு வசதிகளைச் செய்து தரவும்,

- மருத்துவம், பொறியியல், சட்டம் முதலிய உயர்கல்வி படிப்புகள் தமிழ்வழியில் வழங்கப்படவும்,

- தமிழகத்தில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனும் நிலையை எட்ட தமிழக அரசின் ஆட்சி மொழியாக தமிழ் இருப்பதுபோல, உயர்நீதிமன்றம் மற்றும் அனைத்து கீழமை நீதிமன்றங்களிலும் தமிழே வழக்காடு மொழியாக தமிழை சட்டப்பூர்வமாக அறிவிக்கவும்,

- தமிழை வழிபாட்டு மொழியாக நடைமுறைப்படுத்தவும்,

- தமிழ் செம்மொழி என்பதை இந்தியக் கூட்டரசின் பண்பாட்டுத்துறையின் பட்டியலில் இருந்து மனிதவள மேம்பாட்டுத்துறையின் பட்டியலில் சேர்த்து அறிவிக்கவும், அதன்மூலம் உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழுக்கு ஓர் இருக்கை அமைத்து, தமிழில் உள்ள அரிய இலக்கியங்களை உலக மொழிகளில் மொழிபெயர்க்கவும், அதைப் பதிப்பித்து வெளியிடவும்,

- மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட பன்னாட்டு தொழில் நிறுவனங்களில் தாய்மொழி வழிக் கல்வி கற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளித்திடவும்,

• தமிழகத்தில் தற்போது உள்ள அரசு நூலகங்கள் மேம்படுத்தப்படுவதுடன் புதிய நூலகங்கள் உருவாக்கப்படவும். நூலகங்களுக்குத் தேவையான பல்துறை நூல்கள் அவ்வப்போது முறையாக வாங்கப்படவும். அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம் சீரமைக்கப்படவும்,

• வெளி மாநிலத்தவர்கள் விரும்பும் மொழியில் தங்களது கல்வியைத் தொடர சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும்,

• மத்திய அரசு பணிக்கான அகில இந்திய நுழைவுத் தேர்வுகள் மற்றும் போட்டித் தேர்வுகள் தமிழில் எழுத உரிய நடவடிக்கை எடுக்கவும்,

• தமிழ்வழிக் கல்வி மற்றும் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு டி.என்.பி.எஸ்.சி., உள்ளிட்ட அனைத்துத் தேர்வு வாரியங்களிலும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கவும்,

• நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாத்திட, காலமாற்றத்தினூடாக உன்னதமாக வளர்த்திட நாட்டுப்புறவியல் பல்கலைக்கழகம் உருவாக்கவும் விசிக பாடுபடும்.

• கடல் கடந்து திரவியம் தேடல் என்பது தமிழர்களின் பொருளாதார வாழ்வில் ஒரு பிரிக்கமுடியாத அம்சமாக இருந்து வருகிறது. எனவேதான் கடல் கடந்த நாடுகளில் இலட்சக்கணக்கான தமிழர்கள் வெளிநாடுகளில் பணிபுரிந்து வருகின்றனர். அப்படி சென்ற அவர்கள் அந்நிய நாட்டில் பணிகளை இழந்து, உயிருக்கும் பாதுகாப்பின்றி இருக்கின்ற நிலையில் அந்நிய நாடுகளில் அவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரே நம்பிக்கை இந்திய தூதரகங்கள்தான். ஆனால் இந்திய தூதரகங்கள் வெளிநாடுவாழ் பணிபுரியும் தமிழர்களுக்கு சரிவர உதவுவதில்லை என்பதுடன், தமிழர்களிடம் பாராமுகமாய் பொறுப்பற்று நடந்து கொள்கின்றன என்கின்ற அதிர்ச்சி தரக்கூடிய தகவல்கள் வருகின்றன. இதற்குக் காரணம் அந்தத் தூதரகங்களில் பெரும்பாலும் தமிழர் அல்லாதவர்கள் பணிபுரிவதுதான். மொழி வேற்றுமைகளால் அவர்கள் இப்படிக் கடுமையாக நடந்துகொள்கின்றனர். வெளிநாடுவாழ் மற்றும் பணிபுரியும் தமிழர்களின் நலனைக் காக்கும்வகையில் தமிழர்கள் பெரும்பான்மையாக பணி செய்யும் நாடுகளில் உள்ள தூதரகங்களில் தமிழ் அதிகாரிகள் பெருமளவில் நியமிக்கவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அணைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

## வேளாண் நலன் மற்றும் நிலப் பாதுகாப்பு

• விவசாயிகளுக்கும், விவசாய தொழிலாளர்களுக்கும் எதிரான மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களைத் தமிழகத்தில் நடைமுறைப்படுத்துவதை தடுக்க விசிக தொடர்ந்து போராடும்.

• தமிழகத்தில் உள்ள நிலங்கள் அனைத்தும் இன்றைக்கு கேட்பாரின்றி வடஇந்தியர்கள், அன்னிய நாட்டு முதலாளிகள் மற்றும் இவர்களின் நிறுவனங்களால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், வேளாண் விளைநிலங்களும் 'ரியல் எஸ்டேட்' என்ற பெயரில் ஊக வணிகத்திற்கு உட்படுத்தப்பட்டு, வீட்டு மனைகளாகவும் தொழில் வளாகங்களாகவும் மாற்றுவதாக் கூறி தரிசாக்கப்பட்டு வருகின்றன. இதனால் வேளாண் தொழில் தழைக்கும் என்பதற்கான நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாய் மறையத் தொடங்கிவிட்டது. இந்நிலை தொடருமானால் சமூக உணவுச் சங்கிலி என்பது அற்றுப்போய்விடும் என்கிற மாபெரும் அச்சுறுத்தல் பெருகிவருகிறது. எனவே,

தமிழக நிலங்களின்மீது தமிழ்நாடு அரசு தன்னுடைய சட்டப்பூர்வமான ஆளுமையைக் கொண்டுவர வேண்டும். அதற்கு பினவரும் ஐந்து பரிந்துரைகளை முன்வைத்து விசிக போராடும்.

1. தமிழகத்தில் உள்ள அனைத்து நிலங்களையும் மாநில அரசின் மேலாண்மைக்கு உட்படுத்தும் வகையில் 'தமிழக நில ஆணையம்' ஒன்று உருவாக்கப்படவும். இவ்வாணையத்தின் வழியாக விளைநிலங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கான நிலங்கள் அனைத்தும் பட்டியலிடப்பட்டு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். இவ்வகை நிலங்களின் விற்பனை மற்றும் பரிமாற்றங்கள் எதுவாயினும் இவ்வாணையத்தின் இசைவின்றி இறுதி செய்யப்படக்கூடாது. இவ்வாணையத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிகள், சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் முதலானோர் இடம் பெற்றிருக்கவும்.

2. விவசாய நிலங்களை விவசாய பயன்பாடுகளுக்கு மட்டும் விற்கவோ, வாங்கவோ முடியும் என்ற சட்டத்தை தமிழ்நாடு அரசு கொண்டுவரவும். நிலங்கள் தொடர்ச்சியாக வட இந்திய, வெளிநாட்டு நிறுவனங்கள் கைப்பற்றுவதைத் தடுக்க, சீனாவில் நிகழ்ந்த அந்நிய நிறுவனங்களின் நிலப்பறிப்பு மோசடியைப் படிப்பினையாகக் கொண்டு நிதி மூலதன நோக்கிலான தமிழ்நாடு அரசின் தொழிற்கொள்கை மாற்றியமைக்கப்படவும். பெரிய அளவிலான தொழில் முனைவுகள், மாபெரும் பொருளாதார அச்சுறுத்தல்களை உருவாக்கியுள்ள இச்சூழலில், நகர்புறம்சார்ந்த தொழில்துறை வளர்ச்சி என்பது புதுவித காலனியத்தை உருவாக்கியுள்ளது. இது, தமிழர்களின் வாழ்வுரிமையை கேள்விக்குறியாக்கியுள்ளதால், பெருநகர் சார்ந்த தொழில்கள் பரவலாக்கப்படவும்.

3. தமிழ்நாடு முழுவதும் தொழில் முனைவுகள் பரவலாக்கப்படும் நிலையில் அதற்கு 'நில ஆணையம்' அங்கீகரிக்கும் தரிசு நிலங்களையே பயன்பாட்டிற்காக அனுமதிக்கப்படவும். மூன்று ஆண்டுகளுக்கு மேல் தரிசாகப் போடப்பட்டு ரியல் எஸ்டேட்டு தேவைக்கு மாற்றப்படுவதை தடுக்க கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படுவும்

4. கோயில் நிலங்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்படவும். நாட்டுடமையாக்கப்பட்ட அந்நிலங்கள் ஏழைத் தமிழ் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவும். அதற்கு ஏதுவாக இந்திய அறக்கட்டளைகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத்துறை சட்டங்களில் திருத்தங்கள் ஏற்படுத்தவும்,

5. தமிழகத்தின் வேளாண் தொழிலைச் சீர்குலைத்து, விதைகள் மற்றும் உணவு உற்பத்தி முறையை ஏகாதிபத்திய மூலதன மற்றும் விதை நிறுவனங்களை சார்ந்து இருக்கும்படி உருவாக்கப்பட்டதன் விளைவாக தமிழகத்தில் வேலிக் கருவேலம் மரங்கள் விதைக்கப்பட்டன என்பதை சுற்றுச்சூழல் ஆய்வுகள் நிறுவியுள்ளன. இதனால் தமிழகத்தின் தென்கிழக்குக் கடலோர மாவட்டங்களின் ஒட்டுமொத்த வேளாண் நிலங்களும் தரிசாகிப் போயின. மேலும் இது தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் பரவிக் கிடக்கிறது எனவே, தமிழக விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கவும், நிலத்தடி நீராதாரத்தைப் பாதுகாக்கவும் 'வேலிக்கருவேலம் மரங்கள் ஒழிப்பு சிறப்பு திட்டம்' உருவாக்க விசிக தொடர்ந்து பாடுபடும்.

மேலும் பின்வரும் திட்டங்களை நடைமுறைப்படுத்த விசிக முயற்சிகளை மேற்கொள்ளும்

- வேளாண்மையை மேம்படுத்த வேளாண்மைக்கான தனி வரவு செலவு திட்டம்
- பன்னாட்டு நிறவனங்களால் தமிழகத்திலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும்

புகுத்தப்படும் மரபணு மாற்றப்பட்ட விதைகள் விவசாயத்தையும் விவசாயக் குடிகளையும் தொடர்ந்து அச்சத்தில் ஆழத்தி வருவதால் மரபணு விதைகள் முழுமையாக விலக்கல் முறை, பாரம்பரிய சாகுபடி விதைகள் விவசாய முறைகள் பாதுகாத்தல்,

- உழவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வருகிற இலவச மின்சாரம் எந்தக் காரணம் கொண்டும் நிறுத்தப்படாமலிருக்கவும்,

- 60 வயதை எட்டிய அனைத்து விவசாயிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கவும்,

- வேளாண்துறையில் குறைந்தப்பட்ச கூலியாக இருபாலருக்கும் ரூபாய் 500 நிர்ணயிக்கவும்,

- ஏரிகள், குளங்கள் குறைந்தது 6 அடிக்கு தூர்வாரி ஆழப்படுத்தப்படவும் நிலங்களுக்கு இயற்கை உரத்தை சேர்க்கவும் கிராம விவசாயிகள் விவசாயப் பயன்பாட்டிற்கு இலவசமாக மண் வாரிக்கொள்ள அந்தந்த கிராம பஞ்சாயத்து சபையே தீர்மானித்துக்கொள்ளவும் வலியுறுத்துவோம்.

- அனைத்துவகை தானியங்களுக்கான நியாய விலையை அரசே நிர்ணயிக்கவும்,

- இடுபொருட்களின் விலை அதிகரித்துள்ளதால் கரும்பு டன்னுக்கு ரூபாய் 2500 என்றும் நெல் டன்னுக்கு ரூபாய் 1500 டன் என்றும் நிர்ணயிக்கவும்,

- தொழிற்சாலைகளுக்கான மின்வெட்டு அறிவிக்கப்பட்ட நேரம் தவிர மற்ற நேரங்களில் தொடர்ந்து மின் வினியோகம் நடைபெறவும்,

- சொட்டு நீர் பாசன முறையை மேம்படுத்த விவசாயிகளுக்கு முழு மான்யம் அளிக்கவும்,

- நீர் மேலாண்மையை மேம்படுத்தவும், அதைப்பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளவும்,

- அரசு கால்நடைப் பண்ணைகள் சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைக்கவும்,

- நாட்டு இனப்பசுக்கள், ஆடுகள், எருமைகள் வளர்ப்பை ஊக்கப்படுத்தவும்,

- மாதிரிப் பண்ணைகள் ஒன்றியங்கள் தோறும் உருவாக்கவும்

- சிறு, குறு உழவர்கள் நிலமற்ற விவசாயிகளுக்குக் கால்நடைகள் வழங்கலைப் பரவலாக்கவும்,

- நாடு முழுதும் மரங்கள் வளர்ப்பைப் பெருக்க மர நாற்றுகள் உருவாக்கும் திட்டத்தை பெண்கள் சுய உதவிக் குழுக்களிடம் வழங்கவும்,

- சிறு ஏரிகள், குட்டைகளில் மீன் வளர்க்க சுய உதவிக் குழுக்களை அனுமதிக்கவும்,

- பனை வளர்ப்பை ஊக்குவிக்க தனித்திட்டம் கொண்டுவரவும்

- ஒன்றியங்கள் தோறும் விவசாய ஆலேசனை நடுவங்கள் அமைக்கவும்

- மாவட்ட அளவில் உழவர் நல மையங்கள் அமைக்கவும்

- மாநில உயிரியல் பன்மய வாரியம் அமைக்கவும்

- தேசியமயமாக்கப்பட்ட மற்றும் கூட்டுறவுக் கடன்கள் தள்ளபடி செய்யவும்

- நிலுவையில் உள்ள மற்றும் தவணை தவறிய அனைத்துவகை விவசாயக் கடன் மற்றும் நகைக் கடன்களையும் ரத்து செய்யவும்

- 100 நாள் வேலை வாய்ப்பை வேளாண்மைக்கும் சமுகக் காடுகள் வளர்ப்பு திட்டத்திற்கும் நீட்டிப்புச் செய்து 200 நாளாக உயர்த்தவும்

- உழவுத்தொழிலுக்கு எளிதாக கடன் பெறும் வகையில் கூட்டுறவு வங்கி நடைமுறைகளில் திருத்தவும்

- நகர்ப்புற மாணவர்களிடையே விவசாயம் குறித்த விழிப்புணர்வை உருவாக்க விவசாய சுற்றுலாவை அறிமுகப்படுத்தவும்

- அனைத்து வகுப்பு நிலைகளிலும் விவசாய பாடத்தை அறிமுகப்படுத்தவும்

- சிறு, குறு விவசாயிகளின் விளைபொருட்களின் விளையை அவர்களே தீரமானிக்கும் வகையில் உழவர் சந்தைகளை ஒன்றியங்கள் தோறும் அமைக்கவும்,

- கிராமங்களில் எரி சாணக் கிணறுகள் அமைத்து வீடுகளுக்கு சமையல் எரி வாயு விநியோக தொழிலைத் தொடங்க பெண்கள் சுய உதவி குழுக்குளுக்குப் பயிற்சியும் மான்யமும் வழங்கவும், விசிக தொடர்ந்து பாடுபடும்.

## நீர்வள மேலாண்மை

தமிகத்தின் நீர் வளத்தை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் விசிக பின்வரும் திட்டங்களுக்கு தொடர்ந்து பாடுபடும்

- ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநில எல்லைக்குள் ஓடும் நதிகள் அந்தந்த மாநிலத்தின் ஆளுகைக்கு உட்படும், அதற்கு முன்னோட்டமாக தமிழக அரசு தமிழக எல்லைக்குள் ஓடும் நதிகளைப் பாதுகாக்கும் வகையிலும் நீர்வள ஆதாரங்களைப் பாதுகாக்கும் வகையிலும் சட்டப்படி செயல் அதிகாரம் பெற்ற நதிகள் மற்றும் நீர்வள பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்படவும்

- ஒன்றுக்கும் மேற்பட்ட மாநிலங்களுக்கிடையே ஓடும் நதிகள் அனைத்தும் இந்திய கூட்டரசின் உடைமையாக்கப்பட வேண்டும். அதற்கு ஏதுவாக, மாநிலங்களுக்கிடையே ஓடும் நதிகள் அனைத்தையும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பின் இணைப்பில் கூட்டரசின் பட்டியலில் அறிவிக்கவும்.

- ஆற்றுநீர் சிக்கல்களைக் கையாள அனைத்துக் கட்சியினர் கொண்ட உயர்நிலைக்குழு அமைக்கப்படவும்.

- ஆறுகள், நீர் நிலைகள், நீர்வழிகள் ஆகியன இயற்கை அன்னையின் உயிர்நாடிகள் இவற்றின் இயற்கைத் தன்மையில் எந்த ஒரு குறைபாடு ஏற்பட்டாலும் அது நிகழ்காலம் மற்றும் எதிர்கால சந்ததியைக் கடுமையாக பாதிக்கும். எனவே ஆறுகள், கனிமவள வரையறையில் இருந்து நீக்கப்பட வேண்டும். ஆறுகளில் மணல் அள்ளுவது தடை செய்யப்படவும்,

• மணலுக்கு மாற்றான பொருளை மக்களிடையே பிரபலப்படுத்த வேண்டும். எம்.சாண்ட் (Manufactured Sand - உற்பத்தி செய்யப்படும் மணல்) கூட மலைகளைத் தகர்த்து இயற்கை வள சுரண்டலுக்கு வழி வகுக்கிறது. எனவே கட்டுமானங்களில் மணலுக்கு மாற்றாக பித்தளைகழிவுகள் (COPPER SLAG), இரும்பாலை இரும்புத்துகள் கழிவுகள் (FOUNDRY SAND), அனல்மின் நிலைய சாம்பல் (FLY ASH), பழைய கட்டிடங்கள் இடிப்பு கழிவு (CONSTRUCTION DEMOLITION WASTE) ஆகிய பொருட்களைப் பயன்படுத்தப்படும் கட்டுமானங்களை ஊக்கப்படுத்தும் வகையில் திட்டம் வகுத்திடவும்,.

• ஆறுகளிலிருந்து மணல் கொள்ளயடிப்போர் மீது ஆயுள் தண்டனை வழங்கக்கூடிய அளவில் சட்டங்கள் கடுமையாக்கப்படவும்,

• ஏரிகள் மற்றும் குளங்கள் போன்ற நீர் நிலைகளில் கருவேல மரங்கள் வளர்ப்பது போன்ற நீர் வள ஆதாரங்களை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை முற்றிலும் தடுக்கவும்

• வெள்ளநீர் வீணாகிப் போகாமல் சேமிக்கும் விதமாக ஏரிகள் குளங்களில் தூர்வாரி ஆழப்படுத்தவும் பாசனக் கால்வாய்களை மேம்படுத்த சிறப்புக் கவனம் செலுத்தவும்,

• தனியார் ஆக்கரமிப்புகளிலிருந்து ஏரிகள், குளங்களைப் பாதுகாக்க உள்ளாட்சி அமைப்புகளுக்கு விழிப்புணர்வை உருவாக்கவும்,

• சிறிய நதிகள் அனைத்திலும் 5 கிலோ மீட்டர் ஒன்றுக்கு வீதம் சிறியத் தடுப்பணைகள் கட்டி நிலத்தடி நீரையும் மணல் வளத்தைப் பாதுகாக்கவும்,

• பெரிய ஆறுகளில் 10 கிலோ மீட்டர் இடைவெளியில் கதவணைகள் கட்டவும் (காவேரி மற்றும் கொள்ளிட ஆறுகளில் குளித்தளை முதல் கும்பக்கோணம் வரை 17 கட்டமுடியும் என ஆய்வுகள் தெரிவிக்கிறது. கடலை ஒட்டிவரும் ஆறுகளில் தடுப்பு அணைகள் கட்டி நிலத்தடி நீர் உப்பாவது தடுக்கப்படவும், கிராமங்கள்தோறும் குடிநீர் விநியோகத்தைப் பெருக்க தொகுதி அளவிலான கூட்டுக் குடிநீர் திட்டங்கள் அருகில் உள்ள நீர் நிலைகளுக்கு ஏற்ப உருவாக்கவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தொடர்ந்து போராடும்

## சுற்றுச் சூழல்

• சுற்றுசூழலுக்குப் பெரும் கேட்டை உருவாக்கக்கூடிய, வருங்கால தலைமுறையினர் வாழ்க்கை நலனை ஒட்டுமொத்தமாக சீரழிக்கக்கூடிய EIA - 2020 என்னும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சட்டம் - 2020ஐ நடைமுறைப்படுத்தாமல் தடுத்திட,

• தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுள்ள ஸ்டெர்லைட் நாசகர நச்சு ஆலையை நிரந்தரமாக அகற்ற,

• மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குள்ளாக்கும், சென்னை பெருநகருக்கு பேராபத்தை ஏற்படுத்தக்கூடிய, அதானியின் காட்டுப்பள்ளி துறைமுக திட்டத்தை முற்றிலுமாக கைவிட,

• திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் முழு அளவில் செயல்படுத்த, மருத்துவக்கழிவுகள் (Bio Medical Waste) மற்றும் மின்னணுக்கழிவுகளைப் (e-Waste) பாதுகாப்பாக அகற்றுவதும், மறுசுழற்சி (Recycle) செய்வதும் சுற்றுச்சூழல் துறையின் இன்றியமையாதது இதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்திட்டங்களை வகுக்க,

• தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சட்ட அதிகாரம் கொண்ட அமைப்பாக

மாற்றப்பட அரசு, பொதுத்துறை, தனியார் துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகளிலும் முறையான மாசுக் கட்டுப்பாடு ஆய்வு நடத்த,

• சாயத் தொழிற்சாலைகளின் கழிவு நீரை சுத்திகரிக்க பொது சுத்திகரிப்பு நிலையங்களை (Common Treatment Plant) அரசு ஏற்படுத்த,

• தமிழ்நாட்டில் உள்ள ஜவுளி மையங்களை ஒருங்கிணைத்து இரசாயனக்கழிவுகளால் மாசடைந்த நீரிலிருந்து இரசாயனக்கழிவுகளை முற்றிலுமாக நீக்கிவிட்டு, கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்படுத்தாதவாறு தண்ணீர் முற்றிலுமாக சுத்தப்படுத்தப்பட்டுள்ளதை 100 விழுக்காடு அறிவியல்பூர்வமாக உறுதிபடுத்திக் கொண்டு, கடலில் கலக்கவிடும் திட்டத்தை அமலாக்க,

• தொழிற்சாலைகளின் புகைபோக்கி மூலம் வெளியேற்றப்படும் புகையின் மாசு தொடர்ச்சியாக கண்காணிக்கவும் (Air Quality Index). வாகனங்கள் வெளியேற்றும் புகை மற்றும் ஒலி ஆகியவை ஒரு கட்டுபாட்டுக்குள் பராமரிக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தவும்,

• தண்ணீர் வணிகத்திற்காகவும், மென்பானங்கள் தயாரிப்புக்கும் பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் நிலத்தடி நீர், ஆற்று நீர் உறிஞ்சப்படுவதைத் தடுத்திட,

• அண்டை மாநிலங்களிலிருந்து மருத்துவக் கழிவுகளும், மின்னணுக் கழிவுகள் மற்றும் இதர கழிவுகளும் தமிழக எல்லையில் கொட்டப்படுவதைத் தடுக்க உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள,

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அணைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

## பெண்கள் நலன்

• பெண்களுக்கு 33 விழுக்காடு அமல்படுத்தப்படவும், பின்னர் அதை 50 விழுக்காடாக உயர்த்திடவும்

• ஆரம்ப கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை அனைத்துப் பெண்களுக்கும் இலவசமாக்கவும்

• மாநில மகளிர் ஆணையம் முறையாக இயங்கவும் அதன் பரிந்துரைகளை செயல்படுத்தவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும். இது குறித்த அறிக்கை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யவும்

• பாலியல் வன்கொடுமைகள் தடுப்பு, மகளிர் உரிமை, பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் குறித்து அரசு நிர்வாகம், நீதித்துறை, காவல்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் உரிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதோடு, பாலியல் நிகர்நிலை கண்ணோட்டம் குறித்து துறைசார்ந்த பயிற்சியளிக்கவும்

• பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள், சட்டவிரோதமாக 8 மணி நேரத்திற்கும் மேல் வேலை செய்திட நிர்ப்பந்தப்படுத்துவதைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கவும்

• பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்திட 2013இல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் புகார் குழுக்கள் அமைக்கவும்

• தமிழகத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு தேசிய வங்கிகள் வழங்கியுள்ள கடன்களை ரத்து செய்து அவற்றை மாநில அரசே செலுத்தவும்

• மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வழங்கவும். தற்போது மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு தனியார் நுண்நிதி நிறுவனங்கள் வழங்கிய கடனுக்கு அதீத வட்டி வசூல் செய்வதை சட்டப்படியான வட்டி அளவாகக் குறைக்கவும்

• திருமண உதவித்தொகை அனைவருக்கும் ரூ. ஒரு லட்சமாக உயர்த்தி வழங்கவும்,

• அனைத்து உதவித்தொகையும் ரூ.5000/ ஆக உயர்த்தப்பட்டு, சேவை உரிமை சட்டத்தின் மூலம் லஞ்சமின்றி வழங்கவும்

• மாநில மகளிர் ஆணையத்தின் சுயேச்சையான செயல்பாடு உறுதி செய்யப்பட்டு, அதன் பரிந்துரைகள் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, உரிய நிதி ஒதுக்கீடு செய்யவும்

• பாலியல் வல்லுறவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, மருத்துவ உதவி துவங்கி வழக்கு உதவி வரை அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கச் செய்யும் விதத்தில் உதவி மையங்கள் அமைக்கவும் முதல் கட்டமாக மாவட்ட அளவில் உருவாக்கவும்

• பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தலைத் தடுக்க புகார் குழுக்கள் அமைக்கவும்

• பெண்களுக்கான உடற்பயிற்சி கூடங்கள் அமைக்க, அனைத்து மாநகராட்சிகளிலும் வார்டுக்கு ஒன்று என்ற முறையில் உடற்பயிற்சி கூடங்கள் ஏற்படுத்தவும்

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அணைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

## திருநங்கையர் நலன்

• கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் திருநங்கையருக்கு இடஒதுக்கீடு வழங்கிட உரிய முயற்சிகள் மேற்கொள்ள,

• திருநங்கையர்கள் பாதுகாப்பாக குடியிருப்பதற்கு தனியாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தர, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## தலித் மக்களின் நலன்

• தலித் பொருளாதார மேம்பாட்டுக்காக தலித்துகள், பழங்குடிகள் மேப்பாட்டு வங்கி ஒன்றைத் தொடங்கி அதன்மூலம் குறைந்த வட்டியில்லாமலும் எளிய முறையிலும் அனைத்து வகையான தொழில்களுக்கும் நிபந்தனையின்றி தொழில் கடன்கள் வழங்கப்பட வேண்டும்.

• தாட்கோ கடன் உதவித்திட்டத்தில் வங்கிகளைத் தவிர்த்து முழுக்கடன் தொகையும் தாட்கோ மூலமே வழங்கப்பட வேண்டும்.

• தாட்கோ கடன்களை அனுபவித்து வரும் பினாமிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- தாட்கோ திட்டத்தின்கீழ் தலித் மக்களுக்கு வழங்கப்பட்ட தொழிற்கடன்கள், வங்கிக்கடன்கள் மற்றும் தலித் மாணவர்களுக்காக வழங்கப்பட்ட கல்விக் கடன்கள் உள்ளிட்ட அனைத்துக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டும்.

- தமிழக அரசு அறிவித்த 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் அனைத்து தலித் மக்களுக்கும் 5 ஏக்கர் நிலம் வழங்கப்பட வேண்டும்.

- நீதி வழங்கும் அதிகாரத்துடன் கூடிய பஞ்சமி நில மீட்பு ஆணையம் மூலம் தமிழ்நாட்டில் உள்ள பஞ்சமி நிலங்கள் பற்றி வெள்ளை அறிக்கை வெளியிட்டு பஞ்சமி நிலங்களை அதன் உரிமையாளர்களுக்கோ அல்லது அவர்களின் வாரிசுதாரர்களுக்கோ வழங்க வேண்டும்.

- 1973ஆம் ஆண்ட தமிழ்நாடு குத்தகைகாரர் சட்டத்தை (15 ஏக்கருக்கு மேல்) முறையாக அமல்படுத்தி மடங்கள், கோயில்கள், அறக்கட்டளைகள் ஆகியவற்றின் நிலங்களைக் கையகப்படுத்தி தலித் மக்களுக்கு வழங்க வேண்டும். மேலும், அவற்றில் விவசாயம் செய்ய போதுமான நிதியை முழுமையான மானியத்துடன் வழங்க வேண்டும்.

- மனிதனின் மலத்தை மனிதனே அள்ளுவதை தடை செய்து ஒழிப்பதோடு, அதற்கு மிக அவசியமாக ஒரு குற்றவியல் சட்டம் கொண்டு வரவேண்டும். மேலும் இப்பணி செய்த தொழிலாளர்களுக்கு மாற்றுப் பணி வழங்கி மறுவாழ்வு அளிக்கும் ஆணையம் ஏற்படுத்திட வேண்டும். மேலும் இத்தொழில் செய்யும் மக்களுக்கு நிவாரணமாக ரூ.10 இலட்சம் வழங்க வேண்டும். கையால் மலம் அள்ளும் தொழிலை செய்ய நிர்பந்தம் செய்யும் நபர்களைக் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவுசெய்ய வேண்டும்.

- தமிழகத்தில் உள்ள 12618 ஊராட்சிகளில் உள்ள துப்புரவுப் பணியாளர்களை முழுநேர அரசுப் பணியாளர்களாக அறிவித்து அவர்களுக்கு காலமுறை ஊதியம், பணிப்பாதுகாப்பு, வைப்புநிதி, பணிக்கால ஈட்டுத்தொகை, ஓய்வூதியம் ஆகிய இதர சலுகைள் வழங்கப்பட வேண்டும். மேலும் பணியாளர்களுக்கு போதிய பாதுகாப்பு கருவிகளும், கையுறைகளும் வழங்க வேண்டும்.

- துப்புரவு தொழிலாளர்களின் குழந்தைகள் படிக்க முடியாமல் போதவற்கு அடிப்படைக் காரணமாய் இருக்கும், துப்புரவுத் தொழிலாளர்களின் வேலை நேரத்தை குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி பராமரிக்கும் வகையில் மாற்றி அமைத்து எதிர்காலத் தலைமுறையை கல்வி பெற்ற தலைமுறையாக மாற்ற தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

- அருந்ததியின மக்கள் கூட்டுறவு தொழற்சங்கங்கள் தொடங்கி நிதி இல்லாமல் செயல்படாமல் இருப்பதால் அவற்றை செயல்படும் விதத்தில் சிறப்புக்கூறு திட்டத்தில் இருந்து நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

- மத்திய அரசால் தமிழகத்தில் அமல்படுத்தப்படும் பெட்ரோல் வங்கிக்கான உரிமம் மற்றும் கேஸ் ஏஜென்சிக்கான உரிமம் ஆகியவற்றால் அருந்ததியர் சமூகத்தவர் எவரும் பயனடையவில்லை. சாதிச்சான்று வழங்கும் அதிகாரம் தமிழக அரசுக்கு உள்ளதால், இந்தத் திட்டத்தை மத்திய அரசு தமிழகத்தில் அமல்படுத்தும் போது அதில் தலித் சமூகத்தவரின் சார்பில் அம்மக்களை நியமிக்க வேண்டும்.

- அரசு வாரியங்களில் தலைவர்களாக தலித் சமூகத்தவர்கள் நியமிக்கப்படுவதே இல்லை. எனவே, அரசு வாரியங்களின் தலைவர்களாக தலித் சமூகத்தவர்கள் நியமனம் செய்ய வேண்டும்.

14/ • தமிழகத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு சொந்தமாக உள்ள வணிகவளாகங்களில் தலித் மக்களுக்கு இடஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

15/ • பொதுக்கிணறு, பொதுப்பாதை, பொது சுடுகாடு, பொதுக்கோவில் போன்ற அனைத்து நிலைகளிலும் தலித் மக்களின் உரிமைகளை நிலை நாட்டப் பாதுகாப்பு சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

16/ • தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளை ஒழித்திட தீண்டாமை ஒழிப்பிற்கென தனி காவல் பிரிவையும், தனிக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களையும் அமைத்திட வேண்டும். மேலும், இக்காவல் பரிவுகளில் விசாரணை அதிகாரிகளாகவும், தனி குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் நீதிபதிகளாகவும், தாழ்த்தப்பட்ட சமூகத்தைவர்களையே நியமனங்கள் செய்திட வேண்டும். மேலும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

17/ • மாநில அளவில் ஆணையம், குழந்தை ஆணையங்களை நீதி வழங்கும் அதிகாரத்துடன்கூடிய ஆணையங்களாக ஏற்படுத்தி மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும்.

18/ • தலித் ஊராட்சி தலைவர்களுக்கும் தலித் பெண் ஊராட்சி தலைவர்களுக்கும் சாதியப் பாகுபாட்டிலிருந்து பாதுகாப்பு வழங்க வேண்டும்.

19/ • தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மக்கள்மீது திணிக்கப்படும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளை ஒழிக்க வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை தீவிரமாக அமல்படுத்திட வேண்டும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரின் புகார்களை எந்தவிதமான நிபந்தனையுமின்றி காவல்துறை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவேண்டும்.

20/ • அரசின் உதவிகளைப் பல்வேறு மட்டங்களில் பெற்று, தனியார் துறைகள் இயங்கி வருகின்றன. எனவே, தனியார் துறைகளில் உள்ள வேலைவாய்ப்புகளிலும் கல்வி நிறுவனங்களிலும் தலித் மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். அதற்கென சட்டம் இயற்ற வேண்டும்.

21/ • தலித் இடஒதுக்கீட்டை 2011 மக்கள்தொகை அடிப்படையில் 21%ஆக உயர்த்த வேண்டும்.

22/ • இடஒதுக்கீட்டை அபகரிக்கும் போலி சாதிச்சான்றிதழ் பேர்வழிகள் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுத்து அதனால் ஏற்படும் காலி பணியிடங்களை தலித் சமூகத்தவரை கொண்டே நிரப்ப வேண்டும்.

23/ • நிலப்பண்ணை, செங்கல்சூளை, தீப்பெட்டி தொழிற்சாலை, பட்டாசு தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழிற்சாலை போன்ற பணி தளங்களில் கொத்தடிமை முறை உள்ளது. இதை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

24/ • இந்துச்சமய அறநிலையத்துறைக்கு உட்பட்ட அனைத்துக் கோயில்களிலும் அறங்காவலர் குழுத்தலைவர் பதவிகளைச் சுழற்சி முறையில் கொண்டுவந்து முன்னுரிமை அடிப்படையில் தலித் மக்களுக்கு வழங்க வேண்டும்.

25/ • தமிழகத்தின் சில பகுதிகளில் உள்ள மாத்தம்மா முறையை ஒழித்து அப்பெண்களுக்கு

மறுவாழ்வு ஏற்படுத்திட வேண்டும். இம்முறையை ஊக்குவிப்பவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

26) • சிறப்பு உட்கூறு திட்டத்தை அனைத்துத் துறைகளிலும் முறையாக செயல்படுத்திட வேண்டும். சாதி ஒழிப்பு போராளிகளான அம்பேத்கர், ஒண்டிவீரன், இம்மானுவேல் சேகரன், வீரமங்கை குயிலி, அயோத்திதாச பண்டிதர், ரெட்டமலை சீனிவாசன் போன்ற முன்னோடிகளின் வாழ்க்கை வரலாற்றை பள்ளி, கல்லூரி பாடத்திட்டத்தில் சேர்த்திட வேண்டும். மேலும் அவர்களுக்கு தபால் தலை வெளியிட வேண்டும்.

27) • ஒதுக்கீட்டின் அடிப்படையில் எஸ்சி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஊராட்சி தலைவர்களாக உள்ள ஊராட்சிகளின் துணைத்தலைவர் மற்றும் ஊராட்சி உதவியாளர்கள் தலித் சமூகத் தலைவர்களையே நியமிக்கும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். மேலும் இவ்வூராட்சி தலைவர்களுக்கும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவது போல ஊராட்சி மேம்பாட்டு நிதியாக ஆண்டுக்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட வேண்டும். மேலும் ஊராட்சி தலைவரை பதவி நீக்கம் செய்யும் சட்டப்பிரிவு 205ஐ நீக்கம் செய்ய வேண்டும்.

28) • அரசு ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு விடுதிகளில் வழங்கப்படும் உணவுப்படியை உயர்த்தி வழங்க வேண்டும். மேலும் ஆதிதிராவிட விடுதிகளில் உள்ள கட்டிடங்கள் போதுமான வசதி இல்லாமல் உள்ளன. ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகளில் போதுமான அடிப்படை வசதிகளை உணவு, நீர், படுக்கையறை வசதிகள் செய்து தரப்படவேண்டும். வளரும் இளம் பெண்களுக்கு மருத்துவ விழிப்புணர்வு போதிக்கப்பட வேண்டும்.

29) • கிறித்துவ, இந்து, இஸ்லாம் மதங்களிலிருந்து, பௌத்த மதத்திற்கு மாறும் செட்யூல்டு சாதியினரை, பட்டியல் சாதி அட்டவணையில் சேர்த்து, தமிழ்நாடு அரசிதழில் (Tamilnadu Gazzette) வெளியிட வகை செய்யப்பட வேண்டும்.

30) • மதமாற்றத்தை பதிவுசெய்து வெளியிட அரசு நிர்ணயித்துள்ள ரூ.415ஐ, தமிழ் பெயர் மாற்றத்திற்கு நிர்ணயித்துள்ளது போல ரூ.50 ஆக குறைக்க வேண்டும்.

31) • தலித்துகளுக்கான சிறப்பு உட்கூறு திட்ட நிதியிலிருந்து இலவச மருத்துவ உதவிகள் உயிர்காக்கும் உதவிகள் தர வேண்டும்.

32) • தலித் மாணவர்களுக்கு மருத்துவம் பொறியியல் போன்ற தொழிற்கல்வி சிறப்பு உட்கூறு திட்ட நிதியிலிருந்து இலவசமாக வழங்க வேண்டும் என விசிக வலியுறுத்தும்.

## VIII பழங்குடியினர் நலன்

1) • வனப் பாதுகாப்புச் சட்டம் 2006இல் குறிப்பிட்டுள்ளபடி பழங்குடியினருக்கு நிலங்கள் வழங்கிடவும்

2) • வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரால், பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பழங்குடியினர் மற்றும் மலைவாழ் மக்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்துவதைத் தடுத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும்

3) • கல்வராயன்மலை, ஜவ்வாது மலையில் புதிய கலைக்கல்லூரிகள் துவங்கப்படவும்

4) • உண்டுஉறைவிடப் பள்ளிகளைப் புனரமைக்க கூடுதல் நிதி ஒதுக்கப்படவும்

- மாநில அளவில் பழங்குடியினர் நல வாரியம் அமைக்கப்படவும்

- மலைவாழ் மக்கள் கூடுதலாக வசிக்கும் மாவட்டங்களில் மாதந்தோறும் மலைவாழ்மக்கள் குறைதீர் கூட்டம் நடத்தப்படவும்

- மலைவாழ் மக்களின் வாழ்விடங்களுக்கு மின்சாரம், குடிநீர், சாலை, போக்குவரத்துவசதிகள் செய்து தரப்படவும்

- மலைவாழ் மக்கள் சேகரிக்கும் சிறு மகசூல்களுக்கு குறைந்தபட்ச விலை தீர்மானிப்பதுடன் லேம்ப் சொசைட்டி மூலம் கொள்முதல் செய்யப்படவும்

- மலைப்பகுதிகளில் கிடைக்கும் பொருட்களை மூலப்பொருட்களாகக் கொண்டு தொழிற்சாலைகள் துவங்கப்படவும்

- பட்டியலில் உள்ள அனைத்துப் பழங்குடியினருக்கும் சாதிச்சான்றிதழ் தடையின்றி, தாமதமில்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படவும் விசிக பாடுபடும்.

## பிற்படுத்தப்பட்டோர் நலன்

- தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரைப்படி தனியார் துறைகளில் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்த வலியுறுத்தப்படும்.

- மண்டல் குழு பரிந்துரைகள், 1990ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட போது, பிற்படுத்தப்பட்டோர் மக்கள்தொகை 52 விழுக்காடு ஆகும். கடந்த 25 ஆண்டுகளில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் மேலும் சில சாதிகள் சேர்க்கப்பட்டுள்ளதால் பிற்படுத்தப்பட்டோர் மக்கள் தொகை அடிப்படையில் 27 விழுக்காட்டிற்கும் அதிகமாக இடஒதுக்கீடு அளிக்க வலியுறுத்துவோம்.

- வங்கிகள் மாணவர்களுக்கு கல்விக் கடன் வழங்கும்போது பிற்படுத்தப்பட்டோருக்கு பாரபட்சம் காட்டப்படுகிறது. மேலும் அரசு உதவித் தொகை வழங்குவதிலும் பாகுபாடுகள் உள்ளன. இதனை சீர்படுத்த நடவடிக்கை எடுப்போம்.

- ஒபிசி இடஒதுக்கீட்டில் கிரீமி லேயர் முறையை ஒழிக்கப் பாடுபடுவோம்.

## சிறுபான்மையினர் நலன்

- அனைத்து மத சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாத்திட அரசியல் சட்டப்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வோம். சிறுபான்மை மக்களின் வழிபாட்டு உரிமைகள் பாதுகாக்கப்படவும்;

- மதம் மாறிய தலித் கிறித்துவ மக்களுக்கு தாழ்த்தப்பட்டோருக்கான உரிமைகள், சலுகைகள் கிடைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும்;

- சிறுபான்மையின மக்களுக்கு எதிராக இந்துத்துவா சக்திகள் தூண்டி வரும் மத வன்முறைகளை ஒடுக்கவும், வெறுப்பு பிரச்சாரங்களைத் தடுக்கவும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவும்;

- சிறுபான்மை மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகளுக்காக சச்சார் குழு மற்றும் நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா குழு அளித்த பரிந்துரைகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும்;

• அனைத்துத் துறைகளிலும் சிறுபான்மை மக்களுக்கு உரிய வாய்ப்புகள் வழங்கப்படுவதை உத்தரவாதப்படுத்தப்படும் வகையில் சம வாய்ப்பு ஆணையம் அமைக்கப்படவும் விசிக பாடுபடும்.

## இசுலாமியர் நலன்

• மத்திய பாஜக அரசின் இசுலாமியர் விரோத குடியுரிமை திருத்தச் சட்டத்தை (CAA-Citizenship Amendment Act) நடைமுறைப்படுத்தாமல் தடுக்கவும், தமிழக அரசு தேசிய குடிமக்கள் பதிவு (NRC - National Register of Citizens) மேற்கொள்வதை தடுத்திடவும்,

• வழக்கு விசாரணை எதுவும் இல்லாமல் பல்லாண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள முஸ்லீம்களின் வழக்குகள் மறு பரிசீலனை செய்யப்பட்டு, அப்பாவி முஸ்லீம்கள் விடுதலை செய்யப்படவும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் விரைந்து முடிக்கப்படவும்,

• தமிழகத்திலுள்ள வக்போர்டு சொத்துக்கள் ஒன்றரை லட்சம் கோடிக்கு மேல் உள்ளதாக ஓர் அறிக்கை கூறுகிறது. அச்சொத்துக்கள் கடந்த 63 ஆண்டுகளாக 80 சதவீத நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்கள் கையில் உள்ளது. அச்சொத்துக்களை மீட்க, வக்பு வாரியக் சொத்துக்கள் பற்றி ஒரு வெள்ளை அறிக்கை தாக்கல் செய்ய, தற்போதுள்ள வக்பு வாரிய நிலங்கள் நிலமற்ற ஏழை இசுலாமிய விவசாயிகளுக்கு பிரித்துத் தர, அந்நிலத்தில் இசுலாமியர் வீடு கட்டிக்கொள்ள நிலம் ஒதுக்கவும்

• சிறுபான்மை முஸ்லீம்களுக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்க மத்திய அரசை வற்புறுத்துவதோடு, தற்போது தமிழகத்தில் நடைமுறையில் உள்ள உள்ஒதுக்கீட்டை மக்கள்தொகைக்கு ஏற்ப அதிகரிக்கவும், அந்த இடஒதுக்கீடு முறையாக அமலாகிறதா என்பதை கண்காணிக்கவும் அதிகாரம் பெற்ற அமைப்பு ஏற்படுத்தவும்

• தமிழகத்தில் சிறுபான்மை முஸ்லீம்களின் கல்வி, வாழ்நிலை, பொருளாதாரம் மேம்பட முஸ்லீம்கள் அதிகம் வாழ்கின்ற பகுதிகளைத் தேர்வு செய்து அதற்கான சிறப்பு திட்டங்கள் உருவாக்கி அமலாக்கவும்

• முஸ்லீம் பெண்களின் கல்வி, வேலை வாய்ப்புக்கான சிறப்பு திட்டங்கள் உருவாக்கி, அமலாக்கவும்

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

## குழந்தை நலன்

• அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கட்டாய கல்வி, ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்விவரை இலவசமாக்கப்படவும்

• அனைத்துப் பள்ளிகளிலும் குழந்தைகள் உரிமை குறித்த விழிப்புணர்வு மையங்களை ஏற்படுத்தவும்

• பள்ளிகளில் குழந்தைகள் கடுமையாக தண்டிக்கப்படுவதை தடுக்க விழிப்புணர்வு முகாம்கள் அமைத்திடவும்

• குழந்தைத் தொழிலாளர் தடை சட்டத்திற்கான வயதை 18 ஆக உயர்த்தவும்

• பட்டாசுத் தொழிற்சாலை, செங்கல்சூளை, தீப்பெட்டி, கூடை முடைதல், தோல் பதனிடும் தொழிற்சாலை பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகளைக் கண்டறிந்து, சிறப்புப் பள்ளிகள் அமைத்து கல்விக் கற்க வழிவகை செய்திடவும்

• அங்கன்வாடிப் பள்ளிகள் குழந்தைகள் விளையாட்டுப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

## இளைஞர் நலன்

• நொறுங்கிக் கிடக்கும் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தி விவசாயம் சார்ந்த தொழில்களுக்குச் சிறப்பு சலுகை வழங்கி ஊக்குவிக்கப்படும். பட்டதாரி இளைஞர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்கி விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபடுத்த ஊக்குவிக்கவும்

• இதற்கென தனி நிதியம் உருவாக்கப்படும். அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பத்திற்குப் பயிற்சி அளிப்பது, உணவு பதப்படுத்தும் தொழிலைக் கிராமப்புறங்களில் பரவலாக்குவது, படித்த படிப்பை இடையில் கைவிட்டு சுயதொழில்களில் ஈடுபட்டு வரும் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் சான்றிதழ் வழங்குவதுடன், முறையாக கடன் வழங்கி தொழில் தொடங்க ஊக்குவிக்கவும்

• படித்த வேலை இல்லா இளைஞர்கள் பயிற்சிக்குச் செல்வதற்கும், போட்டித் தேர்வுகளில் பங்கேற்பதற்கும் பேருந்துகளில் இலவசப் பயணத்திற்கு அனுமதிச் சீட்டு வழங்கப்படும். எழுத்துத் தேர்வு மற்றும் போட்டித் தேர்வுகளுக்கு பிற மாநிலங்களுக்குச் செல்லும் இளைஞர்களுக்கு ரயில் கட்டணம் செலுத்தவும்

• வேலையில்லா காலத்துக்குப் படித்த இளைஞர்களுக்கு நிவாரணம் / உதவித் தொகை வழங்கவும்

• படித்த இளைஞர்கள் குறிப்பாக கிராமப்புறங்களில் வாழும் பட்டதாரிகள், ஐஏஎஸ். ஐபிஎஸ், ரயில்வே, வங்கி, ஸ்டாப் செலக்சன் மற்றும் கம்யூட்டர் கம்பெனிகள் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற போதிய பயிற்சி இல்லாத நிலை உள்ளது. இதனைத் தவிர்ப்பதற்கும், ஊராட்சி ஒன்றியத்திலும் தலா ஒரு பயிற்சி நிலையம் வீதம் சிறப்பு நிபுணர்களைக் கொண்டு வருடம் முழுவதும் பயிற்சி அளிக்க வலியுறுத்துவோம்.

## கல்வி

• மாணவர்களின் மருத்துவக் கல்வி கனவைத் தகர்த்திடும், முறையற்ற, நேர்மையற்ற மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கை முறையான நீட் (NEET) முற்றிலும் விலக்கிட விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அணைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

• இன்றைய காலச்சூழலைக் கருத்தில் கொண்டு மாணவர்களுக்கு ஸ்மார்ட் போன் (Smartphone), இன்டர்நெட் இணைப்பு (Internet Connection), பள்ளிகளில் இலவச வை பை (Free Wi-Fi) போன்றவை வழங்கிட வலியுறுத்தப்படும்.

• சமூக நீதி, மனித நேயம், மத நல்லிணக்கம், நாட்டுப்பற்று, பாலியல் சமத்துவம் ஆகிய உயர்ந்த விழுமியங்களை மாணவர்களிடம் உருவாக்கும் வகையில் பாடத்திட்டங்களில் உரிய மாற்றங்கள் செய்யப்படும்.

4 • கல்வித்துறையைப் பொதுப்பட்டியலில் இருந்து மாநில பட்டியலுக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

5 • தமிழகத்தில் கல்வித்துறைக்கான ஒதுக்கீடு மொத்த உற்பத்தி மதிப்பில் (GDP) ஆறு விழுக்காடாக அதிகரிக்கப்படும்.

6 • கல்வித்துறை தனியார்மயமாக்கப்படுவது தடுக்கப்படும். தனியார் கல்வி நிறுவனங்களைப் போன்று அரசு கல்வி நிறுவனங்களிலும் அடிப்படைக் கட்டமைப்புகள் மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

7 • ஆரம்ப கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை தாய் மொழி வழி கல்விக்கு முன்னுரிமையும், ஊக்கமும் அளிக்கப்படும். ஆங்கில மொழி சிறப்பான முறையில் கற்றுத்தரப்படும். அரசுப்பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி வகுப்புக்கு வசூலிக்கப்படும் சிறப்பு கட்டணங்கள் ரத்து செய்யப்படும்.

8 • கிராமங்கள் தோறும் பள்ளி வளர்ச்சிக்குழு அமைக்கப்பட்டு பள்ளியினுடைய மாணவர் சேர்க்கை மற்றும் பள்ளி முன்னேற்றம் கண்காணிக்கப்படவும்,

9 • முழுமையான சமச்சீர்கல்வி, அருகமை பள்ளிகளில் மாணவர் சேர்க்கை என்பன அமலாக்க நடவடிக்கை எடுக்கப்படவும்,

10 • அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகள் அனைத்து பள்ளிகளுக்கும் உறுதி செய்யப்படும். இரவு காவலர், கடைநிலை ஊழியர், பதிவு எழுத்தர், எழுத்தர், ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் நிரப்பப்படவும்,

11 • தமிழ்நாட்டில் தமிழே படிக்காமல் கல்வி பெறும் முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து முடிவிற்குக் கொண்டு வரவும்,

12 • அரசுப் பள்ளிகள் மூடப்படுவது தடுக்கப்படவும். அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படவும்,

13 • அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களும் சமூக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு, கல்வித்தரம், கட்டணம், ஆசிரியர், பணியாளர் ஊதியங்கள் மற்றும் இதர நெறிமுறைகள் உள்ளிட்ட அனைத்து அம்சங்களும் ஒழுங்குபடுத்தப்படவும்,

14 • அனைத்துப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் விளையாட்டு மைதானங்கள், உள்விளையாட்டு அரங்குகள் அமைக்கப்படும். ஆண், பெண் இரு பாலரும் அவற்றைப் பயன்படுத்த ஆவண செய்யப்படும். பள்ளிகளில் விளையாட்டு என்பது கட்டாயப்பாடமாக ஆக்கப்படவும் சிறப்பு பயிற்சியாளர்கள் நியமிக்கப்படவும், மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய பயிற்சி ஏற்பாடுகள் செய்யப்படவும்,

15 • கல்வியில் பின்தங்கிய மற்றும் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கலந்தாய்வு நடத்தும் வகையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட அளவில் நடமாடும் மனநல மருத்துவக்குழுக்கள் அமைக்கப்படவும்,

16 • கல்வியியல் கல்லூரி, பல்கலைக்கழகம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனங்களோடு ஒப்பந்தம் மூலம் பள்ளிகளில் மாணவர்களின் ஆங்கில பேச்சுத்திறனை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவும்,

17 • பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் பயன்படுத்தக்கூடிய நிலையில் கழிவறை வசதி செய்து தரப்படும். இவைத் தொடர்ந்து பராமரிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படவும்,

18 • அரசு பள்ளிகளில் ஒன்று முதல் 10ஆம் வகுப்பு வரை கணினி அறிவியல் பாடத்தை கட்டாயப்பாடத் திட்டமாக அறிவிக்கப்படும். இதற்குத் தேவையான கணினி ஆசிரியர்கள் நியமிக்கப்படவும்,

19 • தலித், பழங்குடி மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான இலவச விடுதிகளில் அடிப்படை வசதிகள் போதுமான அளவிற்கு இல்லை. இலவச விடுதிகளை மேம்படுத்தவும், உணவு மானியத்திற்கும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு. தரமான உணவு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படவும்,

20 • மொழிவழிச் சிறுபான்மை மக்களுக்காக உள்ள கல்வி நிலையங்களை முறையாக நடத்துவதோடு தேவைக்கேற்ப கூடுதல் கல்வி நிலையங்கள் துவக்கப்படும். மேலும் இக்கல்வி நிலையங்களில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கிட புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவும்,

21 • மலைவாழ் மாணவர்களுக்காக, உண்டு உறைவிடப் பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மலைக்கிராமங்களில் கூடுதலான பள்ளிகள் துவக்கப்படவும்,

22 • சிறுபான்மை மொழி மாணவர்களுக்கு அவரவர் தாய்மொழியில் கற்பிக்க வழி செய்யப்படவும். தனிதேர்வுகள் நடத்தி பொதுத்தேர்வில் அம்மதிப்பெண்கள் தேர்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்படவும் விசிக வலியுறுத்தும்.

## மீனவர்கள் நலன்

• 1974இல் இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்ட கச்சத்தீவு தமிழகத்திற்குரிய தீவாகும். மீனவர்களுக்காக மீன்வளம் நிறைந்த கச்சத்தீவில் மீன்பிடிக்கு உரிமை அங்கிகரித்தால், வலையை உலரவைக்க அந்தோனியார் கோயிலும் இருக்கிறது அதை மீண்டும் பெற. இலங்கை இராணுவத்தால் தமிழக மீனவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்படுவதை தடுத்து நிறுத்தவும் தமிழக மீனவர்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளவும் அரசே நடவடிக்கை மேற்கொள்ள உறுதியுடன் செயல்படுவோம்.

• மீனவர் பாதுகாப்பிற்கு தனி ஆணையம்.

• மீனவர் கிராமங்கள் அனைத்தும் தனி ஊராட்சிகளாக மாற்றி அமைப்பது.

• மீனவ மக்கள் மீன்பிடி தொழிலின் ஈடுபடும்போது இறந்தால் ரூ.10 லட்சம் நிவராணம்

• மீன்கள் இன பெருக்கக் காலமான ஏப்ரல் 15 முதல் மே 30 என 45 நாட்கள் மீனவர்களுக்கு மீன்பிடி தடைக்காலம் நடைமுறையில் உள்ளது. அப்போது அவர்களுக்கு ரூ.5000 வழங்கப்படுவதை மாற்றி ரூ.10000 வழங்க வேண்டும்.

• வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் அடிப்படையில் ஒரு வீட்டிற்கு ரூ.50 ஆயிரம் ஒதுக்கப்படுவதை ரூ.1 லட்சம் ஒதுக்கி மீனவர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தை அமல்படுத்தப்பட வேண்டும்.

• மீனவ இளைஞர்கள் கடல் தொழிலில் பயிற்சி பெற தேவையான திட்டங்கள் செயற்படுத்தப்படும். கடல் தொழில் படிப்பு மற்றும் பயிற்சி மையங்கள் கடற்புர நகரங்களில் அமைக்கப்படும்.

• வெளிநாடுகளில் கடல் தொழில் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு கடல்தொழில் சான்றிதழ்கள் வழங்கிட மையம் அமைக்கப்படும்.

• பாரம்பரிய மீன்பிடித் தொழிலுடன், நவீன தொழில்நுட்பங்களைக் கற்றுத் தேர்ந்த மீனவ இளைஞர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட, கடலோரப் பகுதிகளில் பயிற்சி மையங்கள் உருவாக்கப்படும்.

## மாற்றுத் திறனாளிகள் நலன்

• மாநிலம் முழுதும் ஊராட்சி, வார்டு வாரியாக முகாம்கள் நடத்தி, கணக்கெடுப்பு செய்து, மாற்றுத் திறனாளிகள் குறித்த தகவல் தளம் உருவாக்கப்படவும்.

• மாற்றுத் திறனாளி உதவித் தொகை ரூ.3,000/- ஆக உயர்த்தப்படும். அதைப்பெறுவதற்கான வழிமுறை எளிமைப்படுத்தப்படும். சட்டப்படி அரசுப் பணிகளில் 3 விழுக்காடு வேலை வாய்ப்பு உறுதிப்படுத்தப்படும். ஊரக வேலை உறுதி சட்டத்தின் கீழ் 4 மணி நேரம் பணி செய்து முழு ஊதியம் பெறுவது நிச்சயப்படுத்தப்படவும்.

• அரசு மற்றும் பொது கட்டிடங்களில் தடையில்லா சூழலை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவும்.

• கேட்கும் திறனற்றோர், பேசும் திறனற்றோருக்காக மாவட்டம் தோறும் 100 சைகை மொழி பெயர்ப்பாளர்கள் நியமித்திட ஏற்பாடு செய்யப்படும். சைகை மொழிக்கு அங்கீகாரம் வழங்கப்படவும்.

• மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களுடைய உடல் பாதிப்பிற்கேற்ப ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்படவும்.

• பார்வையற்றோர், மாற்றுதிறனாளிகளுக்கு வழங்கப்படும் பராமரிப்புத்தொகை ரூ.1,000/ லிருந்து ரூ.5,000/ ஆக உயர்த்தித் தரப்படவும்.

• சுயதொழில் புரியும் பார்வையற்ற மாற்று திறனாளிகளுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகள் மூலமும், என்.என்.எப்.டி.சி. மூலமும் கடன் உதவித்தொகை வழங்கப்படவும்.

• பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் செய்யக்கூடிய பணிகளைக் கண்டறிய குழு அமைக்கப்பட்டு, அதன் பரிந்துரையின்படி மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பில் மூன்று விழுக்காட்டில் ஒரு விழுக்காடு பார்வையற்றவர்களுக்கு ஒதுக்கப்படும். உள்ளாட்சி, நகராட்சி, மாநகராட்சி வணிக வளாகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு கடைகள் ஒதுக்கி, சுய வேலைவாய்ப்புக்கு வழிவகை காணப்படவும்.

• வீடு இல்லாத மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கு அரசின் வீடு வழங்கும் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படவும்.

• பார்க்கும் திறனற்றோர், கேட்கும் திறனற்றோருக்கு அரசு கல்வி நிலையங்கள் மூலம் தரமான உயர்கல்வி கிடைக்க வழி செய்யப்படவும்.

• செயற்கை அவயங்கள், கருவிகள் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் எளிதாகக் கிடைத்திட நடவடிக்கை எடுக்கப்படவும்.

• எவ்வித தொழிலும், பணியும் செய்ய இயலாத, கல்வியறிவு பெறாத மாற்று திறனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு வழங்கும் வகையில் மாத உதவித் தொகை வழங்க திட்டம் மற்றும் இலவச வீடு, இலவச மருத்துவ உதவி வழங்க வேண்டும். சிறப்பு மருத்துவ பாதுகாப்பு திட்டம் மற்றும் சுயதொழில் தொடங்க வாய்ப்பு வழங்குதற்கும்

• சிறப்பு பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு உணவுப்படி (2000/-) வழங்கவும்

• கல்விக்குத் தேவையான புத்தகங்கள், Braille போன்றவை உள்ளிட்ட அனைத்து தேவைகளையும் இலவசமாக வழங்கிடவும்

• புத்தகம் கட்டுவோர், பிட்டர், ரீ கேனிங், இசை ஆசிரியர், ஆசிரியர் என உரிய பயிற்சி மேற்கோண்டுள்ள பலநூறு பார்வையற்றவர்களும், அதே போன்று பிற மாற்றுத்திறனாளிகளும் உடனடியாக பணியமர்த்தப்படவும், 2009இல் TNPSC GROUP-2 தேர்ச்சி பெற்றவர்களும், சமீபகாலங்களில் Group 4இல் தேர்வு பெற்றவர்களும் இன்னும் பணி அமர்த்தப்படவில்லை, இவர்கள் உடனடியாக பணியமர்த்தபடவும் விசிக பாடுபடும்.

## அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நலன்

• ஆறாவது ஊதியக்குழு பரிந்துரையின்படி மத்திய அரசு வழங்கியுள்ள ஊதியம் மற்றும் அனைத்துப் படிகளையும் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவும்,

• ஊதிய முரண்பாடுகள் தீர்க்கப்படும். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பணியிட மாறுதல் எவ்வித முறைகேட்டிற்கும் இடமின்றி கலந்தாய்வு அடிப்படையில் நிறைவேற்றப்படவும்,

• குடிநீர், சென்னை மெட்ரோ வாட்டர், துப்புரவு மேல்நிலை தொட்டி இயக்குபவர் உள்ளிட்ட தொகுப்பூதியம் / மதிப்பூதியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்படவும்,

• அனைத்து துறைகளிலும் உள்ள தொகுப்பூதிய, மதிப்பூதிய ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவும்,

• ஏற்கனவே நடைமுறையில் உள்ள வரையறுக்கப்பட்ட பயனளிப்பு ஓய்வூதிய திட்டம் அமல்படுத்தப்படும். ஓய்வூதியத்தை பங்குச் சந்தையுடன் இணைக்கும் மத்திய அரசின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தவும்,

• கருணை அடிப்படை பணி நியமனம் எவ்வித நிபந்தனையும் இன்றி உடனுக்குடன் வழங்கப்படவும்,

• ஊழியர் விரோத நடத்தை விதிகள் ரத்து செய்யப்படும். கடந்த ஆட்சியின் போது தொழிற்சங்க ரீதியான இயக்கங்களில் ஈடுபட்டதற்காக மேற்கொள்ளப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கைகள் ரத்து செய்யப்படவும்,

• அரசு ஊழியர் - ஆசிரியர்கள் பணி வரன்முறை, பணி ஓய்வு, இடமாறுதல், பதவி உயர்வு உள்ளிட்ட நிர்வாக ரீதியான பிரச்சனைகள் குறித்து அனைத்து சங்கங்களையும் அழைத்து ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தி தீர்வு காணப்படவும் விசிக வலியுறுத்தும்.

• 1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் - அரசு ஊழியர் போராட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த தமிழ்நாட்டின் இடைநிலை ஆசிரியர்களுக்கு மத்திய அரசிற்கு இணையான ஊதியம் என்பது கடந்த அரசால் பறிக்கப்பட்டது. ஆகவே மத்திய அரசின் இடைநிலை ஆசிரியர்களுக்கு இணையான ஊதிய விகிதத்தினை தமிழ்நாட்டின் இடைநிலை ஆசிரியர்களுக்கும் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்படவும்,

• 01.06.2006 முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்ட தொகுப்பூதிய ஆசிரியர்கள் அனைவரும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யப்படுவர். தற்போது தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்டுள்ள சிறப்பாசிரியர்கள் அனைவரும் பணிநிரந்தரம் செய்யப்படவும்,

• பெண் ஆசிரியர்களுக்கான மகப்பேறு விடுப்பு 6 மாதத்திலிருந்து 12 மாதமாக உயர்த்தப்படும். மருத்துவ விடுப்பு மற்றும் பேறுகால விடுப்பில் செல்லும் ஆசிரியர்களின் பணியிடத்திற்கு தற்காலிக அடிப்படையில் ஆசிரியர் நியமிக்கப்பட்டு மாணவர்களின் கல்வி பாதிக்காத வண்ணம் பாதுகாக்கப்படவும்,

• ஆசிரியர்களுக்கான வீட்டு வசதி வாரியம் மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டு குறைந்த வட்டி விகிதத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தரப்படும். மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சி ஆசிரியர்களுக்கு வாடகை குடியிருப்புகள் செய்து தரப்படவும்

• பணியிடங்கள் அனைத்திலும் அனைத்து வசதிகளுடன் கூடிய குழந்தை பராமரிப்பு மையங்கள் நிறுவப்படவும்

• ஆசிரியர் அரசு ஊழியர் சங்கங்களுடன் முறையான பேச்சுவார்த்தை நடத்தி ஊதியக்குழு முரண்பாடுகள் களையப்படும். மேலும் மத்திய அரசின் 7ஆவது ஊதியக்குழு பரிந்துரைகள் தமிழகத்தில் 8ஆவது ஊதியக்குழு மூலம் முழுமையாக நிறைவேற்றப்படவும்

• அரசுப் பள்ளிகள், கல்லூரிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள தொகுப்பூதிய ஆசிரியர்கள் அனைவரும் பணிநிரந்தரம் செய்யப்பட்டு முறையான ஊதிய விகிதங்கள் தீர்மானிக்கப்படவும்

• அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் அனைத்திலும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் காலியிடங்கள் நிரப்பப்படவும்

• ஓய்வூதியர்களுக்கான மருத்துவக் காப்பீடு அரசே ஏற்று நடத்தவும்

• ஓய்வூதியர்கள் தொடர்பான பொதுவான தீர்ப்பினை மேல்முறையீடு செய்யாமல் அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவும்

• ஓய்வூதியர்களுக்கான கம்யூட்டேசன் தொகை பிடித்தம் 12 ஆண்டுகளாக குறைக்கப்படவும் விசிக குரலெழுப்பும்.

## தொழிலாளர்கள் நலன்

• தொழில் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக்கு உதவும் வகையில் முதலீடுகள் கொண்டுவரப்படும். அதேசமயம் தொழிலாளர்களின் ஜனநாயக, தொழிற்சங்க உரிமைகள் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதற்கும்,

• ‘பன்னாட்டு தொழில்நிறுவனங்கள்’ மற்றும் ‘உள்நாட்டு பெரிய நிறுவனங்களில்’ தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையை நிலைநாட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும்,

• சிறப்பு பொருளாதார மண்டலங்களில் உள்ள தொழிற்சாலைகளில், நாட்டுக்குள் இன்னொரு நாடு போல் தொழிலாளர் நலச் சட்டங்கள் செல்லுபடியாகாத நிலை உள்ளது. பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் இந்நாட்டு சட்டங்களுக்கு உட்படும் வகையில் சட்டம் உறுதி செய்யப்படவும்,

• முறைசாரா தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர் நலவாரியங்களும் தீர்மானிக்கப்பட்ட நலவாரியக் குழுக்கள் மூலமே செயல்படுத்தப்படும். வாரிய உறுப்பினர்கள் பயன்பெறுவதற்குத் தடையாக உள்ள நிபந்தனைகளை இரத்துச் செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும்,

• தொழிலாளர் நலன் காக்கும் சட்டங்களைத் திருத்த முயற்சிக்கும் மத்திய அரசின் நடவடிக்கையைத் தடுக்க வலுவான முயற்சிகள் மேற்கொள்ளப்படவும்,

• அரசுத் துறைகளிலும், பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களிலும் நிரந்தர பணிகளில் தொழிலாளர்களை ஒப்பந்தக் கூலிகளாக்கி உழைப்பு சுரண்டப்படுவதை தடுக்கவும், ஒப்பந்த தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்யவும் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும்,

• வேலை தேடி நகர்ப்புறங்களை நோக்கிச் செல்லும் கிராமப்புறத் தொழிலாளர்கள் மற்றும வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான தங்குமிடங்கள் உருவாக்கப்படவும்,

• பட்டாசு தயாரிக்கும் தொழிலில் உள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் இதர பிரச்சனைகள் குறித்து ஆராய குழு அமைக்கப்பட்டு, அதன் பரிந்துரைகள் நிறைவேற்றப்படவும்,

• தையல் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைக்கப்படும். தேவையான கடனுதவி வழங்கப்படும். நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும் உதவித்தொகை உயர்த்தப்படவும் விசிக பாடுபடும்.

## போக்குவரத்துத் தொழிலாளர் நலன்

• போக்குவரத்துக் கழகங்களில் தொழிலாளர் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு வேலைப் பளு குறைக்கப்படுவதற்கும்

• போக்குவரத்து கழக ஊழியர்களின் ஊதிய உயர்வு, ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகள் அனைத்தும் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் சுமூகமான முறையில் பேச்சுவார்த்தை நடத்திக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

## அமைப்புச்சாரா தொழிலாளர் நலன்

• தமிழகத்தில் மூன்று கோடி அமைப்புச் சாரா தொழிலாளர்களின் சட்டபூர்வ உரிமைகள் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவும்,

• அமைப்புச் சாரா தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்படவும்,

• அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ. 18 ஆயிரமாக உயர்த்தப்படவும்,

• விபத்தில் இறக்கும் அமைப்புச் சாரா தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.5 இலட்சம் குடும்ப பாதுகாப்பு நிதி வழங்கப்படவும்,

• துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொகுப்பூதிய முறை ரத்து செய்யப்பட்டு, முறையான ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்படும். துப்புரவுத் தொழிலாளர்களுக்குத் தேவையான காலணிகள், கையுறைகள் முகமூடிகள் உள்ளிட்ட பாதுகாப்புச் சாதனங்கள் வழங்கப்படவும்,

• துப்புரவுத் தொழிலாளர்களும், அமைப்புச் சாரா தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் மருத்துவ வசதிகள் கிடைக்க தனித் திட்டம் உருவாக்கப்படவும்,

• அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை கண்காணிக்கவும், முறைப்படுத்தவும் தனியாக ஆணையம் அமைக்கப்படவும், முயற்சி மேற்கொள்ளப்படும்.

## சாலையோர வியாபாரிகள் நலன்

• சாலை ஒர வியாபாரிகளின் வியாபார உரிமையைப் பாதுகாக்கும் வகையில் உச்ச நீதிமன்றம் 09.09.2013இல் தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பு மற்றும் வழிகாட்டுதலின்படி சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் சாலையோர வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2014 நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

• சாலையோர வியாபாரிகள் கணக்கெடுக்கப்பட்டு, அவர்களுக்கு அடையாள அட்டையும், வியாபாரச் சான்றும் வழங்கப்படவும்,

• சாலையோர வியாபாரம் அங்கீகரிக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகள் காவல்துறை மூலம் தேவையான உரிமங்கள் அளிக்கப்படும். மேலும் சாலையோர வியாபாரிகள் நலனுக்கான 2014 சட்டத்தில் தெரிவிக்கப்பட்டவாறு குடிநீர், கழிப்பறை வசதி, கழிவுகள் வெளியேற்றுதல் ஆகிய வசதிகளை உள்ளடக்கிய வியாபார மண்டலங்கள் அமைப்பதற்குத் திட்டம் வகுக்கப்படவும்,

• சாலையோர வியாபாரிகள் தனியாரிடம் அதிக வட்டிக்கு கடன் வாங்கி தொழில் செய்யும் நிலைமை இருப்பதால், கந்து வட்டிக் கொடுமைக்குப் பலியாகி இன்னலுக்கு ஆளாகின்றனர். இவர்களின் நிதி தேவையை நிறைவு செய்வதற்கு அரசு சார்பில் குறைந்த வட்டியில் வங்கிகள் மூலம் 5000/ ரூபாய் முதல் ஒரு இலட்சம் வரை நிபந்தனை யின்றி எளிய முறையில் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படவும் விசிக பாடுபடும்.

## முதியோர் நலன்

• கிராமப்புற, நகர்ப்புறங்களில் ஏழை முதியோருக்கான ஒய்வூதியம் ரூ.3,000/ ஆக உயர்த்தி வழங்கப்படும். அதிமுக அரசால் ஒய்வூதியம் வழங்கப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டுள்ள அனைவருக்கும் மீண்டும் வழங்கப்படவும்

• முதியோர்களுக்கும், உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கும், வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கும் இலவசப் பேருந்துச் சலுகை வழங்கப்படவும் குரலெழுப்புவோம்.

## வணிகர் நலன்

• சிறு வணிகர்கள் சுய தொழில் புரிவோருக்கு வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடனுதவி வழங்கவும், சிறு வணிக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு இலவசக் காப்பீட்டு வசதி வழங்கவும்,

• வரிவிலக்குத் தொடர்பான வணிகர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும்

• சில்லரை வணிகத்தை ஒழித்துவிட்டு வெளிநாட்டினரின் கொள்ளைக்கு வழிவகுக்கும் ஆன்லைன் வணிகம், யூக பேர வணிகம் ஆகிய கேடுகளை அனுமதிக்காமல் தடுக்கவும் சில்லரை வணிகம் மட்டுமின்றி மொத்த வணிகத்திலும் அந்நிய முதலீட்டை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தவும்

• வெளிநாடுகளிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் நுகர்பொருட்களின் தரத்தை ஆராய நிபுணர்குழு அமைக்கப்படவும் விசிக பாடுபடும்.

## விளையாட்டுத்துறை

• தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் 12ஆம் வகுப்புவரை மாணவர்களுக்கு உடற்பயிற்சி வகுப்பு கட்டாயமாக்கப்படும். பள்ளிகளில் விளையாட்டு மைதானம், விளையாட்டு சாதனங்கள், பயிற்சி ஆசிரியர் உட்பட கட்டாயக் கல்விக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படுவதற்கும்

• எல்லா மாவட்டங்களிலும் விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை / இளைஞர்களைப் பயிற்றுவிப்பதற்கான விளையாட்டு மையங்கள் / தங்கும் விடுதி வசதிகள் ஆகியவை உருவாக்கப்படுவதற்கும்

• அனைத்து நகரங்களிலும் பொதுமக்கள் காலையில் நடைபயிற்சி செய்வது உட்பட, பெரியவர்கள் விளையாடுவதற்கான விளையாட்டுத் திடல்கள் மற்றும் 400 மீட்டர் தடகள ஓடுதளம் அமைப்பதற்கான இடத்தை ஒதுக்கீடு செய்வது போன்றவை அனைத்து உள்ளாட்சி / நகராட்சி அமைப்புகள் மூலம் நிறைவேற்றப்படுவதற்கு விசிக வலியுறுத்தும்

## சுகாதாரம்

• தமிழகத்தில் சுகாதாரத்துறைக்கு மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 6 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்படவும்

• ஒவ்வொரு தாலுக்காவிலுள்ள மருத்துவமனைகளின் தரமும் படுக்கை வசதிகளும் மேம்படுத்தி தரமான மருத்துவ சிகிச்சையினை ஏழை எளிய மக்கள் பயன் பெறவும் மகப்பேறு மருத்துவமனையின் தரத்தை மேம்படுத்தவும்

• மாவட்டத்திற்கு ஒரு பன்னோக்கு மருத்துவமனையுடன் கூடிய அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் செவிலியர் கல்லூரிகள் துவக்கப்படவும்

- வட்ட அரசு மருத்துவமனைகளிலும், முழு உடல் பரிசோதனைக்கான பன்னோக்கு நோய் காண் மையங்கள் அமைக்கப்படவும்

- கிராமப்புற சுகாதார ஆய்வாளர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் போதுமான அளவு நியமிக்கப்படவும்

- குடும்பம் ஒன்றுக்கு நோய் சிகிச்சை செலவு ரூ. 15 லட்சமாக உயர்த்தி வழங்குவதோடு அனைத்து நோய்களுக்கான சிகிச்சை மற்றும் பரிசோதனைகள் அனுமதிக்கும் வகையில் மருத்துவக் காப்பீடு திட்டம் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படவும்

- குறைந்த விலையில் உயிர் காக்கும் மருந்துகள் அரசு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவும்

- தனியார் மருத்துவமனைகளில் குறிப்பிட்ட விழுக்காடும் ஏழை எளிய நோயாளிகளுக்கு கட்டணமில்லா மருத்துவ சேவை கிடைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும்

- மரபுவழி மருத்துவமுறைகளான சித்த மருத்துவம், ஆயுர்வேதம், ஹோமியோபதி மற்றும் யுனானி உள்ளிட்ட மாற்று மருத்துவமுறைகள் மேம்படுத்தப்படவும்

- முதியோருக்கு வீடுதோறும் சென்று மருத்துவ வசதி வழங்கிட செயல்திட்டம் வகுக்கப்படவும்

- அனைவருக்கும் இலவசமாக நல்வாழ்வு மற்றும் மருத்துவ சேவைகள் வழங்கிட செயல்திட்டம் வகுக்கப்படவும்

- அரசு மருத்துவமனைகளைச் சீரமைத்துத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவமனைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதுடன், சுகாதார சேவைகள் மக்களுக்கு பயனுள்ள வகையில் செழுமைப்படுத்தப்படவும்

- தனியார் மருத்துவக் கல்லூரிகளின் தரம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை தொடர்ந்து ஆய்வு செய்து கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படவும்

- தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 'கல்விக் கட்டணம்' முதலியவற்றை அரசே குழு அமைத்து நிர்ணயம் செய்யும். தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக் கட்டணம், சிகிச்சை முறைகள் முதலியவை ஒழுங்குபடுத்தப்படவும்

- அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் பாதுகாப்பில் கவனம் செலுத்தப்படவும்

- அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் தேவையான அளவிற்கு மருத்துவர், செவிலியர் மற்றும் இதர மருத்துவப் பணியாளர்கள் 'நிரந்தரமாக' நியமிக்கப்படுவார்கள். ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதும், 'அவுட் சோர்சிங்' செய்வதும் நிறுத்தப்படவும்

- மது, புகையிலை மற்றும் போதை மருந்து பழக்கங்களுக்கு ஆளானவர்களை மீட்டெடுக்க 'மீட்சி மற்றும் மறுவாழ்வு நிலையங்கள்' ஏற்படுத்தப்படவும்

• அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் நல்வாழ்வு சேவைகள் விரிவுபடுத்தப்பட்டு சீரமைக்கப்படவும் விசிக போராடும்.

• பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசி 100 விழுக்காடு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

• பெண்கள் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக பச்சிளம் குழந்தைகள் பிறந்தவுடன் இறக்கும் நிலை தொடருகிறது. ஏழை, எளிய பெண்கள் கருவுற்ற காலத்தில் ஊட்டச் சத்து அளிப்பதை உறுதி செய்யவும் விசிக வலியுறுத்தும்.

## உள்ளாட்சி நிர்வாகம்

1) நடுவன் அரசின் அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும். எப்படி மாநிலங்களுக்கான முழுமையான அதிகாரம் வழங்கிட வேண்டும் என்று கோருகிறோமோ அதைப் போலவே உள்ளாட்சி அரசுகளுக்கான நடுவண் அரசு கொண்டு வந்த சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி 29 துறைகளுக்கான அதிகாரத்தை முழுமையாக வழங்கிட வேண்டும். மேலும் தமிழ்நாடு ஊராட்சி சட்டம் பிரிவு 205, ஊராட்சி மன்றத் தலைவரை நீக்கிடும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் சனநாயக நடைமுறைக்கு எதிரானதாக உள்ளது. அதுமட்டுமில்லாமல் தனிப்பட்ட பழிவாங்கும் போக்கை ஊக்கப்படுத்துவதுபோலவும் இருப்பதால் அந்த அதிகாரத்தை திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

• அரசு வருவாயில் 30 விழுக்காடு நிதி உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டு, உள்ளாட்சிகள் மூலம் வளர்ச்சிப் பணிகள் மேற்க்கொள்ளப்பட வேண்டும்

• உள்ளாட்சி நிர்வாகம் வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட கிராம சபை கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு திட்டங்கள், செயல்பாடுகள் குறித்து மக்களின் ஒப்புதல் பெறப்படவும்

• நகர்ப்புறங்களில் வார்டு அடிப்படையிலான மக்கள் சபை கூட்டங்கள் நடத்துவது கட்டாயமாக்கப்படவும்

• கிராமப்புற - நகர்ப்புற சிறிய நடுத்தர கட்டுமானப் பணிகள் ஒப்பந்தம் மூலம் நிறைவேற்றுவது மட்டுமின்றி, மக்களின் நேரடிப் பங்களிப்போடு வாய்ப்புள்ள இடங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் உள்ளாட்சி அமைப்புகள் மூலமே நிறைவேற்றப்படவும்

• உள்ளாட்சிகளில் பெண்கள், தலித்துகள், பழங்குடியினர் தங்களது அதிகாரங்களை சுயேட்சையாகவும், யாருடைய தலையீடு இன்றியும் செய்திட உத்தரவாதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும்

• உள்ளூர் இயற்கை வளங்கள் பயன்பாடு குறித்து அரசு, கிராம சபைகளுடன் கலந்து பேசி முடிவெடுக்கும். உள்ளூர் இயற்கை வள வருமானத்தில் உரிய பங்கு ஊராட்சிகளுக்கு அளிக்கவும்

• ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தானிய உலர் அறைகள், குளிரூட்டும் அறைகள், பழுக்க வைக்கும் அறைகள் உள்ளிட்ட சிப்பம் கட்டும் கூடங்கள் அமைத்துத் தரப்படவும்

• நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாத சம்பளம் வழங்குவது போல் உள்ளாட்சியில் உள்ள தலைவர்கள் குறிப்பாக ஊராட்சி மன்ற தலைவர்கள் முழுநேர பணியாக செயல்படுவதால் அவர்களுக்கு மாதச் சம்பளமாக குறைந்தது ரு.10000 வழங்கிடவும் விசிக வலியுறுத்தும்.

## மின்துறை

• மின்உற்பத்தி திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டு தமிழகத்தை மின் உபரி மாநிலமாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

• மரபுசாரா எரிசக்தி திட்டங்களான காற்றாலை மின்உற்பத்தி, சூரிய ஒளி உற்பத்தி ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கவும்

• நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் சார்பில், 1600 மெகா வாட் திறன் கொண்ட அனல் மின்சார உற்பத்திக்கு சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் திட்டமிடப்பட்ட ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டத்திற்காக, பத்தாயிரம் ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக, இத்திட்டம், பல ஆண்டுகளாக மத்திய, மாநில அரசின் அலட்சியம் காரணமாக முடங்கிக் கிடக்கின்றது. தமிழ்நாட்டின் மின்சாரத் தேவையை நிறைவு செய்ய உதவும் ஜெயங்கொண்டம் மின் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கவும்,

• கிராம பஞ்சாயத்துகளில் சூரிய ஒளி மின் உற்பத்தி கட்டமைப்புகளை வலுப்படுத்தி கிராமங்களில் மின் வெட்டு இல்லாத நிலையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவும்,

• சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தி செய்து பயன்படுத்துவதை ஊக்கப்படுத்த தனிநபர் வீடுகளில் அதற்கான கட்டமைப்பை உருவாக்கிட மானியத்துடன் வட்டி இல்லாக் கடன் வழங்கப்படவும்,

• தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக்கழகத்தின் சார்பில் வெளிமாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்குவதில் நடைபெறும் ஒப்பந்தங்கள் வெளிப்படைத் தன்மையுடன் முறைகேடுகள், ஊழல்கள் இல்லாமல் செயல்படுத்தப்படவும்,

• தொழில்நுட்பரீதியில் மின்சாரம் கொண்டு செல்லும் பாதைகளில் ஏற்படும் மின்இழப்பைக் குறைப்பதற்கும், அடிக்கடி மின்அழுத்தம் குறைவதைத் தடுத்து நிறுத்தி தடையின்றி தரமான மின்சாரம் வழங்கிடவும் நடவடிக்கை எடுக்கப்படும். நகரங்களிலும், கடற்கரையோர கிராமங்களிலும் பூமிக்கு அடியில் மின்சாரம் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படவும்,

• தமிழ்நாட்டில் 152 நகராட்சிகள், நகர பஞ்சாயத்துகள், 12 மாநகராட்சிகள், இதில் அன்றாடம் சுமார் 20 ஆயிரம் மெட்ரிக் டன் குப்பைகள் சேருகின்றன. இவற்றைப் பிரித்து மக்கும் குப்பைகளில் இருந்து (கேஸ்) வாயு மூலம் ஆயிரம் மெகாவாட்டும் மக்கா குப்பைகளில் இருந்து எரித்து அனல் மின்சாரம் மூலம் இரண்டாயிரம் மெகா வாட் மின்சாரம் ஆக கூடுதல் மூன்றாயிரம் மெகா வாட் மின்சாரம் தயாரிக்கலாம். இதன் மூலம் 25 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவும்,

• அதிமுக அரசு மின்கட்டணத்தை உயர்த்தி மக்கள் மீது சுமையை ஏற்றினர்.

மத்திய அரசின் மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கொண்டு வந்துள்ள விதிமுறைகள் முற்றிலும் மக்கள் விரோதமானது. மின் கட்டணம் மக்களைப் பாதிக்காத வகையில் ஒரே சீராக வசூலிக்கப்படவும்,

• தற்போதுள்ள மின்கட்டணம் குறைக்கப்படும். மின்சாரக் கட்டணம் செலுத்தும்போது இரு மாதங்களுக்கு ஒருமுறை என்று தற்போதுள்ள நடைமுறையால் சாதாரண எளிய நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு மாதா மாதம் மின் கட்டணம் செலுத்தும் வகையில் மாற்றப்படவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## பத்திரிகையாளர் நலன்

• பத்திரிகையாளர்களுக்கு வீட்டு வசதி திட்டம், வாடகை வீடு திட்டம், புதிய மருத்துவக் காப்பீடு, மாத ஒய்வூதியம் அதிகரிப்பு போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கும்

• மாவட்ட அளவில் பணியாற்றும் அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் வீட்டு மனைகள் அளிக்கப்படும். மாவட்ட, வட்ட அளவில் பணியாற்றும் அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் இலவச பேருந்து சலுகை அளிக்கப்படவும்

• பத்திரிகையாளர்கள் குடும்ப நலனை கருத்திற்கொண்டு ரூ. 25 லட்சம் மதிப்பில் மருத்துவக் காப்பீடு அரசு சார்பில் வழங்கப்படவும்

• அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் இரு சக்கர வாகன கடன் வட்டியின்றி வழங்க பரிந்துரை செய்யப்படவும்

• வட்டாரப் பத்திரிகையாளர்களுக்கும் அங்கீகார அட்டை வழங்கப்படவும்

## மதுவிலக்கு

• தமிழ்நாட்டில் முழுமையான மதுவிலக்கை செயல்படுத்த தேவைபான நடவடிக்கைகள் எடுக்கப்படவும்

• மது ஒழிப்பிற்கு தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளப்படும். போதை ஒழிப்பிற்கான சிகிச்சை மையங்கள் அதிகரிக்கப்படவும்

• டாஸ்மாக் பணியாளர்களுக்கு தகுதிக்கேற்ற முறையில் அரசுத் துறையில் மாற்றுப் பணி வழங்கப்படவும்

• தமிழ்நாட்டில் மது உற்பத்தி ஆலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்டு மது உற்பத்தி ஆலைகளை நிரந்தரமாக மூட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும் விசிக பாடுபடும்.

## கிராமப்புற, நகர்ப்புற மேம்பாடு

• கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் வீட்டுமனைப் பட்டா இல்லாத அனைவருக்கும் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுவதற்கும்

• ஏற்கனவே பல வகை புறம்போக்கு இடங்களில் குடியிருப்போருக்கு வகை மாற்றம் செய்து பட்டா வழங்கப்படவும்.

• சொந்த வீடு இல்லாத அனைத்து ஏழை குடும்பங்களுக்கும் குடியிருக்க மாநகராட்சி,

நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி உட்பட அனைத்துப் பகுதிகளிலும் வீடு கட்டுவதற்கான பெருந்திட்டம் உருவாக்கப்படவும். குடியிருக்க வீடில்லாத அனைத்துக் குடும்பங்களுக்கும் வீடு வழங்கப்பட்டு குடிசைகள் இல்லா தமிழகம் அமைவதற்கு விசிக குரல் எழுப்பும்.

• நகர்ப்புறங்களில் ஓடும் எல்லா நதிகளும் கரையமைத்துப் பாதுகாக்கப்படும். கரை அமைப்பது, மற்றும் நீர்வழிகளை அழகுற பராமரிப்பதில் தனியார் பங்களிப்பு கோரப்படவும்

• கூவம் நதி துவங்கி, நொய்யல் ஆறு உள்ளடங்கி தென் கோடியில் பாயும் தாமிரபரணி நதி மற்றும் பிற நதிகள் எல்லாம் உயிர் நாடிகளாகப் போற்றப்படும் நிலைமை அமைய எல்லா முயற்சிகளும் எடுக்கப்படவும்

• தமிழ்நாட்டில் கிராமங்கள் தோறும் அரசு பொது மயானங்கள் அமைக்கப்படவும் விசிக பாடுபடும்.

## நகர்ப்புற மக்கள்

• நகர்ப்புற, கிராமப்புற மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்க புதிய திட்டங்கள் உருவாக்கப்படும். மக்கள் அதிகம் கூடும் இடங்களில் சுத்தகரிக்கப்பட்ட குடிநீர் இலவசமாக வழங்கப்படவும்.

• கிராமப்புறங்களில் அனைத்து வீடுகளுக்கும் கழிப்பறை வசதி, நகர்ப்புறங்களில் வடிகால் வசதி மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த ஆவன செய்யப்படவும் விசிக வலியுறுத்தும்.

## சென்னை குடிசைப் பகுதி மக்களின் வாழ்வுரிமைப் பாதுகாப்பு

• சென்னை மாநகர் உருவாக்கப்பட்ட நாள் முதல் தலித் மற்றும் மத சிறுபான்மையினர் மாநகரின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் ஆதார ஆற்றலாக இருந்து வருகின்றனர். இம்மக்கள் இல்லையெனில் சென்னை என்பது இன்று உலகம் முழுவதும் தமிழர்களின் பெருமைமிகு பெருநகரமாக மாறியிருக்காது, ஆனால் எந்த மக்கள் இம்மாநகரை உருவாக்கினார்களோ அவர்கள் சென்னை மாநகரை விட்டு வெளியேற்றப்படுவது இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. சென்னை நகராக இருந்த போதும் மாநகராக வளர்ந்த போதும் பின்பு பெருநகராக மாறிய போதும் ஒவ்வொரு வளர்ச்சிப் படிநிலையிலும் இம்மக்கள் வெளியேற்றப்பட்டு வந்துள்ளனர். குடிசை மக்களின் வாழ்விடங்களை மேம்படுத்த தொடங்கப்பட்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் இம்மக்களை சென்னையை விட்டு வெளியேற்றும் வாரியமாக மாறியுள்ளது. எனவே சென்னையில் உள்ள குடிசைப்பகுதி மக்களுக்கு அவர்கள் வாழுகின்ற பகுதியிலேயே வீடுகளைக் கட்டிக்கொள்ள தமிழக அரசு ஆவண செய்ய வேண்டும். அப்படி கட்டாயமாக வெளியேற்றப்படும் குடிசைப் பகுதி மக்களுக்கு அவர்கள் குடியிருந்த இடத்திற்கு அருகிலேயே கலைஞர் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் வீடுகளைக் கட்டித்தர விசிக பாடுபடும்.

## பொது விநியோகம்

• விண்ணப்பித்து காத்திருக்கும் தகுதியுள்ளவர்கள் அனைவருக்கும் புதிய குடும்பஅட்டைகள் தாமதமின்றி வழங்கப்படுவதற்கும்,

• 500 குடும்ப அட்டைகள் உள்ள குடியிருப்புகளுக்கு தனியே ஒரு நியாய

விலைக்கடையும், 100 குடும்ப அட்டைகள் உள்ள குடியிருப்புகளுக்கு பகுதிநேர கடையும் திறக்கப்படவும்,

• நடமாடும் நியாய விலை கடைகள் தேவையான இடங்களில் ஏற்படுத்தப்படவும்,

• நியாய விலை கடைகளில் வழங்கப்படும் அரிசி, கோதுமை உள்ளிட்ட பொருட்கள் தரம் பாதுகாக்கப்படவும்,

• காய்கறி, பழங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் நியாய விலை கடைகள் மூலம் மானிய விலையில் வழங்கப்படவும்.

• சென்னையில் செயல்படும் அமுதம் அங்காடிகள் போல் அனைத்து மாநகராட்சி பகுதிகளிலும் அமைக்கப்படவும் விசிக வலியுறுத்தும்.

## நீதித்துறை

• காலியாகவுள்ள நீதிபதிகள் பணியிடங்கள் அனைத்தும் உடனே பூர்த்தி செய்யப்படவும். பணி நியமனங்கள் அனைத்தும் எவ்வித முறைகேடுகளுமின்றி தகுதியான நபர்கள் நியமிக்க ஏதுவாக முறை ஒழிக்கப்பட்டு புதிய அமைப்பு உருவாக்கப்படும்;

• நீதித்துறையின் செயற்பாடுகள், நாட்டின் அனைத்து மாநில மக்களுக்கும் விரைவான பயன் அளிக்கக்கூடிய விதத்தில் அமைந்தால்தான், உண்மையான கூட்டு ஆட்சி நிலைபெறும். எனவே, உச்சநீதிமன்றத்தின் கிளையைத் தமிழகத்தின் தலைநகர் சென்னையில் அமைத்திடவும். உயர்நீதித்துறையில் பெண்கள்/எஸ்சி/எஸ்டி/ஓபிசி பிரிவினருக்கு இடஒதுக்கீடு வழங்கிட குரல் எழுப்பும்.

## சுங்கவரி

• தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையம், இந்தியா முழுவதும் நெடுஞ்சாலைகளில் சுங்கவரிச் சாவடிகள் அமைத்து இருக்கின்றது. போக்குவரத்துக்கான வாகனங்கள் சாலை வரி ஆண்டுதோறும் உயர்த்தப்பட்டு வருகின்ற நிலையால், நெடுஞ்சாலைச் சுங்கவரியும் வாகனங்களுக்குப் பெரும் சுமையாக இருக்கின்றன. கட்டுப்பாடற்ற முறையில் சாலை சுங்கவரி வசூலிப்பதை இரத்து செய்ய வலியுறுத்தப்படும்.

## சாலைப்போக்குவரத்து

• அதிமுக அரசு வரலாறு காணாத வகையில் உயர்த்திய பேருந்து கட்டணம் குறைக்கப்படவும். ஆம்னி பேருந்துகளின் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவும்.

• தனியாருக்கு நிகராக சகல வசதிகளுடன் அரசு பேருந்துகள் இயக்கப்படவும்.

• பெரு நகரங்களில் உள்ள சாலைகளில் மிதிவண்டி பயணத்திற்கும் பாதசாரிகளுக்கும் தனிப்பாதைகள் அமைக்கப்படவும்.

• அதிகரித்து வரும் சாலை விபத்துகளைத் தவிர்த்திட சாலைகளை அகலப்படுத்தி தரமானதாக மேம்படுத்துவது, மாநில சாலைகளில் தேசிய நெடுஞ்சாலைகள் போல் பிரிப்பான்கள் ஏற்படுத்துவது, சந்திப்புகளில் மேம்பாலங்கள் அமைப்பது, அரசுப் பேருந்துகளின் தரத்தைப் பாதுகாப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும் வலியுறுத்துவோம்.

• இந்தியாவில் சாலை விபத்துகளில் உயிர் இழப்போர் எண்ணிக்கை பெருகி வருகிறது. தமிழ்நாட்டில் மட்டும் ஆண்டுதோறும் 15 ஆயிரம் பேர் இறக்கிறார்கள். 40 ஆயிரம் பேர் கை, கால்களை இழந்து முடமாகிறார்கள். நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 3 விழுக்காடு அளவுக்கு இழப்பு ஏற்படுகிறது. விபத்து ஏற்பட்ட உடனேயே அளிக்கும் சிகிச்சைக்காகவே சுமார் 7 இலட்சம் கோடி ரூபாய் செலவாகிறது. உடல் ஊனம் அடைவதால் கோடிக்கணக்கான ரூபாய் தேசிய இழப்பு ஏற்படுகிறது. இந்தக் காரணங்களால் சாலை விபத்துகளை தேசியப் பேரிடராகக் அறிவிக்க வேண்டுமென்று வலியுறுத்தப்படும்.

• அரசின் பல்வேறு துறைகளுக்கு இடையில் ஒற்றுமையும் ஒருங்கிணைப்பும் இல்லாததால், சாலைப் பாதுகாப்புக்கான சட்டங்கள் ஏட்டளவிலேயே இருக்கின்றன. எனவே, சாலை விபத்துக்களைத் தடுக்கவும், அதற்கான ஆலோசனைகள் கூறவும், சாலை விதிகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்தவும், 'சாலை பாதுகாப்புக்கான மத்திய வாரியம்' அமைக்க வலியுறுத்தப்படும்.

• சாலை விபத்துக்கள் அதிகரிப்பதற்கு முதன்மைக் காரணமாக இருப்பது ஓட்டுநர்கள் ஓய்வெடுக்காமல் தொடர்ந்து பணி செய்வதுதான். எனவே அனைத்து பெருநகரங்கள் உள்ளிட்ட சிறு நகரங்களிலும் உள்ள விடுதிகளில், வாகன ஓட்டுநர்கள் ஓய்வு அறைகள் அமைக்க வேண்டும் என்பது கட்டாயமாக செயல்படுத்தப்படுவதறு வலியுறுத்துவோம்.

## திரைப்படத்துறை

• திரைப்படத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள், நலிவுற்ற திரைப்படத்துறை, சின்னத்திரை கலைஞர்கள் நலன் பாதுகாக்கப்படவும்;

• அரசு நிர்ணயித்துள்ள திரையரங்கு கட்டணங்கள் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். கூடுதல் கட்டணங்கள் வசூலிக்கும் திரையரங்குகள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படவும்;

• குறைந்த செலவில் எடுக்கப்படும் தரமான திரைப்படங்கள் மற்றும் சமூக சீர்திருத்த கருத்துக்களை வலியுறுத்தும் திரைப்படங்களைத் தேர்வு செய்து பாராட்டும், பரிசுத் தொகையும் வழங்கப்படவும் விசிக பாடுபடும்.

## சுற்றுலா வளர்ச்சி

• சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்கு புதிய தொடர்வண்டித் தடம் அமைத்தல், புதிய சுற்றுலா விடுதிகளைக் கட்டுதல், ஹெலிகாப்டர் சேவை, விரைவுப் படகுப் போக்குவரத்து, பலூன் விளையாட்டுகள், மலை ஏற்றம் என அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற புதிய திட்டங்களை விரைந்து செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு வலியுறுத்துவோம்.

• தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுற்றுலா தலங்களையும் 'புதிய சுற்றுலாத் திட்டங்கள்' மூலம் மேம்படுத்தப்படும். வரலாற்று சிறப்புமிக்க தலங்கள் சுற்றுலா வட்டத்தில் இணைக்கப்படவும் விசிக பாடுபடும்.

• சுற்றுலா வாகனங்கள் இயக்கப் பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்டு, உள்ளூர் சுற்றுலா வாகனங்கள் இயக்குபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதற்கு விசிக வலியுறுத்தும்.



• நிறைவு •

# Chapter V

## பள்ளர் / பட்டியல் இன அரசியல்

இரா.கிருத்துதாசு காந்தி

➢ இந்தியாவில் உள்ளது குடியாட்சிக் குடியரசு (Democratic Republic) அரசியல்.

➢ இந்தக் குடியாட்சி, தேர்தலை அடிப்படையாகக் கொண்டது. வாக்களிக்கக் குறிப்பிட்ட வயதைத் (18) தாண்டிய அனைவருக்கும் உரிமை உண்டு.

➢ தேர்தல் கட்சி அடிப்படையில் நடைபெறுகிறது.

➢ அரசியல் என்பது பாராளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல், ஊராட்சித் (பஞ்சாயத்துத்) தேர்தல், கூட்டுறவு சங்கத் தேர்தல் ஆகிய நான்கு படிகளை உள்ளடக்கியது.

➢ ஐந்தாவதாகக் கட்சிகள் தமது நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்.

அரசியல் அதிகாரத்தை இந்த ஐந்து படிமங்களும் தரும். மக்களாட்சித் தேர்தல் வாக்காளர் எண்ணிக்கையில் தீர்மானிக்கப் படுகிறது. இந்தியாவின் எந்தவொரு தொகுதியிலும் ஒரு இனக்குழு தன்னுடைய மக்கள் எண்ணிக்கையை மட்டும் திரட்டித் தேர்தல் வெற்றி காண முடியாது. ஒரு தொகுதியில் ஒரு குறிப்பிட்ட இனக் குழுவினர் பெரும்பான்மையராகவோ (50% க்கு மேல்) அல்லது கூடுதல் எண்ணிக்கையிலோ இருப்பினும் அவர்கள் யாவரும் ஒருமித்து ஒரு கட்சியையோ, ஒரு வாக்காளரையோ ஆதரிப்பதில்லை. அதே இனத்தவர் தாம் எதிரெதிர் கட்சிகளிலும், எதிரெதிர் வேட்பாளராகவும் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அதே இனத்தைச் சார்ந்த வேட்பாளர்கள் தாம் போட்டியிடும் அதே இனத்தைச் சார்ந்த பல வேட்பாளர்க்கும் வாக்குகளைப் பகிர்ந்து அளிக்கின்றனர்.

ஆகவே தேர்தல் வெற்றிகளை இனக்குழுக்கள் அல்லது சாதியம் தான் தீர்மானிக்கிறது என்பது முழுமையான கணிப்பல்ல. அதாவது தனித்த ஓர் இனக்குழுவின் வாக்குகளாலோ அல்லது இரு இனங்களின் கூட்டு வாக்குகளாலோ தேர்தல் வெற்றி தீர்மானிக்கப் படுவதில்லை. வெற்றி பெறுபவர்களுக்கு வாக்களிப்பதும் அவர்களே; தோற்பவர்களுக்கு வாக்களிப்பதும் அவர்களே.
அடுத்ததாக ஓர் இனக்குழு அவர்க்கு வேண்டியதை மட்டும் வாக்குறுதிகளாக முன்னிறுத்தி எங்கும் வெற்றி காண முடியாது. முடிந்ததும் இல்லை.

ஆயினும் கட்சி உள் கட்டமைப்புகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் நடக்கும் தேர்தல்களில்

இனக்குழு / சாதியத் தாக்கம் வெற்றிக் காரணியாக இராது என்று சொல்ல முடியாது.
இனப் பாசங்களை மீறிக் கட்சிச் சார்புகள் வெற்றிக் காரணியாக இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.
இந்த அடிப்படை நிலவரங்களைக் கருத்தில் கொண்டு பள்ளர், பறையர், அருந்ததியர், தனித் தனியாகவோ கூட்டாகவோ வியூகங்களை வகுத்துக் கொள்ள வேண்டும்.

அரசியல் சாசனம் உறுதி செய்துள்ள தனித் தொகுதிப் பகிர்வு, பட்டியல் இனத்திற்குப் பெரும் ஆதரவானது. இத்தொகுதிகளில் கட்சிகள் சார்பாகத் தான் போட்டியிட்டு வெல்ல முடியும் என்பதால், வெற்றி பெறும் பட்டியல் இனத்தவர் கட்சிகளுக்கு விசுவாசமாக இருப்பாரே அன்றி பட்டியல் இன உரிமைப் போராளிகளாகப் பரிமளிக்க முடியாது என்ற பார்வையை முழுமையாகப் புறந்தள்ளலாகாது. அதே வேளை சுயேச்சையாகவோ, பட்டியல் இனங்கள் கட்டமைத்த கட்சிகள் சார்பாகவோ வெற்றி பெற்று வருவோரும் எந்த அளவிற்குப் பட்டியல் இனப் போராளிகளாக இருப்பர் என்பதும் கேள்விக்குரியதே. இந்த உணர்வுகள் தனி மனிதப் பாங்கைப் பொருத்தது.

தமிழகத்தில், பட்டியல் இனமாக அமைக்கப்படும் கட்சிகள், இதுவரை தமிழ்நாட்டில், பட்டியல் இனத்தவரால் உருவாக்கப்பட்ட கட்சிகளில் விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம், குடியரசுக் கட்சி ஆகிய மூன்றை மட்டும் தேர்தல் ‘வெற்றி கண்ட கட்சிகளாக’ அடையாளம் காண முடிகிறது. தனியாகவோ அல்லது கூட்டணிகளில் பங்கு கொண்டோ 5-10 இடங்களுக்கு மேல் ‘சட்ட மன்றத் தொகுதிகளை வெல்லுதல்’ பட்டியல் இன மக்கள் எண்ணிக்கையால் மட்டும் சாத்தியப் படாது. பள்ளர், அருந்ததியர்களுக்கு ஒரு சட்ட மன்றத் தொகுதி கூட சாத்தியப் படாது.

மாநில அளவில் மொத்தப் பட்டியல் இன மக்கள் தொகையைப் பார்த்து, அரசியல் கணிப்பு செய்யலாகாது. ஓவ்வொரு தொகுதியிலும் உள்ள வாக்காளர் எண்ணிக்கையே “வெற்றிக்கு இலக்கு”. மாநில அளவில் உள்ள, இன மக்கள் ஆதரவை வைத்துத் தனிக் கட்சி கூட அமைத்துக் கொள்ளலாம். ஆனால் தேர்தல் வெற்றிக்குத் தொகுதிகளில் உள்ள அந்த இன மக்கள் வாக்காளர் எண்ணிக்கை தான் கை கொடுக்குமே அன்றி, மாநில மக்கள் தொகை எடுபடாது.

தமிழ்நாட்டில் இனக் குழுக்களை வைத்துப் பின்னப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, புதிய தமிழகம் கட்சி, குடியரசுக் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, தமிழக மக்கள் முன்னேற்றக் கட்சி ஆகிய கட்சிகள் அனைத்தும் கட்சிகளாக உலாவ முடியும். ஆனால் தேர்தல் வெற்றிகள் வெகு சிலவே;பட்டியல் இனம் தமதுஅரசியல் நுழைவைப்பஞ்சாயத்துகளிலும், கூட்டுறவுச்சங்கங்களிலும்

வலுவாக்க வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர்களுக்கானப் பங்கீடு (Reservation ) சுழற்சி முறையில் கையாளப்படுவதால், பல பொதுத் தொகுதிகளைப் (ஏற்கனவே கிடைக்கும் பங்கீட்டுத் தொகுதிகளுக்கு மேலாக) பட்டியல் இனத்தவர் கைப்பற்ற முடிகிறது. இதைப் பட்டியல் இனத்தவர் கூர்மையாக்கிக் கொள்ள வேண்டும். பங்கீட்டுப் பலன்கள் பள்ளர், பறையர், அருந்ததியர் மூவர்க்கும் பலன்களைக் கொண்டு வந்துள்ளது.

கூட்டுறவு சங்கங்களின் தேர்தலில் பட்டியல் இனம் உரிய பங்கீட்டை இன்னும் அடையவில்லை. 'கூட்டுறவுச் சங்கத் தலைவர் தேர்தலில் பங்கீடு இல்லை' என்பதை நினைவில் கொள்க. சங்க இயக்குநர்களில் 'இருவர் பட்டியல் இனமாக இருக்க வேண்டும்' என்ற விதி மட்டும் உண்டு.

பஞ்சாயத்து ஒன்றியங்கள் மற்றும் கூட்டுறவு ஒன்றியங்களில் பதவி வகித்தவர் தாம் தற்போதையக் கட்சிப் பொறுப்புகளில் பெரும்பான்மையைக் கைப்பற்றி வருகிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

கட்சிப் பாகுபாடு இன்றி பஞ்சாயத்துகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் இனத்தவர்களுக்கு அரசியல் ஈடுபாட்டை வளர்த்தெடுக்கும் களப் பணிகளைப் பட்டியல் இனக் குழுக்கள் ஆற்ற வேண்டும். அதே போன்று பஞ்சாயத்துகளுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் தேர்தல் அறிவிக்கப்படும் போது பட்டியல் இன வேட்பாளர்களை நிறுத்துவதற்கு உறுதுணை செய்தல், தேர்தலில் அவர்களுக்கான ஆதரவு நிலை எடுத்தல் (எந்தக் கட்சிகள் என்ற பாகுபாடு இன்றி), தேர்தலில் வெற்றி பெற்றோருடன் இணைந்து செயல்படுதல் ஆகிய செயல்களைப் பட்டியல் இனம் ஆற்ற வேண்டும்.

பட்டியல் இனத்தவரால் உருவாக்கப் பட்டுள்ள அரசியல் கட்சிகள் (விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம், குடியரசுக் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, இன்னும் ஓரிரு உதிரி அமைப்புகள்) தமக்கான இடங்களை நிர்ணயித்துக் கொள்ளலாம். இவர்கள் தமக்குள் சுமூகமாகப் பேசி, இடங்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.

ஒரு பட்டியல் இனக் கட்சி நிற்கும் இடத்தில், இன்னொரு பட்டியல் இனக் கட்சி வேட்பாளர்களை நிறுத்தல் ஆகாது; இதே நிலைப்பாட்டைச் சட்ட / பாராளுமன்றத் தேர்தலிலும் கடைபிடிக்கலாம். அதே சமயம், எல்லாத் தொகுதிகளிலும் பட்டியல் இனக் கட்சிகள் தமது வேட்பாளர்களை நிறுத்த முனைவது பின்னடைவையும், பட்டியல் இனக் குழுக்களிடையே முரண்களையும் கொண்டு வரும்.

தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க, காங்கிரசு, BSP, CPI, CPM ஆகிய கட்சிகள் நிறுத்தும் வேட்பாளர்களுக்கும், எல்லாப் பட்டியல் அமைப்புகளும், பட்டியல் இன அரசியல் கட்சிகளும், ஆதரவு நல்கலாம். இதை ஒரு பட்டியல் இன அரசியல் அதிகார அணுகுமுறையாகக்

கருதலாம். எடுத்துக் காட்டாகப் பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில், 3000 இடங்களில், சற்றொப்ப 1500 இடங்களில், எந்தெந்தக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு, ஆதரவு நல்குவது என்பதைப் பட்டியல் இனம், ஒருமித்து முடிவு எடுத்தால் பட்டியல் இன அரசியல் செல்வாக்கு எடுபடும்.

அடுத்துப் பட்டியல் இன அமைப்புகள், பட்டியல் இனத்தவர்க்கு கட்சிப் பதவிகளைப் பெற்றுத் தர அனைத்துக் கட்சிகளுடனும், பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். ஒவ்வொரு கட்சிக்கும், தமிழ்நாடு முழுவதும் சற்றொப்ப 600 ஒன்றியச் செயலாளர் பதவிகளும், 60 மாவட்டச் செயலாளர் பதவிகளும், உள்ளன. இவற்றில் 1/5 (120 ஒன்றியச் செயலாளர் + 12 மாவட்டச் செயலாளர்) பதவிகளைப் பட்டியல் இனத்தவர்க்கு, எல்லாக் கட்சிகளும் வழங்குவதை, உறுதி செய்ய வேண்டும்.

பட்டியல் இனத்தவரால் தனித்து அமைக்கப்படும் அரசியல் கட்சிகளால், பட்டியல் இன அரசியல் அதிகாரத்தை நிறுவ முடியாது. மக்களாட்சியில் நிலவும் எல்லா கட்சிகளும், எல்லா மக்களுக்குமான கட்சிகள் தாம். அங்கும் பட்டியல் இனப் பங்கை உறுதி செய்வதே பட்டியல் இன அரசியலை உரம் பெறச் செய்யும்.

பள்ளர்களைப் பொறுத்த அளவில், புதிய தமிழகம், பட்டியல் இனப் பார்வையை மறுதலித்து விட்டதால், அதற்குக் கூட்டு மொத்தப் பட்டியல் இன ஆதரவு கிட்டாது; அதே போன்று தமமுக கட்சியும், பட்டியல் இன வெளியேற்றத்தைக் கையில் எடுத்துள்ளதால், அதற்கும் கூட்டு மொத்தப் பட்டியல் இன ஆதரவு கிட்டாது;

அண்மைக் காலமாகப் பள்ளர்கள் தேவேந்திர குல வேளாளர் என்ற பெயரில், "பள்ளர்களை அரசியல் அதிகாரத்திற்குள் கொண்டு வருவோம்" என்ற முனைப்பைக் கையில் எடுத்துள்ளனர். ஆனால் , பள்ளர் எண்ணிக்கை 1 கோடி, 1.5 கோடி என்ற கற்பனை எண்ணிக்கையில் ஏதேதோ கணக்குப் போடுகின்றனர்.

பள்ளர் மக்கள் எண்ணிக்கை சதவீதம் 2011 இன் படி மாவட்ட வாரியாகக் கீழே தரப்பட்டுள்ளது.

2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி 30 மாவட்டங்களில் மொத்தப் பட்டியலின மக்களுள் 17.07 சதவீதமாகவும், எண்ணிக்கையில் 24,65096 ஆகவும் பள்ளர்கள் உள்ளனர். 30 மாவட்டங்களில் இந்தப் புள்ளிகளில் இருந்து, பள்ளர்களது எண்ணிக்கை வலுவைக் கணித்துக் கொள்ள வேண்டும்.

பஞ்சாயத்து வாரியாகப் பட்டியல் இன மக்கள் கணக்கைப் பஞ்சாயத்துத் தேர்தல் ஆணையம் வைத்துள்ளது. ஆனால் சட்டமன்ற

/ பாராளுமன்ற பட்டியல் இன மக்கள் பகுப்பு, தேர்தல் ஆணையத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு தொகுதியிலுள்ள, பஞ்சாயத்துகளின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டு தொகுதியிலுள்ள, பட்டியல் இன மக்கள் எண்ணிக்கையைத் தொகுக்க முடியும். தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் தவிர வேறு தொகுதி எதிலும் பள்ளர்கள் வெற்றியைத் தீர்மானிக்கும் எண்ணிக்கையில் இருப்பார்களா? என்பதை அறுதியிட முடியவில்லை. தேர்தல் வெற்றிக்கு உறுதுணையாகப் பள்ளர்கள் இருக்கக்கூடிய தொகுதிகள் ஆறு மாவட்டங்களில் மட்டுமே உண்டு எனக் கூறலாம்.

| வ.எண் | மாவட்டங்களின் பெயர்கள் | மொத்த SC க்களில் பள்ளர்கள் சதவீதம் | மொத்த மக்களில் பள்ளர்கள் சதவீதம் |
|---|---|---|---|
| 01 | இராமநாதபுரம் | 64.19 | 11.81 |
| 02 | தூத்துக்குடி | 57.43 | 11.42 |
| 03 | திருநெல்வேலி | 55.94 | 10.36 |
| 04 | விருதுநகர் | 52.64 | 10.84 |
| 05 | திருச்சி | 47.53 | 8.15 |
| 06 | தேனி | 41.31 | 8.56 |

பள்ளர்கள் பெரும்பான்மையராக இருப்பர் எனக் கருதப்படும் தஞ்சை, திருவாரூர், நாகை, திருச்சி, திண்டுக்கல், கரூர், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் கூட பறையர், அருந்ததியர்களை விடப் பள்ளர்கள் எண்ணிக்கை குறைவாகவே இருப்பதைக் காணலாம்.

| வ.எண் | மாவட்டங்களின் பெயர்கள் | மொத்த SC க்களில் பள்ளர்கள் சதவீதம் | மொத்த SC க்களில் பறையர்களின் சதவீதம் | மொத்த SC க்களில் அருந்ததியர்களின் சதவீதம் |
|---|---|---|---|---|
| 01 | திருச்சி | 47.53 | 36.17 | 12.44 |
| 02 | சிவகங்கை | 37.92 | 50.23 | 5.04 |
| 03 | திருவாரூர் | 37.52 | 59.17 | 0.68 |
| 04 | திண்டுக்கல் | 36.35 | 29.73 | 30.26 |
| 05 | கரூர் | 35.48 | 28.34 | 33.38 |
| 06 | புதுக்கோட்டை | 32.65 | 62.12 | 1.73 |
| 07 | தஞ்சாவூர் | 29.12 | 66.02 | 1.94 |
| 08 | நாமக்கல் | 16.47 | 27.61 | 53.59 |

பள்ளர் மட்டுமல்ல, பறையரோ அல்லது அருந்ததியரோ தனியாகத் தேர்தல் களம் காண முடியாது; பட்டியல் இனம் மட்டுமல்லாமல், வேறெந்த தனிச் சாதியும், இதைச் செய்ய முடியாது. கட்சிகள் தமது வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க மட்டுமே, இந்த இனக்குழு அடர்த்தி உதவும். அதே போன்று கட்சி மாவட்ட ஒன்றியத் தலைவர்கள் தேர்வுக்கும், இந்த அழுத்தம் பயன்படும்.

பள்ளர்கள், இந்த அழுத்தத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு கட்சியிலும், குறைந்தது ஆறு மாவட்டத் தலைவர் பதவிகளையும், 50 ஒன்றியத் தலைவர் பதவிகளையும், பெறுவதை இலக்காகக் கொண்டு செயல்படுவது, அரசியல் பங்கேற்பை உறுதி செய்யும். வெறுமனே ஜான்பாண்டியனுக்கு ஒரு சீட்டும், கிருட்டிணசாமிக்கு ஒரு சீட்டும் பெறுவதில் "பள்ளர்கள் அரசியல்" நடவாது; அது வெறும் தனி நபர்களை, வேண்டுமானால் வளர்த்து விடலாம். பள்ளர் இனத்திற்கு, அரசியல் ஆதாயங்கள் ஏதும் நிகழாது; கடந்த 25 ஆண்டு காலக் காட்சிகளும் இதைத் தான் புலப் படுத்துகின்றன.

மொழி உணர்வோ அல்லது சாதி உணர்வோ நாட்டின் எந்த இடத்திலும் வேட்பாளர்களுக்கு, வாக்குச் சேர்க்கும் சக்தியாகச் செயல்பட முடியாது. ஏனெனில் எதிர், எதிர் நிற்கும் வேட்பாளர்களும் அதே மொழி, இன, சாதி சார்ந்து தான் நிற்கிறார்கள். ஒரு வேளை எதிர் வேட்பாளர் வேறு மொழிக்காரர் அல்லது வேறு இனத்தவர் என்றால் இக்கரணிகள் கண்டிப்பாக வெற்றியைத் தீர்மானிக்கும் என்று சொல்லலாம். தனித் தொகுதிகளுக்கும் இந்த அனுமானம் பொருந்தும். பறையர் கூடுதலாக இருக்கும் இடங்களில் பள்ளர் அல்லது அருந்ததியர் வேட்பாளர்களும், பள்ளர் கூடுதலாக இருக்கும் பகுதியில் பறையர் அல்லது அருந்ததியர் வேட்பாளர்களும் , அருந்ததியர் கூடுதலாக உள்ள பகுதிகளில் பறையர் அல்லது பள்ளர் வேட்பாளர்களும் நின்றால் வாக்குகள் பிரியும் எனக் கொள்ளலாம்.

மூவகைப் பட்டியல் இனத்தவருக்கும், இணக்கமான ஒரு வேட்பாளருக்குக் கண்டிப்பாக வெற்றி வாய்ப்புகள் கூடும். பட்டியல் இனத்தவர் அனைவரும் ஒரே கோரிக்கையில் அணி திரண்டால் அவர்களது பேச்சுக்குக் கட்சிகள் செவி சாய்க்கும்.

வெறுமனே பள்ளர் தேர்தல் புறக்கணிப்பு, பறையர் தேர்தல் புறக்கணிப்பு, அருந்ததியர் தேர்தல் புறக்கணிப்பு அல்லது பட்டியல் இனம் முழுவதுமே தேர்தல் பறக்கணிப்பு என்னும் "பூச்சாண்டிகள்" எந்தக் கட்சியின் வெற்றி தோல்வியையும் முடிவு

செய்யாது; இவர்கள் ஆதரவு நிலை எடுத்தாலாவது, ஒன்று நிகழலாம்; ஆனால், புறக்கணிப்பால் ஆவது ஒன்றுமில்லை.

பட்டியல் இனத்தவரது அரசியல், பாராளுமன்ற / சட்டமன்ற தேர்தலுக்கான பட்டியல் இனக் கட்சி வேட்பாளர்களை நிறுத்துவது என்ற முயற்சியில் மட்டும் முழுமை பெறாது. பெரிய முன்னெடுப்பையும் தராது; மாறாக அந்தந்தப் பொதுக் கட்சிகளில் தனித்தொகுதி தவிர்த்த பிற தொகுதிகளில் பட்டியல் இனம் சார்ந்தவருக்கு, வேட்பாளர் டிக்கெட் வாங்கித் தருவதில், அரசியல் வலுப்பெறும்.

இதற்கு முதற்படியாக, அனைத்துக் கட்சிகளிலும் மாவட்ட / ஒன்றியத் தலைவர் மற்றும் செயலர் பதவிகளைப் பெறுவதில் காட்டப்படும் முனைப்பு, பட்டியல் இன அரசியலைக் கூர்மை ஆக்கும். அரசியல் நுணுக்கங்களும் இவர்கள் கைவசப்படும்;

அதோடு விட்டு விடாமல், கட்சி வேறுபாடின்றி இப்பதவிகளில் அமரும் பட்டியல் இனத்தவருடன், பட்டியல் இன அரசியல் கட்சிகளும், பிற சமூக அமைப்புகளும், நல்ல உறவுகளையும், நல்லெண்ணத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். பட்டியல் இன வளர்ச்சிக்கான சிந்தனைக் களங்களில் இவர்கள் ஒருங்கிணைய வேண்டும். காலங் காலமாக, கட்சிக்குள் பதவி பெறும் பட்டியல் இனத்தவர், அக்கட்சியின் தொண்டராக மாறி விடுவர்; பட்டியல் இனத்தைத் "திரும்பிப் பாரார்" என்ற ஆலாபனையை மீண்டும், மீண்டும் வாசித்துப் பயனில்லை.

**PALLAR vs ALL CASTE ANALYSIS IN TAMILNADU -2011 CENSUS BASED REPORT.**

| S.NO | DISTRICT | ALL COMMUNITY | ALL SC | ALL CASTE vs SC % | TOTAL PALLAR | PALLAR vs ALL SCs (%) | PALLAR Vs All Caste(%) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | TIRUVALLUR | 37,28,104 | 8,21,646 | 22.04 | 6,494 | 0.79 | 0.17 |
| 2 | CHENNAI | 46,46,732 | 7,79,667 | 16.78 | 6,240 | 0.80 | 0.13 |
| 3 | KANCHEEPURAM | 39,98,252 | 9,48,081 | 23.71 | 12,168 | 1.28 | 0.30 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | VELLORE | 39,36,331 | 8,60,212 | 21.85 | 705 | 0.08 | 0.02 |
| 5 | TIRUVANNAMALAI | 24,64,875 | 5,65,329 | 22.94 | 257 | 0.05 | 0.01 |
| 6 | VILUPPURAM | 34,58,873 | 10,15,716 | 29.37 | 619 | 0.06 | 0.02 |
| 7 | SALEM | 34,82,056 | 5,80,512 | 16.67 | 26,908 | 4.64 | 0.77 |
| 8 | NAMAKKAL | 17,26,601 | 3,45,392 | 20.00 | 56,873 | 16.47 | 3.29 |
| 9 | ERODE | 22,51,744 | 3,69,483 | 16.41 | 24,301 | 6.58 | 1.08 |
| 10 | THE NILGIRIS | 7,35,394 | 2,35,878 | 32.08 | 32,617 | 13.83 | 4.44 |
| 11 | DINDUGAL | 21,59,775 | 4,52,376 | 20.95 | 1,64,432 | 36.35 | 7.61 |
| 12 | KARUR | 10,64,493 | 2,21,385 | 20.80 | 78,558 | 35.48 | 7.38 |
| 13 | TIRUCHY | 27,22,290 | 4,66,561 | 17.14 | 2,21,740 | 47.53 | 8.15 |
| 14 | PERAMBALUR | 5,65,223 | 1,75,289 | 31.01 | 24,231 | 13.82 | 4.29 |
| 15 | ARIYALUR | 7,54,894 | 1,76,230 | 23.34 | 1,898 | 1.08 | 0.25 |
| 16 | CUDDALLORE | 26,05,914 | 7,63,944 | 29.32 | 1,744 | 0.23 | 0.07 |
| 17 | NAGAPPATTINAM | 16,16,450 | 5,09,767 | 31.54 | 82,618 | 16.21 | 5.11 |
| 18 | THIRUVARUR | 12,64,277 | 4,30,927 | 34.08 | 1,61,672 | 37.52 | 12.79 |
| 19 | THANJAVUR | 24,05,890 | 4,55,062 | 18.91 | 1,32,513 | 29.12 | 5.51 |
| 20 | PUDUKKOTTAI | 16,18,345 | 2,84,804 | 17.60 | 92,984 | 32.65 | 5.75 |
| 21 | SIVAGANGAI | 13,39,101 | 2,27,746 | 17.01 | 86,359 | 37.92 | 6.45 |
| 22 | MADURAI | 30,38,252 | 4,08,976 | 13.46 | 1,36,023 | 33.26 | 4.48 |
| 23 | THENI | 12,45,899 | 2,58,200 | 20.72 | 1,06,653 | 41.31 | 8.56 |
| 24 | VIRUDHUNAGAR | 19,42,288 | 3,99,831 | 20.59 | 2,10,468 | 52.64 | 10.84 |
| 25 | RAMANATHAPURAM | 13,53,445 | 2,49,008 | 18.40 | 1,59,837 | 64.19 | 11.81 |
| 26 | THOOTHUKKUDI | 17,50,176 | 3,47,895 | 19.88 | 1,99,795 | 57.43 | 11.42 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 27 | TIRUNELVELI | 30,77,233 | 5,69,714 | 18.51 | 3,18,690 | 55.94 | 10.36 |
| 28 | KANYAKUMARI | 18,70,374 | 74,249 | 3.97 | 5,992 | 8.07 | 0.32 |
| 29 | DHARMAPURI | 15,06,843 | 2,45,392 | 16.29 | 613 | 0.25 | 0.04 |
| 30 | KRISHNAGIRI | 18,79,809 | 2,67,386 | 14.22 | 725 | 0.27 | 0.04 |
| 31 | COIMBATORE | 34,58,045 | 5,35,911 | 15.50 | 70,418 | 13.14 | 2.04 |
| 32 | TIRUPPUR | 24,79,052 | 3,95,876 | 15.97 | 39,946 | 10.09 | 1.61 |
| | **TAMILNADU** | **7,21,47,030** | **1,44,38,445** | **20.01** | **24,65,096** | **17.07** | **3.42** |


இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப.(ஓய்வு)
rcg1952@gmail.com
9444045215

# Chapter VI

## 2010 க்குப் பிறகு தமிழ்நாட்டில் பட்டியல் இனம் அடைந்த மாற்றங்கள்

ஆட்சிகள் மாறும் போது காட்சிகள் மாறலாம்; ஆனால் பட்டியல் இன மாட்சிகள் மாறுவதைப் பட்டியல் இனத்தவரால் தான் செய்ய முடிகிறது.

தமிழ்நாட்டில் 1991 முதல் இது வரை (2021) அ.தி.மு.க, தி.மு.க என்ற இரு கட்சிகள் தாம் மாறி மாறி ஆட்சி செய்துள்ளன. பட்டியல் இனத்தவர்க்கு இந்த காலத்தில் அரசுகளால் ஏற்பட்ட நன்மை, இன்மைகளைப் பார்ப்போம். 2010 க்குப் பிறகு தொடர்ந்து 10 ஆண்டுகள் அ.தி.மு.க ஆட்சி இருப்பதால் இந்தப் பத்தாண்டில் பட்டியல் இனத்தவர்க்கு ஏறு முகமா? இறங்கு முகமா? என்றும் பார்க்கலாம்.

1991 இல் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன் பட்டியல் இனத்துறை புரட்சிகரமானத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்ற கட்டளை பிறந்தது. அதன் அடிப்படையில் மூன்று பெரிய திட்டங்கள் வகுக்கப்பட்டன.

1. திருப்பூர் முதலிப்பாளையத்தில் 100 பின்னலாடைத் தொழில் முனைவோர்க்கான தொழில் வளாகம் அமைத்தல்.
2. 1000 இறால் பண்ணைகளை அமைத்தல்.
3. 1000 ஏக்கரில் மல்பரி பயிர் வளர்த்தல்.

முதல் திட்டம் மட்டும் உருவாகி வந்தது. பிற இரண்டு திட்டங்களுக்கும் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் வாங்கப்பட்டன, அதோடு திட்டங்கள் நின்று போயின. நிலங்கள் என்னாயின? எனத் தெரியவில்லை.

1996 – 2001 வரையான தி.மு.க ஆட்சியில் முதலிப்பாளையம் திட்டம் 50% முழுமை பெற்று சற்றொப்ப 40 பட்டியல் இனத்தவர் தொழில் துவங்கினர். இந்த ஆண்டுகளில் பட்டியல் இனத்தவர்க்கு வேறு சில புதிய திட்டங்கள் கைவரப் பெற்றன.

1. பெண் விடுதிகள் அனைத்திற்கும் சொந்தக் கட்டிடங்கள்.
2. ஒரே ஆண்டில் 10 பள்ளிகளுக்கு மேல் மேல்நிலைப்பள்ளி ஆக்குதல்.
3. பழங்குடியினர்க்கு நடத்தப்படும் தனியார் பள்ளிக்கு ஆசிரியர்க்கான ஊதியம் வழங்குதல்.
4. சமத்துவபுரம் துவக்கப்பட்டது.
5. மாவட்டந்தோறும் பள்ளி மாணவர்க்குப் பரிசுத் தொகை அறிமுகப்படுத்தியது.

6. மாநில முதன்மை வருவோர்க்குப் பரிசுத் தொகையை 25 மடங்காக உயர்த்தியது.

7. ஆசிரியர் பயிற்சி பெற்று வேலை இல்லாமல் இருந்த சற்றொப்ப 2000 பட்டியல் இனத்தவர்க்கு ஆசிரியர் பணி தந்தது.

8. பங்கீட்டுச் சதவீதத்திற்கு மேலாக DIET இல் ஆசிரியர் பயிற்சி பெற 800 பட்டியல் இனத்தவர்க்கும், 80 பழங்குடி இனத்தவர்க்கும் சிறப்பு இடங்கள் உருவாக்கப்பட்டன.

9. 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்திற்கான விதிகள் உருவாக்கப்பட்டு 1996 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன.

10. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நாட்டிலேயே முதன்முறையாக நான்கு அமர்வு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன.

11. நாட்டிலேயே முதன்முறையாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அரசு வழங்குரைஞர் நியமிக்கப்பட்டனர். அனைத்து இடங்களிலும் பட்டியல் இனத்தவரே நியமிக்கப்பட வேண்டும் எனவும் விதி செய்யப்பட்டு இன்றும் கடைபிடிக்கப்படுகிறது.

12. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பட்டியல் இனச் சேர்க்கை விகிதம் (GER) உயர்ந்தது.

13. ஆயிரக் கணக்கான பின்னடைவுப் பணி இடங்கள் நிரப்பப்பட்டன.

14. மேலவளவில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் விதிக்கப்பட்டுப் பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால் பாப்பாப்பட்டி உட்பட்ட மூன்று இடங்களில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நாடாமையால் தேர்தல் பல காலம் தள்ளிப்போனது.

15. எல்லாப் பள்ளிகளுக்கும் முன்னோடியாக ஆதிநலப் மேல்நிலைப்பள்ளிகளில் முதன் முறையாகக் கணிணியகம் திறக்கப்பட்டது.

2001 - 2006 வரை மீண்டும் அ.தி.மு.க ஆட்சி அமைத்தது. இக்கால கட்டத்தில் பட்டியல் இனத்தவர்க்கு பல பின்னடைவுகள் ஏற்பட்டன:

1. சமத்துவபுரம் திட்டம் நிறுத்தப்பட்டது.

2. பின்னடைவுப் பணியிடங்களை நிரப்ப, எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

3. முதலிப்பாளையம் மற்றும் இருங்கூர் தொழில் வளாகத் திட்டங்கள் முடக்கப்பட்டன.

4. ஆதிதிராவிடர்க்கு 2 ஏக்கர் நிலம் வாங்கித் தரப்படும் என்ற அறிவிப்போடு அது நின்று போனது.

5. அமைப்பாகப் பட்டியலின அதிகாரிகள் குறிப்பாக இ.ஆ.ப, இ.கா.ப, இ.வ.ப அதிகாரிகள் செயல்படக் கூடாது எனத் தமிழக வரலாற்றில் முதல் முறையாக எச்சரிக்கப்பட்டனர்.

2006 - 2011 இல் தி.மு.க ஆட்சிக்கு வந்தது. இக்கால கட்டத்தில் சமத்துவபுரம் திட்டம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. அரசுப் பின்னடைவுகளைக் கண்டறிய ஆதி நல அமைச்சர் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. ஆனால் நியமனங்கள் நடைபெறவில்லை; கல்லூரி ஆசிரியர் பணியிடங்களில் மட்டும் 500 உதவிப் பேராசிரியர் பின்னடைவுப் பணியிடங்கள் நிரப்பப்பட்டன.

2011 மீண்டும் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க இன்றுவரை (2021) 10 ஆண்டுகள் நீடித்து ஆட்சி புரிந்து வந்துள்ளது. இக்கால கட்டத்தில் பட்டியல் இனத்தவர்க்கு நடந்த ஒரே நன்மையாகப் 'போஸ்ட் மெட்ரிக் கல்விக்' கொடையைச் சுயநிதிக் கல்லூரிகளுக்கு நீடித்ததை மட்டுமே பார்க்க முடிகிறது. (அ.ஆ.6 மற்றும் 92 ஆதிந.2012)

ஆனால் பட்டியல் இனத்தவர்க்குப் பல சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

1. அதில் தலையாயது மைய அரசுடன் சேர்ந்து 'Non-plan' என்ற திட்டம் சாரா நடைமுறையை ஒழிக்கிறோம் என்ற போர்வையில் பட்டியல் இனத்தவர்க்கானத் துணைத் திட்டத்தை நிறுத்தியது மாநில அரசு. மாற்றுத் திட்டங்களாக எதையும் அறிவிக்கவும் இல்லை.

2. மைய அரசுடன் எதிர்வினைகளில் கைகோர்த்த மாநில அரசு, மைய அரசு, பட்டியல் இனத்தவர்க்கு அரசு ஒப்பந்தங்களில் அளித்த 4% பங்களிப்பை மட்டும் மாநில அரசில் நடைமுறைப்படுத்த மறுத்து வருகிறது.

3. போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடையைச் சுயநிதிக் கல்லூரிகளுக்கும் விரிவு படுத்துகிறோம் என்று ஒருபுறம் சொல்லியது. ஆனால் 2012 முதல் எந்த ஒரு ஆண்டிலும் அதற்கான பட்ஜெட் நிதியை (BE) நடப்பாண்டிலேயே ஒதுக்கவில்லை. நடப்பாண்டுக்கு நிலுவைத் தொகையாக அடுத்த ஆண்டுகளில் தான் நிதி ஒதுக்கப்பட்டது. இதனால் இலட்சக்கணக்கான மாணவர்களுக்குக் கல்விக் கொடை ஒன்றரை ஆண்டுகள் கழித்துத் தான் வழங்கப் பட்டன.

4. 2012 இல் இத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டதில் இருந்து முழு நிதியும் மைய அரசிடமிருந்தே வந்தது. 2012 க்கு முன்னர் தமிழ்நாடு அரசு எவ்வளவு செலவிட்டதோ அதே அளவு தான் 2017 வரை மாநில அரசு வழங்கியது.

5. மைய அரசு நிதியை வைத்துக் கொண்டு 2017 வரை போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை வழங்கி விட்டு மாநிலப் பொறுப்பு ஏற்க வேண்டிய 2017 - 2018 இலிருந்து கல்விக் கொடையை வழங்க மாநில அரசு பின் வாங்கியது. 2017 - 2018 தொடங்கி 2020 - 2021 வரை கல்விக் கொடை விடுவிக்கப் படவில்லை. இதனால் பொறியியல் கல்லூரியில் பட்டியல் இன மாணவர் சேர்க்கை 60 % க்கு மேல் குறைந்தது. சற்றொப்ப 30% மாணவர் இடைநிற்றல் ஆயினர். அ.தி.மு.க பட்டியல் இனத்தவர்க்கு இழைத்த மாபெரும் தீங்கு இது. ஒரு புறம் தருவது போலத் தந்து, ஓட்டு வாங்கிய பின் Fuse பிடுங்கிய கதை இது.

6. 2011 இலிருந்து சமத்துவபுரம் மட்டும் நிறுத்தப்படவில்லை. பட்டியல் இனத்தவர்க்கு வீட்டுமனை வழங்க நிலமெடுக்கும் திட்டமும் கை கழுவப்பட்டது.

1997 – 98 இல் சற்றொப்ப ரூ.20 கோடி இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டது. 2011 க்குப் பிறகு பட்ஜெட்டில் வெகு சொற்பத் தொகையே வழங்கப் பட்டது. பின் அதுவும் செலவிடப் படவில்லை. 2020 - 2021 இல் இது வெறும் ரூ.3 கோடியாகத் தேய்ந்து விட்டது

7. நிர்வாகச் சீர்கேடுகளாலும் அரசின் அக்கறை இன்மையாலும் ஆதி திராவிடர் நடத்தும் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 50- 80 % சரிந்தது. பெயர் பெற்ற சிதம்பரம் நந்தனார் பள்ளியில் முன்பு 2000க்கு மேற்பட்டவர் படித்தனர். தற்போது வெறும் 200 பிள்ளைகள் மட்டுமே பயில்கின்றனர்.

8. 2011 தொடங்கிய 10 ஆண்டுகளில் பட்டியல் இனத்தவர்க்கு ஒரு புதிய திட்டம் கூட அறிமுகப் படுத்தப்பட வில்லை.

9. 2011 இலிருந்து பத்தாண்டுகளாக அயல்நாட்டு மேற்படிப்புத் திட்டத்தின் கீழ் ஒருவர் கூட அனுப்பப் படவில்லை. மாறாக இந்தக் காலக் கட்டத்தில் அண்டை மாநிலங்களான கர்நாடகா ஆந்திராவில் ஆண்டுக்கு 100 பேரை அயல்நாட்டுப் படிப்பிற்கு அனுப்பி வைக்கின்றனர். 10 நீதிமன்ற அவமதிப்பு ஆணையையும் பொருட்படுத்தாமல் பின்னடைவுப் பணி இடங்களை நிரப்ப அரசு மரத்துப் போனது.

10. பின்னடைவுக் காலி இடங்களை நிரப்பாதது மட்டுமல்லாமல் முந்தைய ஆட்சியில் பின்னடைவுப் பணி இடங்களில் அமர்த்தப் பட்ட 30 தொழில் கல்வி உதவிப் பேராசிரியர்களுக்கும் 500 கல்லூரிக் கல்வி உதவிப் பேராசிரியர்களுக்கும் முதுவரிசை ( Seniority ) நிர்ணயிக்காமல் அவர்களது பதவி உயர்வு பல ஆண்டுகளாகத் தடைப்பட்டுள்ளது.

11. இதே போன்று 2011 இல் பின்னடைவுப் பணி இடங்களில் நியமனம் பெற்ற 23 துணை ஆட்சியரின் முதுவரிசையை ( Seniority ) நான்கு ஆண்டுகள் கழித்து நீதிமன்றத் தலையீட்டுக்குப் பின்னரே அவர்களுக்கு அரசு நிர்ணயித்தது.

12. 2016 இல் பழங்குடியின் வன உரிமைச் சட்டத்தை நிறைவேற்ற உச்ச நீதிமன்றம் ஆணை இட்டப் பிறகும் அது நிறைவாக நிறைவேற்றப் படவில்லை.

13. சிறுவனப் பொருட்கள் மகசூலைப் பழங்குடி இனத்தவர்க்கு அரசு இன்னும் மறுத்து வருகிறது. 2012 - 2013 இல் மைய அரசு வெளியிட்ட ஆணைகளும் உடைப்பில் போடப் பட்டன.

14. 2011 – 2021 இடைப்பட்ட பத்து ஆண்டுக் காலத்தில் பட்டியல் இனத்தவர்க்கு வழங்கப்படும் கூட்டுறவுச் சங்கப் பயிர்க் கடன் 50% சரிந்துள்ளது. பட்டியல் இனத்தவர்க்கு வழங்க வேண்டிய 20% க்குப் பதிலாக 10% க்குக் கீழாகவே கடன்கள் வழங்கப் பட்டுள்ளன.

15. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் கட்டாயம் இருப்பதால் அதை மழுங்கடிக்கும் வண்ணமாகக் கடந்த 10 ஆண்டுகளில் 100க்கு 90% வழக்குகளில் எதிர்மனு வாங்கப்பட்டு FIR பதியப் படுகிறது. அதுமட்டுமல்லாமல் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் பதியப்பட்ட வழக்குகளில், நெல்லை போன்ற மாவட்டங்களில், 100 % வழக்குகள் தவறானவை ( mistake of fact ) எனத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. ஆனால் எதிர் மனுவின் மீதான விசாரணை மட்டும் தொடரப்படுகிறது. இது பட்டியல் இனத்தவர்க்கு எதிரான மாபெரும் துரோகமாகும்.

16. பட்டியல் இனத்தவரை வாணிபத்தில் நுழையக் கூடாது என்ற வன்மத்தோடு கடந்த 10 ஆண்டுகளாக எவ்வித வாணிபத் திட்டங்களையும் செயல்படுத்தவில்லை. எந்தவொரு புதுத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தவும் இல்லை.

17. இந்த 10 ஆண்டு கால கட்டத்தில் மூன்று சாகித்திய விருது பெற்றுப் பட்டியல் இனத்தவர் சாதனை ஆற்றினர். ஆனால் பட்டியல் இனத் துறையோ அவர்களுக்கான பாராட்டாக எதையும் செய்யவில்லை.

சுருக்கமாக இந்தப் பத்து ஆண்டு காலம் பட்டியல் இனத்தவர்க்கு இருள் படிந்த காலம் என்று சொல்லலாம்.

23.02.2021

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
rcg1952@gmail.com
9444045215

## Chapter VII

### ஏன் அணி திரள வேண்டும்?

பட்டியல் பிரிவுகளுக்கிடையே, ஒருங்கிணைப்பை எடுத்து உரைக்க வந்தால் உங்களைப் போன்று ஓய்வு பெற்ற அதிகாரிகள், பென்சன் சுகத்தில் சுகமாகப் படுக்கப் போவது தானே? மாற்றம் பற்றி உங்களுக்கு ஏன் கவலை? என்று ஒருபுறம் பேசுகின்றனர். உங்களைப் போன்று அனுபவ சாலியான ஓய்வு பெற்ற அதிகாரிகள் ஓய்ந்து போகாமல் பட்டியல் பிரிவுகளுக்கிடையே, நல்லிணக்கத்தை எடுத்துப் பேச வேண்டும் என்கின்றனர் பலர். தனிமனிதனைப் பற்றிய அலசலை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, நிலைமைகளை உற்று அறிவோம்.

இந்தியாவெங்கும் பரந்த நிலையை இன்னொரு தளத்தில், இன்னொரு காலையில் பார்ப்போம். தமிழ்நாட்டுப் பட்டியல் இனப் பிரிவுகளை, மூன்று வகைப் பாட்டிற்குள் கொண்டு வரலாம். பட்டியல் இன, மொத்த எண்ணிக்கையில் இவர்கள் 95 % வந்து விடுகின்றனர்.

பள்ளர், பறையர், அருந்ததியர் என்ற மூவகைப் பேரினத்தவர் தாம் இவர்கள்.

**இம்மூவகையினர்க்கும் பொதுவான இணைப்புப் பண்புகள் என்று ஏதாவது உள்ளதா ?**

மண்ணின் மைந்தர் என்பர் சிலர். ஆனால் பறையரும், பள்ளரும் இவ்வாறு கோரிக் கொள்வது போல, அருந்ததியர் கோர முடியாது, என்பர் சிலர். தமிழ்மொழி அல்லது தமிழ் உணர்வு இவர்களை இணைக்கும் என்பர் சிலர். 76 பட்டியல் இனங்களில், அருந்ததியர் உட்பட 30 - 35 பிரிவினர் வேற்று மொழிகளைத் தாய்மொழியாய்க் கொண்டுள்ளனர். ஆகவே மொழி, பொதுப் பண்பாக முடியாது என்பர் சிலர். ஏழ்மையும், தாழ்மையும் இவர்களை அடையாளப்படுத்தும் **'ஓர்மை வாழ்வு நிலைகள்'** என்பதைப் பல அறிவர்களும், சமூக அறிஞர்களும் கூட அறுதிபடக் கூறுவர். ஏழ்மையும், தாழ்மையும் இல்லாத எந்த ஒரு இனமும் இந்தியாவில் இல்லை, என்பதை யாரும் மறுக்க மாட்டார். இதைக் காரணம் காட்டித் தான் **EWS** பங்கீட்டைக் கொண்டு வந்தனர். ஆகவே இவ்விரண்டு

அடையாளங்களும், அனுதாபத்தையும் கொண்டு வரலாம்; அவமானங்களையும் கொண்டு வரலாம். இவை பட்டியல் இனத்திற்கான தனிப்பட்ட அடையாளங்களாக முடியாது; கூடாது.

தீண்டாமை, உணவு வகைகள், அழிச்சாங்காட்டியங்கள் ஆகியவையும் பல இனத்தவரிடமும் பல்வேறு வகைகளில், காணப்படுகின்றன. பட்டியல் இனத்தவரை மட்டும் அடையாளப்படுத்துபவை இவை ஆகா.

ஆகவே பட்டியல் இனத்தவரை, ஒருங்கிணைப்பது என்பது

- மொழியை வைத்து வராது.
- இடம் பற்றி வராது.
- பொருளாதார, கல்வி, சமூக, அளப்பீடுகளிலும் வராது.
- தீண்டாமை ஒழிப்பிற்கு, என்று மட்டும் வருவது, மேலும் அவமானங்களுக்கு வழிவகுக்கும்.

**பின் எதை முன் வைத்து ஒருங்கிணைப்பது?**

ஒரே ஒரு சமூகக் கூறுபாடு மட்டும் பட்டியல் இனத்தவரை ஒரு முகமாக அடையாளப் படுத்துகிறது. அது தான்

**சாதி இன்மை.**

என்பது. சாதி ஒழிப்பிற்காகப் பட்டியல் இனத்தவர், அணி திரள வேண்டும் என்பதை விட, சாதியை ஏற்கனவே தமக்குள் ஒழித்தவர் என்ற அடையாளத்தில் அணி சேர்வது, ஊட்டமான செயல்பாடுகளுக்கு வழிவகுக்கும்.

**ஏன் இந்த சாதியின்மை என்ற ஒற்றை அடையாளத்தில் பட்டியல் இனம் அணி சேர வேண்டும்?**

இந்தியச் சமுதாயக் கட்டமைப்பில், சாதி சார்ந்தோர், தமது வாழ்க்கையை வளப்படுத்துவதற்குச், சாதி சாராதவர்களுக்கு வாய்ப்புகளை மறுப்பது, என்பதை ஒரு சுயதர்மமாகக் கடைபிடித்து வருகின்றனர். தனிப் பட்டியல் இனம் இதற்கு எதிர்வினை ஆற்றி மாளாது அணி சேர்ந்தால் அன்றி, இந்தச் சமூகக் கேட்டைத்

தொலைக்க முடியாது. எந்த ஒரு சாதியோ, சாதிகளின் கூட்டமைப்போ, பட்டியல் இனத்தவரை இணை சேர்க்காது; இணை வையாது. ஆகவே பொறாமை இல்லாத பட்டியல் இனங்கள் ஒருங்கிணைந்து, தமது உயர்வுகளைத் தாமே திட்டமிட்டும், அரசுகளிடம் வென்றெடுத்தும் உயர வேண்டும்.

**அணி சேர்ந்த பின் என்னென்ன நோக்கங்களுக்காக, ஓரணி நிற்க வேண்டும்?**

இந்திய விடுதலைக்குப் பின்னரே, அரசியல் சட்டத்தின்படி, பட்டியல் இனத்தவர், முதன்முறையாகச் சம உரிமை பெற்றுள்ளனர். இதைக் காத்துக் கொள்ள வேண்டும். டாக்டர். அம்பேத்கர் வடித்துத் தந்த சம உரிமையை, முடமாக்குவதற்கான முயற்சிகள் தொடர்ந்து அரசியலாகவும், சமூகவியலாகவும் இந்தியக் குமுகாயம், குறுகுறுப்பைக் காட்டி வரும்; இதை முறியடிப்பது, பட்டியல் இன ஒருங்கிணைப்பின் தலையாய நோக்கமும், செயல் திறனாகவும் இருக்க வேண்டும்.

டாக்டர். அம்பேத்கர் பெரும் அறிவு விளக்கத்துடனும், எதிர்கால நோக்குடனும், எதிரிகளின் மனப் போக்கைத் துல்லியமாக உணர்ந்தும், இந்திய அரசியல் சாசனத்தில் பட்டியல் இனத்தவருக்குப் பலகாப்புகளை, யாரும் இலகுவில் அசைக்க முடியாதபடி, வேரடியாகப் பதித்து வைத்துள்ளார். இவற்றைச் சிதையாமல் காப்பதற்குப் பட்டியல் இனம் ஓரணியில் சேர்ந்து இருக்க வேண்டும். இந்திய மண்ணில், சமூக நீதி என்பது சாதி இன்மையில் தான் விதந்து நிற்கிறது. இதைச் சாத்தியப் படுத்திய பட்டியல் இனம் மற்றவர்க்கு முன்னோடியான சமூகப் பண்புகளைப் பரப்புவதற்கு, அணி சேர வேண்டும்.

**பட்டியல் இனப் பண்புகளாவன;**

- ✓ தாழ்ச்சி சொல்வதுமில்லை. தாழ்ச்சி அடைவதுமில்லை.
- ✓ மக்களுள் உயர்வு, தாழ்வு பார்ப்பதில்லை.
- ✓ இனக்கலப்பு இயற்கையின் இயல்பு என்று போற்றுபவர்.
- ✓ சிறுமைப்படுத்த எத்தனிப்போர் மீது சீற்றம் காட்டுபவர்.

- ✓ மனிதக் குலத்தில் தம்மை மேல், கீழ், இடைநிலை எனப் பொருத்திப் பாராமல் யாவரையும் சமத்தன்மைத்தவராய் (ஒரே தன்மைத்தவராய் அல்ல) பாவிப்பவர்.
- ✓ ஆரிய, திராவிட மாயைகளின் வயப்படாதவர்.

“ ஒவ்வொரு இந்தியனுக்கும் மத, அரசியல், பொருளாதாரச் சுதந்திரம் உண்டு. அதே வேளையில், இச்சுதந்திரம் எவ்வகையிலும் பிற இந்தியர்க்குத் தீங்கு விளைவித்தல் ஆகாது. அனைத்து இந்தியர்க்கும் சம வாய்ப்பு, அளிக்கப் பட வேண்டும் என்பதை வலியுறுத்தும், அதே வேளையில் கடந்த காலத்தில் வாய்ப்புகள் மறுக்கப் பட்டவர்க்கு, முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ”

**டாக்டர். அம்பேத்கர்.**

இதைக் கடைபிடிக்கும் பக்குவம் உள்ளோர், சீரணி சேர வாருங்கள்.

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப.(ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்
rcg1952@gmail.com
9444045215

**நீதிக்கான தலித் கூட்டமைப்பு (Dalit Collective for Justice – DCJ) – நீதிக்கான தேசிய தலித் இயக்கம் - National Dalit Movement for Justice (NDMJ)**
**2021 தமிழக சட்ட மன்றத் தேர்தல் – தலித் & பழங்குடி மக்களுக்கான வாக்குறுதிகள்**
**அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகள் ஒப்பீடு**
**05.04.2021**

| | நீதிக்கான தலித் கூட்டமைப்பு | தி.மு.க | அ.தி.மு.க | சி.பி.ஐ(எம்) | விடுதலைச் சிறுத்தைகள் | பாட்டாளி மக்கள் கட்சி | காங்கிரஸ் | பா.ஜ.க |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வீட்டுமனைப் பட்டா, குடியிருப்பு வழங்கப்படவேண்டும் | கிராம நத்தத்தில் நீண்ட காலமாக உள்ள குடியிருப்பு வீடுகளுக்கு வீடுகளுக்கு அடிமனைப் பட்டா வழங்கப்படும். (402) (தலித், பழங்குடியினருக்கு என குறிப்பிடப்படவில்லை. பொதுவாக உள்ளது). | குடியிருக்க சொந்தவீடு இல்லாதவர்களுக்கு அரசே இடம் வாங்கி வீடுகள் கட்டித்தரப்படும். (1) | வீட்டுமனை-பட்டா இல்லாத தகுதியான அனைவருக்கும் வீட்டு மனையும் – மனைப்பட்டாவும் வழங்கிட அரசை தொடர்ந்து கோருவோம். ஒவ்வொரு ஏழை குடும்பத்திற்கும் ஒரு வீட்டு மனை இலவசமாக வழங்கிட பாடுபடுவோம். | கிராம மற்றும் நகர்புறங்களில் வீட்டுமனைப் பட்டா இல்லாத அனைவருக்கும் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுவதற்கும்<br><br>ஏற்கனவே பலவகைப் பட்ட புறம்போக்கு இடங்களில் குடியிருப்போருக்கு, வகை மாற்றம் செய்து பட்டா வழங்கப்படவும் | | | |
| | | கட்டித்தரப்பட்டு, 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழுதடைந்த வீடுகளைச் சீரமைத்தோ அல்லது புதியதாகவோ அமைத்துத் தரப்படும். | ஆதிதிராவிட மக்களின் பழுதடைந்த தொகுப்பு வீடுகளுக்குப் பதிலாக புதிய தொகுப்பு வீடுகள் அரசால் கட்டித்தரப்படும்.(97) | | | | | 12 லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்களை மீட்டு பட்டியலின மக்களிடமே வழங்கப்படும். |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | விவசாய நிலம் வழங்கப்படவேண்டும் | | | உறுதியான நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் நிலமற்ற தொழிலாளர்களுக்கும், பட்டியல் சாதியினர், பழங்குடி மக்கள் கையில் நிலம் கிடைப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளையும் குறிப்பாக, பஞ்சமி நிலங்களை மீட்டுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள பாடுபடுவோம். | தமிழக அரசு அறிவித்த 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் அனைத்து தலித் மக்களுக்கும் 5 ஏக்கர் நிலம் வழங்கப்படவும். | | நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் பட்டியலின, பழங்குடியினர் கையில் நிலம் கிடைப்பதற்கான உறுதியான நடவடிக்கை எடுக்கபடும். குறிப்பாக பஞ்சமி நிலங்களை மீட்டெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். | |
| 3 | வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை முழுமையாக நடைமுறைபடுத்தவேண்டும் | | | சட்டத்தின் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றும் வகையில் அமலாக்கப்படவேண்டும் | வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை முழுமையாக நடைமுறைபடுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வோம். | • | • SVMC, DVMC கூட்டங்கள் முறையாக நடத்தப்படும்.<br>• மாவட்டந்தோறும் சிறப்பு விரைவு நீதிமன்றங்கள். | |
| 4 | கல்வி, வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு முழுமையாக நடைமுறைபடுத்தப்படவேண்டும். | B.C, M.B.C, S.C மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப இட ஒதுக்கீடு அளவை, அந்தந்த மாநிலங்களே நிர்ணயித்துக்கொள்ளும் வகையில் அரசியில் அமைப்புச் சட்டம் திருத்தப்பட மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தும். | சாதிவாரி கணக்கெடுப்பின் அடிப்படையில் அனைத்து சாதிகளுக்கும் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்படும். | | தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள 69% இடஒதுக்கீட்டு முறையை பாதுக்காக்கவும்.<br><br>தலித் இட ஒதுக்கீட்டை 2011 மக்கள் தொகை அடிப்படையில் 21% ஆக உயர்த்தப் பாடுபடுவோம். | கல்வி உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கீடு 50% அதிகரிக்கப்படும். | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | சாதி ஆணவப் படு கொலைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும் - "திருமணங்களில் கௌரவம் மற்றும் சாதி என்ற பெயரில் கட்டப்பஞ்சாயத்துகளில் ஈடுபடும் சட்டவிரோதக் குறுக்கீடுகள் : சட்ட முன் வடிவினை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும். | | | சாதி ஆணவப் படுகொலைகளை தடுத்திட தனிச் சிறப்புச் சட்டம் இயற்றிடவும் பாடுபடுவோம். | | | • ஆணவப் படுகொலை தடுக்க தனிச் சட்டம்.<br>• சாதி மறுப்பு திருமணம் செய்துகொண்ட தம்பதியருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை.<br>• மணமக்களில் ஒருவர் பட்டியலினத்தவராஇருந்தால் 3 லட்சம் பரிசு. | |
| 6 | "கையால் மலம் அள்ளும் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்த தடை செய்தல் மற்றும் மறுவாழ்வு சட்டம் 2013" நடைமுறைபடுத்தப் படவேண்டும். | மனிதக் கழிவுகளை மனிதரே அகற்றும் இழிவு முற்றிலுமாக ஒழிக்கப்படும். | | மனிதக் கழிவுகளை மனிதர்களை அகற்ற வைப்பதற்கு முற்றுப்புள்ளி வைக்கத் தொடர்ந்து பாடுபடுவோம். சிறப்புச் சட்டம் 2013-ன் படி மாற்றுத் தொழில் வழங்கி மறுவாழ்வை உறுதிப்படுத்திட வற்புறுத்துவோம். | கடுமையான சட்டம் கொண்டுவரவும். | | விதிகள் உருவாக்கப்பட்டு உடனடியாக சட்டம் அமுல்படுத்தப்படும் | |
| 7 | பட்டியல் இனத்தவர் & பட்டியல் பழங்குடியினர் துணைத் திட்டம் சட்டமாக்கப்பட வேண்டும். | இத்திட்டத்தை முறையாகச் செயல்படுத்தி அதன் முழுப் பலன்களும் அச்சமுதாய மக்களுக்கு உரிய காலத்தில் சேர்வதற்குரிய நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படும். | தாழ்த்தப்பட்ட சமூக மக்களுக்கான சிறப்பு கூறுகள் (Special Component Plan) திட்ட நிதி, அவர்களுக்கு முழுமையாக சென்றடையும் வகையில், | பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் துணைத் திட்டங்களின் பயன்பாடு பற்றி 10 ஆண்டு அனுபவத்தை ஆய்வு செய்து அறிக்கை வெளியிட வலியுறுத்துவோம். கூடுதல் நிதி ஒதுக்கீடுகள் செய்திடவும், துணைத் | தமிழகத்திலும் பட்டியலினம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் துணைத் திட்டங்களுக்கு தனிச் சட்டம் இயற்றிடவும். அனைத்துத் துறைகளிலும் முறையாக செயல்படுத்திட | சிறப்பு உட்கூறு திட்டம் மிகச் சிறப்பான முறையில் செயல்படுத்தப்படும். | இச்சட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும். புதிய அரசின் முதல் நிதி நிலை அறிக்கையிலேயே செயல்படுத்தப்படும். | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிறப்பு தனிச் சட்டம் இயற்றப்படும். (101) | திட்ட அமலாக்கத்திற்கான சட்டம் கொண்டு வரவும் பாடுபடுவோம். | முயற்சிகள் மேற்கொள்ளப்படும். | | | |
| 8 | உயர் கல்வி வாய்ப்புகள் – உதவித் தொகை வழங்கப்படவேண்டும் | பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் இதர பிறப்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித் தொகை தற்போதுள்ளதைவிடவும் இருமடங்கு உயர்த்தி வழங்கப்படும். | | | | | மத்திய அரசின் பங்களிப்பு காலதாமதமின்றி கிடைப்பது உறுதி செய்யப்படும். | |
| 9 | தனியார் துறையில் இட ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் | தமிழ்நாடு அரசு பின்பற்றி வரும் இடஒதுக்கீடு முறைப்படி B.C, M.B.C, S.C., S.T., சமுதாய மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வலியுறுத்துவோம். | | | | இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | | |
| 10 | உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் நியமனம் இட ஒதுக்கீடு முறை நடைமுறைபடுத்தப்படவேண்டும் | பி.வ, பட்டியலின மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு அளித்தும் வகையில் மத்திய அரசு உரிய சட்டம் ஒன்றை நிறைவேற்ற வலியுறுத்தும். (270) | | | உயர்நீதித் துறையில் பெண்கள் / எஸ்.சி/எஸ்.டி/ஓபிசி பிரிவினருக்கு இடஒதுக்கீடு வழங்கிடவும் வி.சி.க குரல் எழுப்பும். | | | |
| 11 | காலி பணியிடங்கள் நிரப்படவேண்டும் (IV) | தி.மு.கழக ஆட்சி அமைந்ததும் மீண்டும் காலிப் பணியிடங்கள் | | | காலி பணியிடங்களைத் தலித் சமூகத்தவரைக் கொண்டே நிரப்ப | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | கணக்கிடப்படும் நிரப்பப்படும். (275) | | | நடவடிக்கைகள் எடுக்கப்படும். | | | |
| 12 | மதம் மாறிய தலித் கிறித்துவர், இசுலாமியர் உள்ளிட்டோரு இடஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் | | தாழ்த்தப்பட்ட சமுதாய்த்தைச் சேர்ந்த மக்கள் மதம் மாறினால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு அளிக்கும் அனைத்து சலுகைகளையும் தொடர்ந்து அவர்கள் பெற்றிட அ.இ.அ.தி மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தும். (98) | | | | | |
| 13 | தலித் - பழங்குடியினர் பஞ்சாயத்துக் கிராமங்களை சமூகக் கண்ணோட்டத்துடன் அணுகவேண்டும். | | | தலித்-பழங்குடி ஊராட்சித் தலைவர்களுக்கு மாதம் 25,000/- ஊதியம் வழங்கிட வற்புறுத்துமோம். | | | தலித் & பழங்குடியின ஊராட்சித் தலைவர்கள் மீதான பாரபட்ச நடவடிக்கைகளைத் தடுக்க மாவட்ட ஆட்சியர் தலைமையில் கண்காணிப்புக் குழு உருவாக்கப்படும். | |
| 14 | தலித் & பழங்குடியினர் தொழில் தொடங்க உரிய ஆலோசனை மற்றும் உதவிகள் | | தாட்கோ மூலம் ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்ட பொருளாதார | | தாட்கோ கடன் உதவித் திட்டத்தில் வங்கிகளைத் தவிர்த்து முழுக்கடன் தொகையையும் | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மேம்பாட்டுக்கான கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். | | தாட்கோ மூலம் வழங்கவும்.<br><br>தாட்கோ கடன்களை அனுபவித்து வரும் பினாமிகள் மீது நடவடிக்கை எடுக்கவும். | | | |
| 15 | பழங்குடியிஅனருக்கு சாதிச் சான்றிதழ், உடனடியாக வழங்கப்பட வேண்டும். | சாதிச் சான்றிதழ் பெறுவதில் உள்ள தடைகள் அகற்றப்பட்டு விண்ணப்பித்த 100 நாட்களுக்குள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். | | கோட்டாட்சியர் மாதம் ஒரு நாள் சான்றிதழ் முகாம் நடத்தி, முழுமையாக அனைவருக்கும் சான்றிதழ் வழங்கிடவும் வற்புறுத்துமோம். | அனைத்துப் பழங்குடியினருக்கும் தடையின்றி தாமதமில்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படவும் விசிக பாடுபடும். | விண்ணபித்த சில நாட்களில் சாதிச் சான்றிதழ் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். | | |
| 16 | வன உரிமைச் சட்டம், சிறு-வனப் பொருட்கள் / மரம் அல்லாத வனப் பொருட்களுக்கான உரிமை. | | | அரசு தரிசு நிலங்களில் தலா 2 ஏக்கர் நிலம் இவர்களுக்கு வழங்கிட முன்னுரிமை வழங்கிட பாடுபடுவோம்.<br>வன உரிமைச் சட்டம் 2006 –ன் படி உடனடியாக சிறப்பு முகாம்களை நடத்தி 6 மாத காலத்திற்குள் நில உரிமை பட்டா வழங்கிட வேண்டும். | வன பாதுகாப்புச் சட்டம் 2006 ல் குறிப்பிட்டுள்ளபடி பழங்குடியினருக்கு நிலங்கள் வழங்கிடவும். | | | |
| | ஆணையம் | | | | | | மாநில பட்டியலின பழங்குடியினர் ஆணையம் உடனடியாக அமைக்கப்படும். | அருந்ததியர் நலவாரியம் அமைக்கப்படும் |